வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆனி திங்கள் 17-ம் நாள் (1—7—1962) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 27 | இதழ் 5

மூதூரில்

# தமிழரசின் மாபெரும் வெற்றி

## மக்களின் மகத்தான தீர்ப்பு! முகம்மதலி முடிசூடினார்

## ஆளும் கட்சி ஆட்டம் கண்டது

## கல்லெறிந்து கொள்கையை குலைக்கமுடியுமா?

மூதூரில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி 14,215 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் மேலதிகமாக 7312 வாக்குகள் பெற்றார். ஈழத் தமிழர் முன்னணி அபேட்சகர் திரு. சுந்தரலிங்கம் படுதோல்வி அடைந்து மண்கவ்வினார். தனது கட்டுப்பணத்தையும் இழந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்ட ஜனுப் எஸ். ஏ. ஹமீது ஆக 6903 வாக்குகள் மட்டும் பெற்றுள்ளார். சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. ஆர். எம். குணதிலக்கா பெற்ற வாக்குகள் 6040.

கல்லெறிந்து, காடைத்தனம் புரிந்து கட்சிக் கொள்கைகளில் ஊறிய மக்களின் கருத்தைக் குலைத்து விட முடியாது என்பதை ஆட்சியாளர்களும், சூழ்ச்சியாளர்களும் நன்கு உணர்ந்திருப்பர்.

மூதூர், அனுராதபுரம், வெலிமடை ஆகிய மூன்று தொகுதிகளிலும் 28—6—62 வியாழக்கிழமை இடைத் தேர்தல் நடைபெற்றன. காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்குகள் பதிவாகின.

நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மூதூர் தொகுதியே மக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்தது. 1960-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் இரண்டிலும் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. த. ஏகாம்பரம் அவர்கள் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அப்போது வாக்களித்த வாக்காளர் ஒவ்வொருத்தருக்கும் இரண்டு வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

திரு. ஏகாம்பரம் திடீரென அகால மரணம் அடைந்தமையினால் மூதூரின் குரல் பாராளுமன்றத்தில் சிலகாலம் ஒலிக்கவில்லை. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையினாலும் தேர்தல் நடைபெறும் காலம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

மூதூர் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரை வெற்றியீட்டச் செய்யப் பிரதம மந்திரி முதல், எல்லா மந்திரிசபை, ஆளும் கட்சி உறுப்பினர்களும் மூதூரில் முகாமிட்டுப் பிரசாரம் செய்தனர்.

தமிழரசுக் கட்சி பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும் போது சில இடங்களில் கல்லெறிந்து கயமைத்தனம் புரிந்தனர். மக்கள் உள்ளங்களில் ஊறிப்போன கொள்கைகளைக் கல்லெறிந்தும், காடைத்தனம் புரிந்தும் குலைத்துவிட முடியாது என்பது வெளிப்படையாகிவிட்டது. மூதூர் மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பு ஆளும் கட்சிக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி

திரு. சுந்தரலிங்கம், தனித்தியங்கும் ஈழத் தமிழ் நாடு கோரிக்கையை முன்வைத்து வவுனியா மக்களிடம் தோற்றவர். அங்கு கொள்கையைப் புகுத்த முடியாத திரு. சுந்தரலிங்கம் மூதூரில் வேறோர் காரணத்தை முன்விட்டுப் போட்டியிட்டு அதிலும் படுதோல்வியே கண்டுள்ளார்.

அனுராதபுரம் தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. கே. பி. ரத்நாயக்கா வெற்றியீட்டியுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட யூ.என்.பி. கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. மகாநிவுலுவெவவும், சுயேச்சை அபேட்சகர் திரு. எஸ். தலுவத்தையும் தோல்வியுற்றனர்.

வெலிமடையில் ஜாதிக விமுக்தி பெரமுன அபேட்சகரான திரு. கே. எம். பி. இராஜரத்தினா வெற்றி பெற்றார். ஒரு வழக்கில் குற்றவாளியாகக் கண்டு சில மாதங்கள் சிறைக்கூடம் சென்றபோது, தனது பாராளுமன்ற பிரதிநிதிஸ்தானத்தை திரு. இராஜரத்தினா இழந்தமையினால், வெலிமடை தொகுதி மீண்டும் ஒரு தேர்தலை எதிர்நோக்கியது. இடைத் தேர்தலில் மீண்டும் இராஜரத்தினா வெற்றி பெற்றார்.

> **சுந்தரர்**
>
> தனி ஒருவரின் இயக்கமான ஈழத் தமிழ் முன்னணியார் திரு. சி. சுந்தரலிங்கம் பெற்ற வாக்குகள்:
>
> **423**
>
> தமது கட்டுப் பணத்தையும் இழந்தார்.

### வாக்களிப்பு விபரம்:-

மூதூர்

| | |
|---|---|
| ஜனுப் எம். ஈ. எச் முகமது அலி (த. அ. க.)— | 14215. |
| ஜனுப் எஸ். ஏ. ஹமீது (ஸ்ரீ. ல. சு. க.)— | 6903. |
| திரு. ஆர்.எம். குணதிலக்கா (சுயேச்சை)— | 6040. |
| திரு. சி. சுந்தரலிங்கம் (ஈ. த. மு.) | 423. |
| அதிகப்படியான வாக்குகள்— | 7312. |

(9-ம் பக்கம் பார்க்க)

## கம்யூனிஸ்ட்-ஆளும் கட்சி உறவு நீடிக்குமா?

## மக்கள் வரவு செலவுத் திட்டம் பிரிவினையை உருவாக்கும்

கம்யூனிஸ்ட் கட்சியினர் "மக்கள் வரவு செலவுத் திட்டம்" ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இந்த வரவு செலவுத் திட்டத்தையிட்டு ஆங்காங்கே பிரசாரக் கூட்டங்களைக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திவந்தது. நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மக்கள் வரவு செலவுத் திட்டம் பற்றி "கம்யூனிஸ்டுகள் எனக்கு வரவு செலவுத் திட்டம் தயாரித்துத் தரவேண்டுமா?" என்று கிண்டல் செய்துள்ளார். இரு கட்சியினருக்கும் விரைவில் கடும் மோதல் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தாயாரித்துள்ள வரவு செலவுத் திட்டத்துக்கு மக்கள் ஆதரவு திரட்டு முகமாக நாடெங்கிலும் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர். பொதுக் கூட்டங்கள் மூலமும், சுவரொட்டிகள், பிரசுரங்கள் மூலமும் மக்கள் ஆதரவைத் திரட்ட முயற்சிகள் செய்து வருகின்றனர்.

ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு, கம்யூனிஸ்ட் கட்சி தனது ஒத்துழைப்பை நல்கிவருகிறது. ஆனால் இந்த மக்கள் வரவுசெலவுத் திட்ட சம்பந்தமாக இவ்விருகட்சிகளுக்கும் மோதல் ஏற்படக்கூடும் என்ற ஐயப்பாடு நிலவுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மக்கள் வரவு செலவு திட்டம் சம்பந்தமாகப் பிரசாரம் நடாத்தி வருகையில், நிதி மந்திரி பல இடங்களில் இம் முயற்சியைக் கிண்டல் செய்துள்ளார். "எனக்கு கம்யூனிஸ்டுகளா வரவுசெலவுத் திட்டம் தயாரித்துத் தரவேண்டும்?" என்று கேலி செய்துள்ளார்.

அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைக் கேனும் நிதி மந்திரி செவிசாய்க்கவில்லையானால் என்ன செய்வது? என்று கம்யூனிஸ்ட் கட்சி மேலிடம் கவலை கொண்டுள்ளதாக நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளன.

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து



● மூலம்

● வாதம்

● படை (ECZEMA)

● மாத விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

பொருள் வளம் சிறக்க 5:

# விவசாயிகளுக்கு பயன்தரும் வாழைச் செய்கை

## அதன் வளர்ச்சிக்காக கவனிக்க வேண்டியவை

முக்கனிகளுள் ஒன்றாக வைத்து எண்ணப்படும் வாழைப்பழத்தினைத் தரும் வாழை தமிழ் மக்களின் பழம் பொருளாகும். வாழைப்பழத்தை இறைவனுக்குப் படைக்கிறோம், பஞ்சாமிர்தத்தில் அதனைச் சேர்க்கிறோம், கலியாண வைபவ விருந்தில் அதனைப் பரிமாறுகிறோம், வாழைக்காயைக் கறியாக்குகிறோம், கல்யாண வீடுகளிலும் வாழை மரத்தை வாசலிலே கட்டுகிறோம், வாழையிலையிலே உணவை வைத்து உண்ணுகிறோம், வாழையிலையை ஆடு, மாடுகளுக்கு உணவாக்குகிறோம். இவ்வளவு பலன்களையும் தரும் வாழையின் குலைகளை விற்பதன்மூலம் நாம் ஏராளமான பணத்தை லாபமாகப் பெற முடியும்.

வாழைச் செய்கை அவ்வளவு கடினமானதல்ல. எவரும் இலகுவில் அதைச் செய்யலாம். வாழை இருவாட்டி நிலத்தில் அதிக பலனை அளிக்கும். யாழ்ப்பாணப் பகுதியில் சாதாரணமாக மார்கழி, தை மாதங்களில் வாழை மரங்களை நடுவர்.

வாழைக் குட்டிகளைக் காயப்படுத்தாமலும் அதிகம் சேதப்படுத்தாமலும் பெயர்த்தெடுத்து நிழலிலே வைக்க வேண்டும். ஒரு வாரம் சென்ற பின்னர் அவற்றை நடலாம். ஒவ்வொரு வாழைக் கிடையிலும் ஏழு அடிகள் இடைவெளி விடுதல் நல்லது. "வாழை நடுகில் ஆழ நடு" என்று கூறுவார்கள். ஆழ நடுதல் கூடிய பயன் தரும். குழிகள் சற்று அகலமாயும் இருத்தல் நலம். வாழையைக் குழியில் வைத்து மண்ணால் மூடியபின் நான்கு புறமும் நன்ருக அலவாங்கின் மூலம் உரம் கொடுக்கவேண்டும். பின்னர் வாழையின் அடியில் சுற்றிவர மண்குவித்தல் வேண்டும். அடிவாழையில் அதிகம் நீர் சென்ருல் அது அழுகிவிடுமென்பதினுலேதான் இப்படிச் செய்வார்கள்.

**'மாவிட்டபுரத்தோன்'**

சிலர் புகையிலைக் கன்றுகள் முதலியவற்றின் இடையிலும் வாழை மரங்களை நடுவர். புகையிலை வெட்டப்பட்டபின் வாழைகளுக்குப் பாத்தி கட்டி நீரிறைப்பர். சாதாரணமாக, யாழ்ப்பாணத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கொரு முறை வாழைகளுக்கு நீர் இறைப்பார்கள். வாழை மரங்களுக்கிடையில் குரக்கன் முதலியன விதைத்தால், வாழை செட்டமாக வளர்வதைக் காணலாம்.

### வளரும்போது கவனிக்க வேண்டியவை

சில நாட்களின் பின்னர் வாழைகள் குட்டி போட ஆரம்பிக்கும். ஒரு அடியில் இரண்டு அல்லது மூன்று குட்டிகளை மாத்திரம் விட்டு மிகுதியை வெட்டி அழித்து விட வேண்டும். அதிகக் குட்டிகளை வளரவிடுவதால் குலைகளின் அளவு குறையும். வாழைமரத்தில் அதிக இலை வெட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். குலைகளை வெட்டியபின், வாழை மரங்களைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வரம்புகளில் போட வேண்டும். இவை நல்ல பசளையாகும். வாழைத் தரையை வருடத்துக்கொரு முறை கொத்துதல் நல்லது. வழக்கமாக, சித்திரை, ஐப்பசி மாதங்களில் கொத்துவார்கள்.

### நோய் பட்ட வாழை

சில வாழைகளுக்கு குருக்கன் முதலிய நோய்கள் ஏற்படுவதுண்டு. நோய்வாய்ப்பட்ட வாழைகளை வெட்டி தோட்டத்திற்கு வெளியில் எரிக்க வேண்டும், அல்லது புதைக்கலாம். 'கப்பல்' வாழைகள் விரைவில் நோய் வாய்ப்படுகின்றன.

வாழைகளை நடும்பொழுது 'மொந்தன்' இனத்தை தோட்டத்தின் கரைப் பகுதிகளிலும், கதலியை நடுவிலும் நடுவது நல்லது. 'மொந்தன்' இலகுவில் முறியாது. 'கதலி' விரைவில் முறிந்துவிடும். காற்றினுல் வாழைகள் முறியாமல் ஓரளவு தடுக்கவே இந்த முறை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கதலி, மொந்தன், கப்பல், இதரை, பன்றி ஆகிய வாழையினங்களே நன்கு வளர்ந்து கூடிய பலனைத் தருகின்றன. நல்ல முறையில் பராமரிக்கப்பட்டால், வாழைத் தோட்டம் பதினைந்து அல்லது இருபது வருடங்களுக்கும் நிலைத்து நின்று நறுபயனை நல்கும். கடினமற்ற இந்த வாழைச் செய்கையால், பொருளாதாரம் விருத்தியடைவதோடு ஏழை விவசாயியின் வாழ்க்கைத் தரமும உயர முடியும்.


## ஏஜண்டுகள் தேவை

துணுக்காய் — பொத்துவில்
நெடுங்கேணிய — முள்ளியவளை
நெடுந்தீவு — பசறை
மாந்தை — தமுறுகுல

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.



## கலப்பற்ற உயர்தர அலுமினியம்

மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.



## ராணிமார்க் ஓடுகள்!




ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள் அல்லது உபயோகித்தவர்களைக் கேட்டுப்பாருங்கள்!

சேகராம் அன் சன்ஸ்
74 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# அறிவியல் துறை வளர்ச்சிக்கு இஸ்லாமியர் ஆற்றிய தொண்டு

**யூ. எல். தாவூத்**

இஸ்லாமிய பெருங்குடி மக்கள் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரிது. ஒரு காலத்தில் முஸ்லிம்கள் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கினுர்கள்; உலகிற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். உலகின் ஒரு மூலையில் பாழடைந்து கிடந்த அரேபியா தேசத்தில் தோன்றிய இஸ்லாமிய சூரியன் அகிலமெங்கும் அறிவொளி வீசியது. விஞ்ஞானத் துறையின் பல்வேறு அம்சங்களுக்கும் இஸ்லாம் வித்திட்டது.

கிரேக்கர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அறிவியல் துறையில் கண்ட வெற்றியை, இஸ்லாம் தோன்றிய மிகக் குறுகிய காலத்திற்குள் முஸ்லிம்கள் பெற்றுர்கள். ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே—இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே—முஸ்லிம் கல்வி விற்பன்னர்கள் அறிவியலின் பல்வேறு உட்பிரிவுகளின் ஆராய்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்தார்கள். இஸ்லாம் புகுந்த இடங்களிலெல்லாம் கல்வியும், கலைப் பண்பும் கதிர் வீசிற்று. முஸ்லிம்கள் தாங்கள் கைப்பற்றிய நாடுகளிலிருந்த விஞ்ஞான இயல்களையும்கலைகளையும் கற்ருர்கள்; அவை போன்று புதிய சிருஷ்டிகளைப் படைத்தார்கள். மேற்றிசை உலகம் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்தபோது இஸ்லாமிய உலகம் நாகரிகத்தின் உச்சியில் வீற்றிருந்தது.

### அறிவியல் புரட்சி

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அறிவியல் துறையில் கிரேக்கர்கள் கண்ட புரட்சியை விட வேகமாகவும், வியப்பூட்டும் விதமாகவும் இருந்தது அகிலமெங்கும் அராபியர் செய்த அறிவியல் ... ஆசிரியர் தனது 'மனித சமுதாய வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகிறுர்.

"அராபியர் இல்லையேல் இன்றைய நாகரிகமில்லை" என்று டோர்சியும்; "முற்கால விஞ்ஞானத்தையும் தற்கால விஞ்ஞானத்தையும் தொடர்பு படுத்தியவர்கள் முஸ்லிம்களே" என்று சேர் ஒலிவர் லாட்ஜ் என்ற ஐரோப்பிய விஞ்ஞானியும் எழுதுகின்றனர்.

"வாழ்வில் பேருண்மைகளைக் காண முதன் முதலில் முயன்றவர்கள் கிரேக்கர்கள். அந்த முயற்சி மீண்டும் அரபு உலகத்தினுல் தான் துவக்கப்பட்டது. நீண்ட காலம் செயலற்றுக் கிடந்த அரிஸ்டாட்டிலின் தத்துவமும், அலக்ஸாண்டிரியா நகரின் பொருட்காட்சி நிலையமும் மீண்டும் முளைவிடத் துவங்கிப் பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்கச் செய்தவர்கள் அராபிய முஸ்லிம்களே" என்று ஐரோப்பிய பேராசிரியரொருவர் முஸ்லிம்களின் அறிவுப் பணியைத் தெரிவிக்கிருர்.

### அறிவொளி ஏற்றினர்

இருள் கிடந்த ஐரோப்பாக் கண்டத்திற்கு அறிவொளி ஏந்திச் சென்ற முஸ்லிம்கள் மூலை முடுக்கெல்லாம் ஒளியேற்றி வைத்தார்கள். ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற முஸ்லிம்கள் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் பூங்காக்கள் சூழ்ந்த கலை மிளிரும் அரண்மனைகளிலே நாளும் நீராடி, கண்கவரும் ஜ்ஜைகை வேலைப்பாடுகள் நிறைந்த பட்டாடை அணிந்து, பல்வேறு உணவு வகைகளைப் புசித்து, ஒழுங்காய் பிடித்து நாகரிக வாழ்வு நடத்தினுர்கள். அப்போது மாமிசத்தையும், மீனையும் நன்கு சுத்தஞ்செய்யாது சுட்டுச் சாப்பிட்டுக் கொண்டு, இருளடைந்த வீடுகளில் அழுக்கு நிறைந்த துணிகளை அணிந்துகொண்டு வாழ்ந்த ஐரோப்பியர் முஸ்லிம்களின் உயர்ந்த நாகரிக வாழ்க்கை முறைகளை வியப்போடு விழிபிதுங்கக் கூர்ந்து நோக்கினர்.

(11-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள்

(தொடர் கட்டுரை)

தமிழ் மொழி வளர்ச்சியில் ஈழத்து முஸ்லிம் புலவர்கள் பெரும் பங்கு கொண்டுழைத்தனர். அப் புலவர்களைப் பற்றிய வரலாறுகளையும், அவர்களது சீரிய தொண்டினையும் .

ஆசிரியர்

**ஜனாப் யூ. எல். தாவூத்**

அவர்கள்

சுதந்திரனில் எழுதுகிருர்கள். முதலாவது கட்டுரை 8-7-62 வெளியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. எல். எம். அப்துல்காதர்'
கொழும்பு.

கே: மூதூர் உப தேர்தலில் திரு. சுந்தரலிங்கம் ஏன் தோல்வியடைந்தார்?

ப: வெற்றி பெற்றவரைக் காட்டிலும் குறைவான வாக்குகளைப் பெற்றதால்...

ஃ

கார்த்திகேசு சிவகாமிப்பிள்ளை,
நெடுந்தீவு.

கே: ஒரே முறையில் ஒன்பது பெண்களைக் காதலித்த ஒருவரை இரண்டே நாளில் காதலித்து அவரை என்னிடம் வரவழைத்துள்ளேன். நான் அவரைத் திருமணம் செய்யலாமா?

ப: அம்மா, பத்தாவது காதலியே! அவர் ஓர் உருகி கண்ட பூனை. கல்யாணம் செய்வதற்காகக் காதல்செய்பவரல்ல.

ஃ

வி. ஆர். பத்மா, நாவலப்பிட்டி.

கே: மனிதனுக்குப் பெண் ஆசை, மண்ணாசை, பொன்னாசை ஆகிய ஆசைகளெல்லாம் உண்டாகின்றன. அவனுக்கு மரண ஆசை ஏன் உண்டாவதில்லை?

ப: ஆசைகளை வளர்ப்பதின் மூலம் உயிர் வாழ்பவன் மனிதன்-முன்னைய மூன்று ஆசைகளும் ஆசையை மென்மேலும் வளர்த்து அவன் உயிர் வாழ உதவும். பின்னையது ஆசைக்கே முற்றுப் புள்ளி வைத்து அவனைக் குழிதோண்டிப் புதைத்துவிடும்.

ஃ

திராவிடச் செல்வம், நுணுவில்

கே: இலங்கையில் தி. மு. க. கட்சியின் எதிர்காலத்தைப் பற்றி தங்களின் அபிப்பிராயம்...?

ப: நல்ல எதிர்காலமுண்டு, இலங்கையில் தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டும் அணியில் இணைந்து நின்றால்,

ஃ

கே. சிவபுண்ணியம்,
தம்பலகாமம்.

கே: உம்மை நான் அடித்துவிட்டால் என்னை என்ன செய்வீர்?

ப: சொல்லடி என்றால் ஒன்றுக்குப் பத்து வாங்கிக் கட்டிக் கொள்வீர்.




ஈழவாணன், கொழும்பு-14.

கே: தற்கால வாலிபர்கள் கோவிலுக்குச் செல்வது ஆண்டவனின் அருளைப் பெறவா? ஆரணங்குகளின் அன்பைப் பெறவா?

ப: ஆரணங்குகளின் அன்பைப் பெறுவதற்காக ஆண்டவனின் அருளைப் பெற...

ஃ

செல்வி, சாவகச்சேரி.

கே: வாழ்க்கையிற் சில இலட்சியங்களைக் கொண்டவர்கள் துன்பந் தொடர்ந்ததும் மனதைத் தளரவிடுவதேன்?

ப: தியாக மனப்பான்மை இல்லாததே காரணம்—இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள தியாகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும். அதற்குத் துன்பங்களைத் தாங்கும் இதயம் வேண்டும். இல்லையேல் மனம் சோர்வடையும். சோர்வடைந்தால் இலட்சியம் விடைபெற்றுச் சென்றுவிடும்.

ஃ

க. குலேந்திரராசா,
வல்வெட்டித்துறை.

கே: எனது கேள்விக்குப் பதிலளியும். இல்லையேல் உமது தொழிலுக்கு உலை வைப்பேன்.

ப: இதில் கேள்வி எங்கே இருக்கிறது? நீர் பலே ஆசாமி! கேள்வியின்றியே என் பதிலைப் பெற்றுவிட்டீரே!

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: லங்கா தோட்டத் தொழிலாளர் காரியதரிசி திரு. செல்லையாவுக்கும் சமசமாஜக் கட்சிக்கும் என்ன லடாய்?

ப: சம சமாஜக் கட்சியில் ஒரு தமிழ் தலைமையையோ, முஸ்லிம் தலைமையையோ உருவாக்குவதில் கட்சியின் தற்போதைய சிங்களத் தலைமை அக்கறை காட்டுவதில்லை என திரு. செல்லையா குற்றஞ்சாட்டுகிறார். எனவே அவர் கட்சிக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு தனது சொந்தத் தலைமையின் கீழ் தோட்டத் தொழிலாளர் சங்கமொன்று உருவாக்கியுள்ளார்.

கே: நீங்கள் பயனற்ற இரவுகளைக் கழித்ததுண்டா?

ப: ஒவ்வொரு இரவும் அநேகமாகப் பயனற்றுத்தான் போய்விடுகிறது! தூங்கும் வேளையில் வேலை செய்ய முடிகிறதில்லையே!

ஃ

செல்வி பாலாம்பிகை,
வண்ணார்பண்ணை,

ப: பணம் இல்லாவிடில் இந்த உலகத்தில் வாழ முடியாதா?

ப: ஏன் முடியாது? பணம் மனிதனின் சிருஷ்டியே தவிர மனிதன் பணத்தின் சிருஷ்டியன்று, பண்டமாற்று வசதிக்காக மனிதனாலே உற்பத்தி செய்யப்பட்டது தானே பணம்!

கே: சிரிக்கும் போது சிரிப்பது எது?

ப: உத்தமனுக்கு உள்ளம்—வஞ்சகனுக்கு உதடு.

ஃ

கே. வி. எஸ். மணி,
வசாவிளான்.

கே: "ஏகபோக" சிங்களச் சட்டத்தை அமுல் நடத்தும் இலங்கை சிங்கள அரசாங்கம் சிங்கள இலக்கங்களைப் பாவியாது ஆங்கில இலக்கங்களைப் பாவிக்கின்றனர். சிங்களத்தில் இலக்கங்கள் இல்லையா?

ப: சிங்களத்தில் இலக்கங்கள் உண்டு. அரைகுறைச் சிங்களம் கற்றுள்ள இச் சிங்கள மந்திரிகளுக்குச் சிங்கள இலக்கங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஃ

ஆர். எஸ். கலாநேசன்,
வெவத்தைபோப்பு

கே: எனது வீட்டுக்கு முன் ஒரு ரோஜா மலர் இருக்கின்றது. அதற்குப் பூரண உரிமையாளர் மூவர். அம்மலரோ அவர்களைக் கண்டால் முறைக்கின்றது. என்னைக் கண்டால் சிரிக்கின்றது. அந்த மலரை நான் முகரலாமா?

ப: உரிமையாளர் மூக்கை உடைத்துவிடுவர், ஜாக்கிரதை!

ஃ

என் ராஜகோபால், கொழும்பு-1

கே: இன்று சில நாடுகளிற் புறுக்கள் மூலமாகக் கடிதங்களை அனுப்புகிறார்கள் என்று புத்தகங்களின் வாயிலாக அறிந்தேன். உண்மையா குயுக்தியாரே?

ப: உண்மைதான், இலங்கை "ஒப்ஸர்வர்" பத்திரிகை ஆரம்பகாலத்தில் செய்திகளைக்கொண்டுவரப்புறுக்களையும் உபயோகித்தது. ஒப்ஸர்வர் பத்திரிகையின் காலிநிருபர் கொழும்பிலுள்ள பத்திரிகாலயத்துக்கு காலியிலிருந்து செய்திகளை உடனுக்குடன் புறுக்கள் மூலமாக அனுப்பி வைத்தாராம்.

ஃ

எப். ஆர். என். ஏ. ஹுசேன்.
காலி.

கே: குயுக்தியாரே, இன்றுடன் உங்களின் சரியான வயதென்ன?

ப: நேற்றிருந்த வயதை விடச் சரியாக ஒருநாள் அதிகம்.

ஃ

இ. பேரின்பநாயகம்,
களுவாஞ்சிக்குடி.

கே: மூதூர் இடைத் தேர்தலில் மண் கவ்விய சுந்தரர் இனி என்ன செய்வார்?

ப: மீண்டும் வேதாளம் முருக்கை மரம் ஏறிக்கொள்ளும்—அடுத்த தேர்தல்வரை அரசியல் அந்தகாரத்தில் அஞ்ஞாத வாசம் செய்வார்.

ஃ

வெ. உங்கு. அம்பலமணி.

கே: திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் மூளையை எதற்கு ஒப்பிடலாம்?

ப: பேயின் பட்டறைக்கு!

ஃ

க. அருட்பிரகாசம்,
இரத்மலானை.

கே: சுதந்திரனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் நமக்கிழைத்துள்ள நிஷ்டூரங்களைப் பிறமொழி பேசுபவர்கள் அறிய முடியுமல்லவா?

ப. கொழும்பில் ஒரு செய்தி ஸ்தாபனம் சுதந்திரனில் வெளிவரும் முக்கிய கட்டுரைகளையும் செய்திகளையும், தலையங்கத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கொழும்பிலுள்ள வெளி நாட்டு தூதராலயங்களுக்கு வாராவாரம் அனுப்பி வைக்கிறது.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

## இப்படியும் சொன்னார்கள்!

ஈயேச்சை அபேட்சகர், திரு. ஆர். எம். குணத்திலக்காவுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழரசுக் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்காகும்—மூதூரில் ரத்தோட்ட எம். பி. திரு. வி. மூனாவிரா.

காலஞ் சென்ற எனது கணவர்ன் கொள்கைகள் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றியது நானே—அனுராதபுரத்தில் ஸ்ரீமாவோ.

கத்தோலிக்கருக்கு ரோமாபுரி போல்தான் புத்தர்களுக்கு அனுராதபுரம். புனித நகரிலிருக்கும் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தை அரசாங்கம் ஏன் இன்னும் அப்புறப் படுத்தவில்லை?—அனுராதபுரத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவி ஏற்ற இரண்டு வருட காலத்திற்குள் இந்நாட்டில் வாழும் சகல சாதியினருக்கும் பாகுபாடற்ற முறையில் சேவை செய்திருக்கின்றது.—மூதூரில் தபால் மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே.

பிரிட்டிஷாரின் ஆட்சி காலத்தில் தமிழ் மொழியிலே கருமமாற்ற முடியாதிருந்த நாம் இன்று தாராளமாகத் தமிழைப் பிரயோகிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது—மூதூரில் எம். பி. ஜுப் எ. எல். எ. மஜீத்.

தகுந்த சிங்கள அபேட்சகர் கிடைக்காத் தன்மையே முஸ்லிம் ஒருவரை [illegible] லிஸ்லா

# வடக்கிலே பொலிஸ் தாக்குதல்

ஃ

## விசாரணை நடாத்த சமாசம் கோரிக்கை

வட பகுதியில் சமீபகாலமாக நடைபெற்று வரும் பொலிஸ் தாக்குதல்கள் பற்றிப் பகிரங்க விசாரணைகளை நடத்துமாறும், ஏழை மக்களை இத்தகைய துன்புறுத்தல்களின்றும் பாதுகாக்குமாறும் பிரதம மந்திரியையும், பொலிஸ் பகுதியதிபரையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிற்று.

சமாசத் தலைவர் அரசமாசன் முதலியார் திரு. சி. தியாகராசா இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் பொலிசாரால் தாக்கப்பட்ட சம்பவம் பற்றியும், பருத்தித்துறையில் சிறுபான்மைத் தமிழரொருவர் தாக்கப்பட்டமை பற்றியும் சுட்டிக் காட்டிப் பேசிய திரு. ச. இராசையா இத்தகைய செயல்களால் பொது மக்களிடையே மிகுந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளதென்றும் இத்தகைய நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டுவது சனசமூக நிலையங்களின் சேவைகளிலொன்றாக விளங்க வேண்டுமென்றும் கூறினார்.

சமாச விழா பற்றி இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. வழமைபோல் இவ்வாண்டு ஐப்பசி மாத இறுதியில் சமாச விழாவினை நடத்துவதென்றும், அதற்கு முன்பாகக் காரியாதிகாரிகள் பிரிவு தோறும் உப விழாக்களை நடத்தி முடிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க விழாச் சபையொன்றும் நிறுவப்பட்டது. வெகு விரைவில் தேசிய விளையாட்டு விழா ஒன்றை நடத்துவதென்றும், தாச்சிச் சிற்றுப் போட்டி, படகோட்டப் போட்டி, நீச்சல் போட்டி பொன்பனையொன்றை இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஒழுங்குகளைக் கவனிக்க உப குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் நன்றி கூறினர்.

### அஞ்சல் எழுது வினைஞர் சங்கத் தீர்மானம்

சனிக்கிழமை (30-6-62) கூடும் அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழி தெரிந்தோரை மாத்திரம் அனுப்புவிக்கின்ற அரசாங்கத்தின் பாரபட்ச முடிவை உடனடியாக அது மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தைச் சங்கம் சமர்ப்பிக்கவுள்ளது. அம்மாகாணங்களில் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு சில வசதிகள் தாம் உள்ளன என்றும், அங்கு அனுப்பப்படும் சிங்களம் தெரிந்தோருக்கு விசேஷ சலுகைகள் அளிக்கப்படுவதாகவும் சங்கம் தனது தீர்மானத்தில் குறிப்பிடுகிறது.

### புத்தகம்

சாத்திரி—ஓர் அரிய சோதிட நூல். உங்களினதும் உங்கள் குடும்பத்தினதும் சாதகங்களின் பலாபலன்களை இலேசாயும் இரகசியமாயும் அறிய உதவும். இதில் கைரேகைச் சாத்திரமும் இருது ஜனன சாத்திரமும் அடங்கியுள்ளன. உடனே எழுதவும்.
வி. பி. பி. மூலம் அனுப்பி வைக்கலாம். விலை (தபாற் செலவு உட்பட) ரூபா 3-65. செ. சோதிநாதன், த. பெ. 147, கொழும்பு.
யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமிழ்ப் புத்தகக் கடைகளில் வாங்கலாம்.


# விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## என். வயித்திலிங்கமும் சகோதரர்களும் வரை.

33, 3-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.

139, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழுதை தேய்ந்த கதை

10,000 தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களச் சோதனையில் சித்தி பெற்றதாக கனம் அமைச்சர் சி. பி. டி. சில்வா தேர்தல் கூட்டமொன்றில் பேசியதாக தினச் செய்தித்தாள்களிலே செய்தி வந்தது. இத்தனை தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் சிங்களச் சோதனையில் சித்திபெற்றுவிட்டார்களா? என மூக்கின் மேல் கையை வைத்துக்கொண்டிருந்த வேளையில மலைநாட்டிலிருந்து வந்த அப்பாக்குட்டி அம்மான் ஒரு ருசிகரமான தகவலைத் தந்தார். மலைநாட்டிலுள்ள ஒரு கச்சேரியில் வேலை பார்க்கும் ஒரு அரசாங்க ஊழியர் சோதனையின் ஒரு பகுதிக்குச் செல்லாமலே சித்தி எய்திய விந்தையிலும் விந்தை; இந்த நாட்டு அரசாங்கம் நடத்திய சிங்களச் சோதனையிலே நடந்த அதி அற்புத நிகழ்ச்சி. தமிழ் அரசாங்க ஊழியர்களிடையே அதிகமாகப் பேசப்படும் சிங்களச் சோதனை பற்றி அப்பாக்குட்டி அம்மான் சேகரித்த செய்தி வருமாறு:—

18,000 அரசாங்க ஊழியர்கள் சிங்களச் சோதனைக்குத் தோற்றியதாக ஒரு தமிழ்த் தினசரியிலே பிரமாதமாக விளம்பரப் படுத்தப்பட்டது. இந்த 'கோயபல்ஸ்' பிரசாரத்தை முழு முட்டாள்தனமாக மறுக்கும் வகையில் நிதி அமைச்சு ஒரு செய்தி தெரிவித்தது. நிதி அமைச்சின் விபரப்படி சோதனை விண்ணப்பதாரர் தொகை 13,000. 5000 பேரை நிதி அமைச்சர் கோட்டை விட்டுவிட்டார். கற்பனையின் உச்சிப்படியை எட்டிப்பிடிக்க தமிழ் தினசரியா அல்லது நிதி அமைச்சரா, உண்மையான தகவலைத் தந்தது! என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் வேளையில், அமைச்சர் சி. பி. டி. சில்வா 'உங்களுக்குச் சளைத்தவனா நான்?'' என்னும் வகையில் 10,000 தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களச் சோதனையில் சித்தி எய்தியுள்ளதாக ஒரு அசல் புழுகு மூட்டையை அவிழ்த்துவிட்டிருக்கிறார்.

### அவதார மூர்த்திகள்

அப்பாக்குட்டி அம்மானின் தகவல்படி சோதனையில் சித்தி எய்தியவர்களில் இரு வகையினர். சிலர் சோதனைக்குச் செல்லாமலே சித்தி எய்தியவர்கள். (உதாரணம்: மலைநாட்டுக் கச்சேரி ஊழியர்.) சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட சோதனை எடுத்தவர்கள். அதாவது எட்டாம், வகுப்பு, ஐந்தாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு ஆகிய எல்லாச் சோதனையில் அல்லது 3-ம், 5-ம் வகுப்புச் சோதனைகளையும் ஒன்று தவறினாலும், மற்றொன்று என்று எடுத்தவர்கள். இவ்வாறு பல சோதனைக்குத் தோற்றியே ஒருவரே ஒவ்வொரு சோதனைக்கும் ஒரு நபராகக் கருதப்பட்டு பல அவதாரங்கள் எடுத்த கிருஷ்ண பரமாத்மாக்களாவர்.

சிங்களச் சோதனையிலே சித்தி எய்தியவர்கள் பெரும்பாலர் சிங்களவரே. சிறு தொகையினரான தமிழ் ஊழியர்களிலே பல அவதாரம் எடுத்துள்ள கிருஷ்ண பரமாத்மாக்கள், சோதனைக்குத்தோன்றுமலே சித்தி எய்தியவர்கள், ஆகியோரை நீக்கிப் பார்த்தால் சுமார் 1800 பேரே தமிழர் எனத் தெரியவருகிறது. இவர்களும் அரசாங்கத்திடம் ஏதும் விசேட சலுகை எதிர்பார்ப்பவர்களாகவே தெரிகிறது. இடமாற்றம் நாடு

# சந்தித்து வந்தவை

**காலகண்டன்**

பவர்கள், இருந்த இடத்திலேயே இருக்க விரும்புபவர்கள், இன்னும் "வரும்படி" எதிர்பார்ப்பவர்கள், "முற்போக்குவாதிகள்," இத்தியாதி இத்தியாதி சேர்ந்து உருவாகிய தொகையே இந்த 1800-ம் என்று கூறி முடித்தார் அப்பாக்குட்டி அம்மான். "என்ன அம்மான 18,000 த்தில் தொடங்கி தமிழ் ஊழியர் 1800-ல் வந்துவிட்ட கதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவல்லோ இருக்கிறது" என்றேன்.

### புதிய சங்கடம்

"அந்த 1800 தமிழர்களும் இப்போது தலையில் கை வைத்து அழவேண்டியநிலை வந்துவிட்டது" என்றார் அப்பாக்குட்டி அம்மான். "எப்

> **காரணம் என்னவோ?**
>
> கடந்த சத்தியாக்கிரகத்தின் போது யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமை பார்த்த திரு. நிசங்கா விஜயரத்ன பழுத்த பௌத்த சிங்கள வெறி கொண்டவர். இவர் திடீரென வேறு பதவிக்கு மாற்றப்பட்டுள்ளார். இதற்கான அந்தரங்கக் காரணம் ஒன்றிருக்கிறது.
>
> அடுத்த வாரம் அம்மான் விபரம் கூறுவார்.

படி?" என்று விசாரித்ததற்கு அப்பாக்குட்டி அம்மான் சொன்ன பதில் அந்த 1800 தமிழ் ஊழியர்களுக்காக நானே கூட ஒரு கண்ணீர் வடிக்க வேண்டும் போலிருந்தது. எந்த ஒரு சிங்களச் சோதனையிலும் சித்தி பெறுபவர்கள் அரசாங்க மொழியில் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள் என்று கருதப்படுவதால் அவர்கள் தற்சமயம் அமுலிலுள்ள மொழிப் பிரச்சினை சம்பந்தமான இளைப்பாறும் சட்டங்களின் படி இளைப்பாற முடியாது போகும் நிலை உருவாகிவிட்டதாம். இது வேண்டுமென்றே அரசாங்கம் செய்யும் ஒரு சூழ்ச்சி. ஓய்வுப் பணம் கொடுப்பதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள அரசாங்கம் கையாளும் தந்திரம், இல்லாவிட்டால் சோதனைக்கு செல்லாதவர்கள்கூட சித்திபெற முடியுமா? என்று கேட்டார் அப்பாக்குட்டி அம்மான்!

### மந்திரியின் மருமகன்?

கடந்த வாரம் அம்மான் திடீரென அநுராதபுரம் புறப்பட்டு விட்டார். நேற்று மீண்டும் என் முன்னே தோன்றி தனது சரக்கு மூட்டையை அவிழ்த்துக் கொட்டினார்.

அப்பாக்குட்டி அம்மான் கொழும்பிலிருந்து ஆகாய விமானத்தில் அந்தரப் பயணம் செய்தாராம். அநுராதபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விமானத்தளத்தில் விமானம் இறங்கியதாம். விமான நிலைய அதிகாரியாகக் கடமை பார்ப்பவரை, அம்மான் இதற்கு முன்னர் எங்கேயோ பார்த்தமாதிரி இருந்ததாம். அருகில் சென்று உற்று நோக்கியதும் தான் உண்மை தெரிந்த [illegible] தி மைத்திரிபால சேனநாயக்காவின் மருமகன் தானும். "எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று" என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டார் அம்மான்.

### அச்சுக் கூடத்தில் இருக்கு......

அநுராதபுரத்தில் தனது மருமகன் வீட்டுக்குச்சென்ற அப்பாக்குட்டி அம்மான், அங்கு ஒரு மூலையில் கிடந்த ஓர் தமிழ்த் துண்டுப் பிரசுரத்தைப் பார்த்தாராம். சுதந்திரக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடும் ஒரு அபேட்சகர் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் அது.

"எயார் சிலோன்" விமானத்தில் சென்ற அலுப்பாலும் களைப்பாலும் அம்மான் ஒரு "ஈசிச் செயாரில்" படுத்துக் கண்ணயர்ந்தாராம். வாயிலில் அரவம் கேட்டு விழித்துப் பார்த்தபோது சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. ரத்னாயக்கா நின்றிருந்தார். மருமகனை அழைத்து, அபேட்சகரை உபசரிக்கும் படி அம்மான் கூறிவிட்டு, சம்பாஷணையைக் கவனித்தாராம்

ரத்னாயக்கா:- உங்களைப் பார்க்க வந்தது.

அம்மானின் மருமகன்:- வாங்க ......வாங்க.........

ரத்:- ஐயா......நம்பளுக்குத் தானே போடுவாரு...

அம். மரு:- நாங்க எதோதியாயத்தைச் செய்வோம்.

ரத்:- ஊருக்கு எல்லாம் நன்மை செய்யுறுங் நம்ம கட்சி......... நீங்களுக்கு தெரிஞ்சதானே!

அம். மரு:- ஆமாம். ஆமாம் தெரிஞ்சது தான்? ஆமாம் நீங்க ஏன் தமிழிலே நோட்டீஸ் வெளியிடலில்லே?

ரத்:- ஓ...ஓவ்...வெளியிட... அச்சுக் கூடத்தில் சொல்லிவச்சிரிக்கான் வெளியிடுவான். வெளியிடுவான்........ அப்போ நானு வர்ரேன் ஐயா.........

திரு. ரத்நாயக்காவுடன் இன்னுமொரு முகமும் தென்பட்டது. அம்முகம் நமது அம்மானை முறைத்துமுறைத்துப் பார்த்ததாம். ரத்னாயக்கா வெளியேற இந்த உருவம் அம்மானின் மருமகனை அணுகி, ஆளும் கட்சியை ஆதரிக்கும்படி கேட்டது. அம்மானின் மருமகனுக்குக் கோபம் பொத்துக்கொண்டுவந்தது. ஆனால் அம்மான் சாந்தப்படுத்தினாராம்.

### யார் அவர்?

அவர் ஒரு தமிழர். 1958ம் ஆண்டு கலவரத்தின்போது பொலனறுவையில் வைத்து இனவெறியர்களின் பேயாட்டத்துக்கு தனது உடமையை அடகு வைத்தவர்? —குற்றுயிராக்கப்பட்டவர். இன்று உள்ளத்தையும் அடகுவைத்து இனவெறி ஆட்சியாளரின் பாதம் தாங்க முன்வந்துள்ளார்.

இதற்கான காரணமும் தெரியாமலில்லை அம்மானுக்கு; அந்த மகானின் இருக்குமாருக்கு மந்திரி மைத்திரிபாலா எதோ ஒரு தொழில் தேடிக் கொடுத்துள்ளாராம. அது தான் அவர் ஆளும் கட்சிக்கு வோட்டுப் பிச்சை கேட்க வந்த காரணம்.

### வென்றாலும் தோற்றாலும் நிலை ஒன்றுதான்

திரு. ரத்னாயக்கா ஆளும் கட்சியின் அபேட்சகராக அநுராதபுரத்தில் போட்டியிடுகிறாரல்லவா! அவர் கூறும் சில காரணங்களில் ஒன்று சுவையானது:

வாக்காளர்களை அவர் அணுகி 'நீங்கள் எனக்கு வாக்களித்து வெற்றியீட்டித் தந்தால் நான் உங்கள் பிரதிநிதியாகச் சேவை புரிவேன். நீங்கள் எனக்கு வாக்களிக்காமல் என்னை ஒதுக்கினாலும், நான் உங்களுக்காகச் சேவை செய்த திருவேன்'' என்று கூறுகிறார். அவர் எம். பி. யாகாமல எப்படிச் சேவை செய்யவுள்ளார் என்பதை அறிய விரும்புகின்றீர்களா? அது "சிம்பிள்" விஷயம் திரு. ரத்னயக்காவுக்கு யாரோ ஒரு மந்திரி தனது அந்தரங்க காரியதரிசியாக்குவதாக வாக்களித்துள்ளாராம். அதுவுமில்லாவிட்டால்......ஆளும் கட்சியின் ஆள் அல்லவா?


### யார் இந்த சிறீதரன்?

கடந்தவாரம் "பத்திரிகைகளைப் புரட்டிப்பாரும்" என்று சுதந்திரனில் ஒரு புதினம் அம்பலமாகியது அல்லவா? அந்தப் புதினத்தில் இழுபட்ட பிரகஸ்பதி தான் மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த சிறீதரன் என்பவர்.

அவுஸ்திரேலியாவின் காடுகளில் பூர்வீகக் குடியினர் வாழுகின்றனர். அவர்களிடம் "பூமறுங்" என்ற ஏவுகணை ஒன்றுள்ளதாம். எதிரியை நோக்கி அந்த ஆயுதத்தை வீசினால், எதிரியை வீழ்த்திவிட்டு மீண்டும் எவியவரின் கைக்கே வந்துவிடுமாம்.

மானிப்பாய் வடக்கு சிறீதரனுக்கு ஒரு அஞ்சல் அட்

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் சிறந்தபேச்சாளரான செல்வி பத்மா வேலுப்பிள்ளைக்கும், தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. ஜே. எல். டெல்விஸ் அவர்களுக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றது. திருமணவைபவத்தில் கலந்துகொண்ட திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் அவர்களும், அவரது பாரியாரும், பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. கே. துரைரத்தினம், திரு. தருமலிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகிறார்கள்.


பாரம்பரிய மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது

**மெவிக்கார் பாம்**

இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுய நிலையை அடையச் செய்யும்.

ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.

உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்

**விலை போத்தல் ஒன்று ரூ. 1-25 சதம்**

பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

**கவி கெமிகல்ஸ்,**

19, செட்டியார் தெரு, கொழும்பு-11.



ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த.

கொழும்பு-12.

தந்தி ; சுதந்திரன் போன் : [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘நாடற்றவர்’ பிரச்சினை தீர வழி

## கவிதைப் பூங்கா

### வார்த்தை சொல் வருத்தந் தீரும்!

—எருவில் மூர்த்தி—

வண்ணமா மலர்கள் பூத்து
வளமுடன் மிளிருங் காவில்
என்னிலா எழில்கள் பார்த்தும்
என்னுளம் நிறைய வில்லை

நிலவான் தனிலே கோடி
நித்திலச் சுடரோ டாடும
கோலமா மதியாள் நெஞ்சைக்
குளிர்ந்திடச் செய்ய வில்லை

ஆழ்கடல் அலைக ளூந்த
ஆங்கெனை அணைத்த தென்றல்
பாழ் மனந் தன்னில் வேண்டும்
பசுமையை விதைக்க வில்லை

கூவிடும் குயிலின் கீதம்,
குழலிசை, யாழின் நாதம்
மேவிடும் இனிமை கூட
மேன்மையை உணர்த்த வில்லை

கன்னலாய்ச் சுவைக்கும் நல்ல
கவிதைகள் அகத்தே நின்று
பண்ணினை இசைத்தும் என்ன?
பறந்துமா போக்க வில்லை

தூயமென் மலர்கள் தூவித்
துதித்துமென்? ஈசன் பாதம்
தியுமென் மனத்தே நாடுந்
தெளிவினைத் தரவு மில்லை

நோயினை விதைத்தாய் நோக்கால்;
நுண்ணிடை அணங்கே, கோவை
வாயினைத் திறந்தோர் காதல்
வார்த்தைசொல் வருத்தந் தீரும்!

—◦—◦—

### அந்தி மயக்கிடும் நேரத்திலே.......!

—மணி இழார்—

அந்தி மயக்கிடும் நேரத்திலே—நிறை
அழகைச் சொரியும் பெருங்கடல் ஓரத்திலே
சொந்த உலகை மறந்திடலாம்—உள்ளம்
சொக்கிடப் பேரின்ப வானிற் பறந்திடலாம்

பகலோடு இரவு உறவாடும்—அங்கு
பரந்த நிலத்தோடு கருங்கடல் போராடும்;
அகல் வானம் அக்கடலைக் கொஞ்சும்—எங்கும்
அலைகள் கொணரும் நுரைக்கணம் துஞ்சும்

நெருப்பினால் ஆக்கிய பந்தை—மிக
நிகர்த்தே கதிரோனும் காட்டுவான் விந்தை;
விரும்பி விழுவான் கடலிலே—நிறம்
விதம் விதமாய்த் தோன்றிடும் வானத் துடலிலே

வானப் பெண் காட்டிடும் ஓவியங்கள்—எந்த
வார்த்தையும் தீட்ட முடியாத காவியங்கள்;
கானமும் ஓவியத்தை ஏத்திடும்—அங்கே
கண்ணுக்கு அடங்காத பேரழகு பூத்திடும்

கடலிலே மீன்கள் குதிக்கும்—மேலே
ககனத்தில் மீனினம் மெல்ல உதிக்கும்;
படகிலே மீனவர் செல்வர்—ஓங்கிப்
பாய்ந்து வரும் பேர் அலைகளை வெல்வர்

அலைகளும் ஓயாது தோற்றும்—மக்கள்
அகத்தெழும் எண்ணத் தொகையினைச் சாற்றும்;
கலைஞர் புகழும்இம் மாட்சி—என்றும்
கண்ணும் கருத்தும் மகிழ்வுறும் காட்சி

## சம்பந்தப்பட்டவர் அனைவரும் சேர்ந்தே தீர்வு காண வேண்டும்

### மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் தரும் சில யோசனைகள்

**நாடற்றவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குப் பயன்படும் சில யோசனைகளை மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

மலைநாட்டு நல்வாழ்வுச் சங்கம் தன் அறிக்கையிற் கூறுவதாவது:—

1948-இல் நாம் பிரஜாவுரிமைச் சட்டத்தை நிறைவேற்ற முன்னர், இந்நாட்டில் குடியிருந்த ஒவ்வொரு பிரஜையும் சட்டப்படி பிரிட்டிஷ் பிரஜையே, (1948)18ம் இலக்க இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் கீழ், இலங்கைப் பிரஜைகள் யார் என்பது நிர்ணயிக்கப்பட்டது. பிரஜாவுரிமைச் சட்டம் (1948) இலக்கம் 3 ன் கீழ், இந்திய, பாகிஸ்தானிய மக்கள் பிரஜாவுரிமை பெறுவதற்கான விசேஷ விதிகள் வகுக்கப்பட்டன.

இந்தச் சட்டங்களின் மூலம் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் சுதந்திரத்துக்கு முன்னர் இருந்த நிலையிலேயே—பிரிட்டிஷ் பிரஜைகளாகவே— இருந்தனர். அவர்கள் விரும்பினால் இந்திய அல்லது பாகிஸ்தானிய பிரஜைகளாகும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஆட்சியாளரின் இந்தச் சந்தர்ப்பத்தை பலர் பயன்படுத்திக் கொண்டனர்.

மிஞ்சியிருந்த பிரிட்டிஷ் பிரஜைகள் அனைவரும், ஆட்சியாளரின் வார்த்தை ஜாலத்தால், “நாடற்றவர்கள்” என்று நாமம் சூட்டப்பட்டனர். இவர்கள் எமது நாட்டு மண்ணிலேயே இருப்பதானும், ஒவ்வொரு வருடமும் இவர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போவதாலும், இவர்களுடைய பிரச்சினை இந்நாட்டின் பெரிய பிரச்சினை ஒன்றாகி விட்டது. நிலைமை குழப்பமாகவும், கஷ்டமாகவும் இருக்கிறது.

இந்தப் பிரச்சினை எங்களுக்குத் தோன்றுமளவுக்கு அவசரமான பிரச்சினையாக இந்திய அரசாங்கத்துக்குத் தோன்றவில்லை. அப்படியிருந்தும், இந்திய அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்து, பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று எமது அரசாங்கம் நம்புகிறது.

எங்களுடைய பிரச்சினைக்கு முடிவுகாண அந்நிய நாடொன்றின் மீது முற்றிலும் தங்கியிருப்பது எங்களுடைய அரசியல் திறமைக்கு ஒரு பாராட்டாக முடியாது. அதைத் தவிர, இப்பிரச்சினையின் விவாதத்தில் கலந்துகொள்ளும் உரிமை இந்திய அரசாங்கத்துக்கு மட்டும் இருக்கவில்லை.

இப்பிரச்சினையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் நான்கு பிரிவினராவர். இலங்கை அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கம், இந்திய பாகிஸ்தான் அரசாங்கங்கள்— இவற்றுடன் முக்கியமாக ‘நாடற்றவர்கள்’ எனப்படும் மக்களும் சேர்ந்தே இந்நான்கு பிரிவினராவர்.

இந்த நான்கு பிரிவினரும் [illegible] சேர்ந்து தீர்ப்பதென முடிவு [illegible]

படி அவசர உடன்படிக்கைகள் மூலமும், அங்கொன்று இங்கொன்றுனை துண்டுச் சட்டங்கள் மூலமும் பிரச்சினைக்கு முடிவான தீர்வு காண முடியாது. இப் பிரச்சினையோடு அவர்களின் விதியும் பின்னிப் பிணையப்பட்டிருக்கும் ‘நாடற்றவர்கள்’ என்ற அந்த மக்களின் சம்மதமில்லாமல் எந்த முடிவையும் திணிக்க முடியாது. பிரச்சினையைத் தீர்க்க இறுதி நடவடிக்கை மேற் கொள்ள முன்பு, நாடற்றவர்களின் பிரதிநிதிகளையும் கலந்தாலோசிக்கும் படி அரசாங்கத்தை நாம் வற்புறுத்த விரும்புகிறோம்.

எந்த விதத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பதை சோல்பரி கொமிஷனர் பல வருடங்களுக்கு முன்னரே பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டிருப்பதை நாம் நினைவு படுத்த விரும்புகிறோம்:

‘1939 ஆம் ஆண்டிலேயே இந்திய அரசாங்கம் இந்தியர் இலங்கைக்குச் சென்று குடியேறுவதற்கு தடை விதித்த படியினால், இலங்கையில் இப்போதுள்ள இந்தியத் தொழிலாளிகளில் ஒரு சிலரே ஐந்து வருடங்களுக்குக் குறைந்த கால அளவுக்கு இங்கு குடியேறியிருப்பவர்களாக இருக்க முடியும். அதிகமானவர்கள் இங்கேயே பிறந்துள்ளனர். புதிய அரசியல் சட்டத்தின் கீழ், எங்களது சிபார்சு ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில், புதிதாக வருபவரைக் கட்டுப் படுத்துவது இலங்கை அரசாங்கத்துக்கு உரிய அதிகாரத்துள்ளே அடங்குவதொன்றாகும்.

ஆகவே, ஒரே நாட்டின் பிரிக்க முடியாத பகுதியாக இந்திய சமூகத்தினரைத் தம்மோடு இணைத்து ஒரே தேசிய இனத்தின் ஓர் அம்சமாக்க இலங்கை அரசாங்கத்துக்கு—நாம் நம்புவது போல் அதற்கு ஏற்கனவே உள்ள விருப்பத்துடன்— தகுதியும் இதன் மூலம் கிடைக்கின்றது.’

பிரச்சினையைத் தீர்ப்பதை விட்டு விட்டு, அதை நகர்த்தி விட எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்பாராத முடிவுகளைக் கொண்டுவர

(9-ம் பக்கம் பார்க்க)


## வாழ்க்கையின் சின்னம்! வாழ்வின் புத்துயிர்!!

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம் மூல வியாதியை புய, மலச் சிக்கலையும் ஒரே வேளையில் போக்கும் உயர்தர மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Ayur. Dr. T. H. மதுரநாயகம், கதிர்காமம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியமும் செய்து, பலவித தயாரிப்பு மருந்துகளும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கைகண்டது.



‘மூலம்’ எல்லா சனங்களுக்கும் இருப்பினும் அதனை மூல வியாதி என்று சொல்ல முடியாது. ஆகார வேற்றுமையினாலும், செய்கையினாலும் மூலம் சரகோபித்து வியாதியாக மாறுகின்றது. ரிஷி லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் 9 வகையான மூல ரோகங்களும் அவற்றால் ஏற்படும் இதர உபாதைகளும் பூரணமாகத் தீரும்.

இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

30 நாள் மருந்து விலை ரூ 5-75
15 நாள் மருந்து விலை ரூ. 3-00
தபாற் செலவு -/95.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
**T. D. மதுரநாயகம் & கோ.,**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
விபரமடங்கிய கெட்லாக் இனமாக அனுப்பப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி பீடமே! சமஷ்டி அளித்து சமரசம் காண்பாயா?

# சிங்களம் படித்துச் சிறப்புறும்படி கூறுவதின் நியாயம் என்ன?

தனக்குரியதைத் தமிழன் கேட்பது வகுப்புவாதம்—அவனது உரிமையைப் பறிப்பது—தேசாபிமானம்—தேச நலன்!

தமிழனை வாழவிடு என்பவன் வகுப்பு வாதி—தமிழனைச் சுட்டு வீழ்த்து என்பவன்—சிங்கள வீரயா!

தமிழ் வாழ்க என்பது இன வெறிக்கோஷம்— வீழ்க தமிழ் என்பது தேசாபிமானம்!

கிழக்கு வடக்கு மாகாணங்கள், நீர்ப்பாசனத் திட்டம், தொழில்விருத்தித் திட்டம், கல்வி அபிவிருத்தித் திட்டம் எதுவுமின்றி வாடுகிறது— சிங்களவர் வாழும் பகுதிகள் இவற்றால் பெருகி நிறைகிறது.

ஒருவன் எத்தனை திறமைசாலியாயிருந்தாலும் தமிழ்த்தாய் வயிற்றிலே பிறந்த குற்றம் புரிந்திருந்தால் அவன் தனது பதவியிலிருந்து மேல் நோக்கி நகரவும் முடியாது— அவனே சிங்களவனாயிருந்தால், முழு மூடனாயிருந்தாலும் உயர் பதவி வா வா என்று அழைக்கும்.

தமிழ் அதிகாரி இழைக்கும் சிறு தவறும் பூதக்கண்ணாடி மூலம் பெரிதாக்கிக் காட்டப்படும்— சிங்களவனாயிருந்தால் காற்றோடு பறக்க விடப்படும்.

அந்நிய நாடுகள் உவந்தளிக்கும் உபகாரச் சம்பளப் படிப்பாயினும், அதற்குத் தகுதியுள்ள சிங்களவனில்லாவிடில் நிராகரிக்கப்படும்—ஆயிரம் தகுதியுள்ள தமிழனிருந்தாலும் தட்டிக்கழிக்கப் படுவான்.

அன்றாட வாழ்வின் எந்தப் பகுதியிலும் தமிழன் தாழ்த்தப் படுகிறான், சிங்களவன் சீராட்டப்படுகிறான், சிறப்புறுகிறான்.

தமிழன் வந்தேறுகுடி—வாழவேண்டியது நாமே— இதுவே சிங்களவரது தலைமைப் பீடம் சிந்திப்பதும் செயல்படுவதும்.

அதிகம் வளர்த்துவானேன்? தமிழன் தனது அடிமை என எண்ணுகிறது சிங்கள ஆட்சிபீடம்.

இதை— இந்த அநீதியை, அக்கிரமத்தை-எடுத்துரைத்தால் ஆட்சி பீடம் அலறும் அபாண்டம் என்று. "பார்த் தீர்களா தமிழன் கூற்றை— வகுப்பு வெறிபிடித்துப் புலம்புகிறான்" என்று சொல்லும். "இந்த நாட்டிலே சிங்

திருமதி

சுந்தரி அருச்சுனு

களவனை விடத் தமிழனே எல்லாத்துறையிலும் மேம்பட்டு வாழுகிறான், ஒற்றுமைக்கரம் நீட்டும் எம்மை வேற்றுமைக் கண்ணோடு நோக்குகிறான்— பிரிவினை நாடுகிறான்" என்றும், தென்னிந்தியாவோடு இணைந்து இலங்கையை விழுங்க எண்ணுகிறான் என்றும் கொயபெல்ஸ் நாடகமாடும். அவ்வப்போது கண்துடைப்புக்காக விசித்திரமான சலுகைகளைப் பெரிதாக்கிக் காட்டும்.

ஒற்றுமை என்றால் அது எப்படிப்பட்ட ஒற்றுமை? முதலையின் வயிற்றிலே மனிதன் சங்கமமாகிவிடுவது போன்ற ஒற்றுமை தானா ஆட்சி பீடத்தின் உள்கருத்திலிருப்பது? மொழியால், மதத்தால், கலாச்சாரத்தால் முற்றிலும் மாறுபட்ட இரு வேறு இனங்கள் ஒருமொழி ஒருமதமென ஒருமைப்படுவது எப்படி?

### வேற்றுமையில் ஒற்றுமை

அதனால்தான் கூறுகிறோம் வேற்றுமையில் ஒற்றுமை (சமஷ்டிமூலம்) காண்போம் என்று. ஆனால் ஆட்சிபீடமே நீ கூறுவது என்ன? 'பிரிவினைக் கோஷம் போடுகிறாய் தமிழா' என்பது தான். சமஷ்டி என்ற சொல்லுக்கு அர்த்தம் அறியாத நீ அரசு செலுத்தப் புறப்பட்டது ஏன்?

அன்று விடுதலை வேண்டி நின்ற நாடுகளை நோக்கிப் பிரித்தானிய தலைமைப் பீடமும் இதையே கூறிற்று. மாட்சிமைதங்கிய மன்னரின் மாபெரும் சாம்ராச்சியத்திலிருந்து பிரிவினை கோருவது உங்கள் அழிவிற்கே என்றது. ஆடு நனைகிறதேயென்று ஓநாய் ஓலமிட்டதாம்.

தேச விடுதலைக்காகப் போராடியவனைத் தேசத் துரோகி என்றான் வெள்ளையன். இனவிடுதலைக்காகப் போராடுபவனை இன்று இனத்துவேஷி என்கிறாய் நீ. இனவாரியாக, மொழிவாரியாக, மதவாரியாக, சாதிவாரியாகப் பிரித்தாண்டான் பிரித்தானியன்.

காலத்தின் கோலத்தால் கோலோச்சும் நீ இன்று அவனிடம் படித்த பாடத்தையே எங்களுக்குப் படித்துக் காட்டுகிறாய்.

உன் வலையில் சிலர் விழலாம்— அவர்களை நாம் விரல் விட்டு எண்ணலாம்.

எமது இனம் உனது வலையில் விழும், வெற்றி பெறலாம் என்று சிங்கள ஆட்சி பீடமே, நீ விண்கனவு காணாதே.

இந்த ஈழவள நாட்டிலே உனக்கிருக்கும் உரிமையைப் போலவே எமக்கு முண்டென அறிவாய். அறியாவிட்டால் சரித்திரம் கற்றறி.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் கடல் கடந்து வாழும் வெள்ளையன்—மொழியால்—கலையால்—மதத்தால்—நிறத்தால் முற்றிலும் மாறுபட்ட வெள்ளையன்—தனது மன்னனின் மனதுப்படி சட்டமியற்றி அன்று ஆண்டான் உன்னையும் என்னையும்.

இன்று எவராலோ எதற்காகவோ பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நீ எங்களை அடக்கி ஆளப் பார்க்கிறாய்.

எங்களை அடக்கி ஆள, சிங்களவர் ஆட்சி பீடமே! உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது? சட்டப்படியுமில்லை—நியாயப்படியுமில்லை.

உன்னைத் தமிழன் பாராளுமன்றத்திற்கு அனுப்பினானா, சிங்களத்தை எங்கட்குத் திணித்துப் புகுத்து என்று? அல்லது எங்கள் நிலங்களை எடுத்து எங்களை வாழவையாது மைல்களுக்கப்பாலே வாழும் சிங்களவரைக் குடியேற்றி எங்கள் பகுதியிலேயே எங்களைச் சிறுபான்மையோராக்கு என்று அனுப்பினானா?

அல்லது எப்பாடுபட்டேனும் தமிழனை மற்றும் ஒரு யூத இனமாக்கு என்று தான் அனுப்பினானா?

### தமிழ் மக்களின் தீர்ப்பு

தமிழன் ஒன்றிரண்டல்ல அடுத்தடுத்து மூன்று தேர்தல்களிலே தனது தீர்ப்பை மிகமிகத் தெளிவாகக் கூறிவிட்டான். அது உனக்குப் புரியவில்லையா? அல்லது புரி... 

(13-ம் பக்கம் பார்க்க)


**வேல் தைலம்**

**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.


## மக்கள் குரல்

### இதுதானா பௌத்த கலாச்சாரம்?

அண்மையில் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதொரு செய்தி, பௌத்த சிங்கள கலாச்சாரம் 2500 வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் கலாச்சாரத்தை உலகறிய வைக்க என்னதான் செய்திருக்கிறது என்பதைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

தங்கள் வீடு, வாசல், உற்றார், உறவினரையெல்லாம் விட்டு விட்டு, உலகத்தின் பல்வேறு பாகங்களிலுமிருந்து இங்கு வந்து சாதி, மத, இன பேதம் எதுவுமின்றி ஆஸ்பத்திரிகளில் சேவை செய்வதையே தமது வாழ்வின் இன்பமாக எண்ணிச் சேவை செய்து வந்த பிறநாட்டுத் தாதியாரை அரசாங்கம் வெளியேற்றும்படி உத்தரவிட்டிருக்கிறது, அவர்கள் சமயத்தில் கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்தால்.

பொறுமை எங்கே? உங்கள் 'மைத்திரியா' எங்கே? படிப்பு வாசமற்றவன் இந்த வேலையைச் செய்தாலும் பரவாயில்லை. ஐக்கிய நாடுகள் சபையில் பொறுப்புள்ள இடத்தில் இருக்க விரும்புவர்கள், மக்கள் அரசாங்கம் பற்றியும், உலகத்தின் முதல் பெண் பிரதமர் பற்றியும் வானளாவப் புகழ்பவர்கள், புத்த தர்மத்தின் பாதுகாவலர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள்—இந்நாட்டின் ஆட்சியாளரே—இந்த விதமான குறுகிய மனப்பான்மை கொண்ட நடவடிக்கையில் இறங்கியிருப்பது. இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனம், சமயம் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்ட அவர்களுக்கிருக்கும் ஆவலையே பிரதிபலிப்பதாகவிருக்கிறது.

இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் இன்னும் ஒரு வஞ்சகச் செயலாகும். எற்கனவே, தமிழ் மக்களினதும், மிஷனரி பள்ளிக்கூடங்களினதும் விஷயங்களில் வஞ்சகம் செய்த அரசாங்கத்துக்கு கைமேற் பலன் கிடைத்தது. அரசாங்கம் புதிதாக மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையும் திரும்ப அதன் முகத்திலேயே கரி பூசத்தான் உதவும்.

1956-ம் ஆண்டு தொடக்கம் ஒரு நெருக்கடிக்கு மேல் இன்னொன்றாக வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. இது எப்பொழுதுதான் முடியுமோ தெரியாது.

ஒரு பௌத்த சிங்களவன் என்ற முறையில், எமது அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்காக நான் வெட்கப்படுகிறேன்.

ஆர். டி. பியதாஸ.

அனுராதபுரம்.

### தி. மு. க. வும் மலைநாட்டு மக்களும்

மலை நாட்டுத் தொழிலாளியை நாடற்ற பிரஜையாக்கி ஆண்டுகள் பல கடந்து விட்டன. இவர்களின் திரிசங்கு சொர்க்க நிலைக்கு முடிவுகட்ட முன் வராமல், தொழிற் சங்கத் தலைவர்கள், தமது பதவியைக் கட்டி மாரடிக்கும் துர்ப்பாக்கிய நிலையைக் கண்டு கொந்தளித்தது உள்ளம் ஒரு சிலர் மத்தியில். அவர்கள்தான் தி. மு. க. பரம்பரையாக மலைநாட்டுத் தோட்டங்களில் உழைத்து உருக்குலையும் மக்களுக்கு இலங்கைதான் தாய்த்திருநாடு. இவர்களின் பிரச்சினையைத் தீர்க்கப் பாரத நாட்டுப் பிரதமருக்குத் தகுதியுமில்லை, உரிமையுமில்லை என்பதை உணர்த்துகிறார்கள். அதனால் தான் மாநாடு கூடி, ஈழத்தின் தமிழ் பேசும் மக்கள் தந்தையை அழைத்து மாநாட்டைச் சிறப்பித்தார்கள். இதனால் கிலி அடைந்த மலைநாட்டு சுயநலத் தலைவர்கள் கவலை கொண்டார்கள். தொழிலாளியை ஏமாற்றி உலகம் சுற்றும் தலைவர்களின் எதிர்காலம் முடிசூடா மன்னர் பொல்லம் பலனுரைப் போல் வரும் என எண்ணி, தமிழரசுக்கும் தி. மு. கவுக்கும் தொடர்பு உண்டு என்று மக்களின் மனதை மாற்றப் பார்க்கிறார்கள் வஞ்சகர் கூட்டம். இவர்கள் மலைநாட்டு மக்குலக் குழந்தைகளுக்குச் சிங்கள மொழியில் கல்வி கற்க வேண்டுமென்பதற்கு எதிர்ப்பைக் காட்டாமல் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு இப்போதே தேவையான பாடசாலைகள் இல்லாதபோது மொழிப் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லைப் போலும். ஒருநாள் வேலை நிறுத்தத்தை மலைநாட்டுத் தோட்டங்களில் நிகழ்த்தி, பதவியைக் காப்பாற்றுவதற்காக, உடனடியாக ராஜினாமா செய்ய தலைவர்களின் வீரத்தை உணர்த்த தி. மு. க. மலைநாட்டு மக்கள் மத்தியில் மதிப்பைப் பெறுகிறது.

எடுத்ததெற்கெல்லாம் இந்தியப் பிரதமரை நம்பி, தொழிலாளியை ஏமாற்றும் போலித் தலைவர்களை மாற்ற வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். எனவே தி. மு. க. வளர்கிறது. தி. மு. க. வளர்ந்தால் தான் நாடற்றவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று எண்ணுகிறார்கள். மற்றப் போலித் தலைவர்கள் சொந்த நலனையே நாடி, நாடற்ற பிரச்சினையைத் தள்ளிப் போடுவார்கள். இந்த இழி நிலையைத் தவிர்க்கத்தான் தி. மு. க. பாடுபடுகிறது. மலைநாட்டுத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக, அவர்களும் ஈழத்தின் இணையற்ற புத்திரச் செல்வங்கள் என்பதை உருவாக்க வேண்டி அயராது பாடுபடுகிறார்கள்.

கல்வி புகுத்தினால், எதிர்காலத்தில் தொழிலாளிகளின் குழந்தைகள் கூலிக்கு மாடிக்காமல் சுதந்திர உணர்வு கொண்டு சோதாக் கும்பலை அழித்து விடுவார்களே என்ற எண்ணத்தை தலையெடுக்க முடியாமல் தடை செய்கிறதே தி. மு. க. என்று ஏங்குகிறார்கள். அதனால் கட்டுக் கதைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள், தென்னிந்திய அரசியற் கட்சியின் கைப்பொம்மை தி. மு. க. என்று, இது தவறு.

கரவைச் சலீம்

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தேசிய ஒற்றுமை'யைப் பெற ஒரே வழி

## தமிழ் இனம் அனைத்தினதும் பிரதிநிதிதான் 'தமிழரசுக்கட்சி

தமிழரசுக் கட்சியினரை 'வகுப்பு வாதிகள்' என்று சில அரசியல் வாதிகள் கூறிவிப்பதை, ஆதரிப்பது போலிருக்கிறது, சில 'புள்ளிகள்' தமிழரசுக் கட்சியினர் விஷயத்தில் கடைபிடித்து வரும் "இன்டாமை" முறை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதார வளர்ச்சியைப் போன்றே, நாட்டில் பல்வேறு சமூகங்களிடையில் பரஸ்பர நல்லெண்ணம் நிலவுவதும் அவசியம். அத்தகைய சமூக ஒற்றுமை ஏற்படுவது பெரும்பான்மையினருக்கு அளிக்கப்பட்டிருக்கும், அரசியல்—பொருளாதார ரீதியான சலுகைகளும் உரிமைகளும் மற்றச் சமூகத்தினருக்கும் அளிக்கப்படுவதில்தான் தங்கியிருக்கிறது. அதை மறந்து விட்டு, வெறுமனே 'தேசிய ஒற்றுமை! தேசிய ஒற்றுமை!!' என்று கூறித் திரிவது வீத்தலாட்டம்.

இலங்கையில் 'தமிழ்ச் சமுதாயத்தின் ஏகத் தலைவர்கள்' எனக் கூறிக் கொள்ளும் சிலர் மலைநாட்டு மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியினரைப் பற்றித் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் வண்ணம் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். பல கடந்த கால்ச் சம்பவங்களை நினைவுபடுத்தி, மிகைப்படுத்திப் பேசுவதுடன், "வடக்கு கிழக்கு மாகாணத்தவர்களின் சுயநல வேட்கையைத் தணித்துக் கொள்வதற்காக, மலைநாட்டு மக்களைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள்" என்றும் கூறி வருகிறார்கள்.

### பிரஜாவுரிமைப் பிரச்சினை

பல ஆண்டுகளுக்கு முன்,—இந்திய வம்சாவளியினர் பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்பட்டபோது — இப்பொழுது தமிழரசுக் கட்சித் தலைவர்களாயிருக்கும் சிலர், பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் எம். பீக்களாக இருந்தது உண்மைதான் என்றாலும், தமிழரசுக் கட்சி உருப்பெறவில்லை. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற தமிழ்க் காங்கிரஸ் வாதிகள் சிலர் பிரஜாவுரிமை விஷயத்தில் அரசினரை ஆதரித்ததை ஆட்சேபித்து, வெளியேறியவர்களால் நிறுவப்பட்டதுதான் "தமிழரசுக் கட்சி." இந்தியர் பிரஜாவுரிமை சம்பந்தமாக, தமிழ்க் காங்கிரஸ் நடந்து கொண்ட விதத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். தமிழ்க் காங்கிரஸ்காரர்களின் கொள்கை வடக்கு, கிழக்கு மாகாண மக்களால் எதிர்த்துகையாடப்பட்டது. தமிழ்க் காங்கிரஸ் வீழ்ச்சியடைந்தது. மேற்படி மாகாண மக்கள் 'புறக்கணிப்பின் மூலம்' தங்கள் நேர்மையைக் காட்டி விட்டனர். உண்மையிதுவாயிருக்க, ஏதோ காரணத்துக்காக தமிழரசுக் கட்சியினரை துவேஷக் கண் கொண்டு பார்ப்பது, அவர்களை அவமதிப்பதல்ல—ஆனால், நம்மையே நாசகத்திலின்றும் பின்விட்டுச் செல்வதாகும்.

நாட்டின் இரண்டாவது பெரும்பான்மைச் சமூகத்தினரின் நிலையைப்பிரதிபலிக்கும் உரிமை பெற்ற கட்சி தமிழரசுக் கட்சி. எனவே தான் தமிழ் மக்களுக்கு மொழியுரிமை வழங்கப்பட வேண்டும் என வாதிட்டது. —வகுப்புவாதத்தை வளர்ப்பதற்காகவல்ல. 'மொழியுரிமை' என்று சொல்லப்படும் போது அது குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்தவர்களை மட்டுமன்றி இலங்கையின் எந்த மூலையிலும் இருக்கும் முஸ்லிம்கள் உட்பட எல்லாத் தமிழ் பேசும் இனத்தவர்களையும் பாதிக்கும் ஒரு விஷயமாகும். எனவேதான் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகள் எழும்போது, தமிழரசுக் கட்சியினர் "ஏகப் பிரதிநிதித்துவ உரிமை" கோரி தமிழ் மக்களின் மானங் காக்க விழைந்தனர்; விழைகின்றனர். அத்துடன் தேசிய ஒற்றுமை வளர, சகல சமூகத்தினருக்கும் சுவ்லாவிதமான அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளும் அளிக்கப்படுதல்

இரகுவானை
மூ. ப. சிவப்பிரகாசம்

அத்தியாவசியம் என்பதை வற்புறுத்தி வருகின்றனர். இது வகுப்பு வாதமா?

### பிரித்தாளும் தந்திரம்

தமிழரசுக் கட்சியினரை வகுப்பு வாதிகள் என்று சொல்கிற சிலர், "தேசிய ஒற்றுமை"க்காகத் தம்மையே தியாகம் செய்து கொள்ளத் தயாராயிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், "தேசிய ஒற்றுமை" நிலவ எது அவசியம் என்பதைச் சிந்தித்தார்களா? "மலைநாட்டவர்—யாழ்ப்பாணத்தவர்"களுக்கிடையில் உறவை வளர்க்கப் பாடுபட்டார்களா? இல்லை. ஆனால், தமிழரசுக் கட்சியினரைத் தூற்றுவதின் மூலம் துவேஷம் வளர்த்தான் பாடுபடுகிறார்கள். பிரிட்டிஷார் இந்தியாவை வெகு காலமாக அடிமை கொண்டார்களாயினும், தொடர்ந்து ஆள, அவர்களுக்கு இந்தியாவுக்குள்ளேயே உருவான எதிர்ப்புக்களை நசுக்க, "பிரித்தாளும் தந்திரம்" கடைப்பிடித்தனர். அதே "பிரித்தாளும்" தந்திரத்தை, தமிழினத்தின் உணர்ச்சியை நசுக்க முதலில் சட்டம், பின் துப்பாக்கி இவைகளை உபயோகித்து தோல்வியடைந்துள்ள அரசினர், இனிப் பிரயோகித்தாலும் அது வியக்கத்தக்கதொன்றாகாது. அத்தகைய சூழ்நிலை ஏற்படும்போது, சுயநல நோக்கங்களுக்காக மலைநாட்டு மக்களிடையில் பிரிவு மனப்பான்மை வளர்த்தல், பெருமளவில் தமிழ்ச் சமுதாயத்தைப் பாதிக்கும். மேலும், இப்போதே குடியுரிமை—வாக்குரிமைகளற்றுத் தவிக்கும் பல லட்சக் கணக்கான மலைநாட்டு மக்களை ஆதரவற்றவர்களாக்கும்.

### மலைநாட்டில் செல்வாக்கு

இன்று மலைநாட்டு மக்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை பிரஜாவுரிமைப் பிரச்சினை. அதைப் போலவே, பொதுவாகத் தமிழினத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பலவற்றுள் "மொழிப் பிரச்சினை"யும் ஒன்று. ஆக இவைகள் எல்லாம் நமமைப் பொறுத்தவரை உள்நாட்டுப் பிரச்சினைகள். இது நேரு அரசாங்கத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. எனவே, இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு "வெளிநாடான" இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதல்ல, தமிழினத்தினர்களிடையில் சகோதரத்துவத்தை வளர்ப்பதுதான் சிறந்த முறையாகும்.

மலைநாட்டில் தமிழரசுக் கட்சிக்குச் செல்வாக்கு இருந்து வருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணத் "தமிழர்"களின் நல்லெண்ணத் தூதுவர்களென்ற முறையில், அவர்களை வரவேற்பது அவசியம். நாங்கள் வகுப்பு வாதிகள் அல்ல; ஆனால், எங்கள் உரிமைகளைப் பாதுகாப்பது அவசியம் என்பதை உணர்ந்தவர்கள்—இதில் உதவ முன்வரும் தமிழரசுக் கட்சியினரைப் புறக்கணிப்பதா?

### மயான அமைதி

மலைநாட்டுத் தலைவர்கள் சிலர், மலைநாட்டுத் தமிழர்களும் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களும் அவரவர்கள் பாட்டில் இருந்து விட்டால் அமைதிக்குப் பங்கம் ஏற்படாது எனக் கருதுகின்றனர். உண்மைதான், ஆனால், தமிழினம் இரு கூறுகளாக்கப்பட்டு, அடக்கியொடுக்கப்பட்ட நிலையில் நிலவும் "மயான அமைதி"யாகத்தான் அது இருக்குமேயொழிய, பூரண நிம்மதியுடன் கூடியதாக இருக்க முடியாது. நம் நிலை சீரடைவதற்கும் உதவாது. நம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வெளிநாட்டினரை எதிர்பார்க்க முடியாது—அரசாங்கத்திடம் பெருந்தன்மையையும் எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில், ஒரே வழி வடக்கும், தெற்கும் சகோதரத்துவ அடிப்படையில் ஒன்றுபடுவதும், பின் மற்ற சகோதரர்களையும் அன்பால் வெல்வதும் தான்.

அதற்கான வழிகள் வகுக்கப்படுமா?

---

நகைச்சுவை

# திடீர்ப் புரட்சி!

—மாஸ்டர் சிவலிங்கம்—

"ஏற்போக்குச் சக்திகளே! முதலாளி வர்க்கத்தின் முதுகெலும்பை முறித்தெடுப்பவர்களே! என் அருமைத் தோழர்களே!..." இவ்வாறு முழங்கிக்கொண்டிருந்தார் தோழர் புரட்சிதாசன். வானத்தில் பறந்துகொண்டிருந்த செங்கொடியின் நிழலில் நின்று அவர் முழங்கு வது சற்று அழகாகத்தான் இருந்தது! சிவத்த கொடிகள்; சிவத்தச் சட்டைகள், சிவத்தச் சோடா போத்தல்கள் இவை தோழர்களின் பாரம்பரியம்! தோழர் தொடர்ந்தார்...

"உழைப்பாளர் வர்க்கத்தின் இயக்கமான நாம் இன்று நாட்டில் ஓரளவு பலவில்வருவதை நீங்கள் அறிவீர்கள். இந்த இயக்கத்தைத் தொடங்கி வைக்க நமது தலைவர்கள் செய்த தியாகம் கொஞ்சநஞ்சமா? கார்ல்மாக்ஸையும், லெனினையும் நாம் நினைத்துப் பார்த்தால் — அவர்கள் எடுத்த முயற்சிகளை எண்ணிப்பார்த்தால் நமது நெஞ்சம் எவ்வளவு நெகிழ்ந்து விடுகிறது தெரியுமா?

இரும்பு மனிதர் ஸ்டாலின் இருக்கிறாரே... அவர் எங்கள் ஆண்டவன் என்று கூடச் சொல்லுவேன். ஸ்டாலினுடைய வீரதீரச் செயல்களை நான் விளக்கிச் சொன்னால், நீங்கள் வெறிபிடித்த மனிதர்களாகி விடுவீர்கள். ஆகவே நான் சுருக்கிச் சொல்லுகிறேன். தொழிலாளர் வர்க்கத்திற்கு அல்லும் பகலும் தொண்டாற்றியவர் தோழர் ஸ்டாலின் அவர்கள். இன்றிருக்கும் பிற்போக்கு வாதிகளுக்கும், வகுப்புவாதிகளுக்கும் ஸ்டாலினின் அருமை பெருமை தெரியாது. [illegible] குருஷேவ், புல்கானின் [illegible] யோருக்கெல்லாம் குருவாக இருந்து தொண்டாற்றியவர் தோழர் ஸ்டாலின். நவசோவியத் நாட்டின் சிற்பி, நமக்கெல்லாம் தலைவன். நாளைக்கு உலகாளப் போகும் ஆண்டவன்... ஆமாம்! அவர்தான் ஸ்டாலின்.

பேச்சைத் நிறுத்திப்பெருமூச்சு முடித்தார் புரட்சிதாசன். ஒரே கைதட்டல். 'ஸ்டாலின் வாழ்க!' என்ற கோஷமும் செங்கொடியைக் கிழித்துக்கொண்டு வானத்தை முட்டி மோதியது!

கூட்டத்தில் கிடைத்த பாராட்டுடன் வீட்டிற்குவந்தார் தோழர். முன் மண்டபத்துள் நுழைந்தார். சுவரிலிருந்த ஸ்டாலினின் படம் கம்பீரமாகக் காட்சியளித்தது. தோழர் குனிந்து நிமிர்ந்தார். இது அவர் வழக்கமாக ஸ்டாலின் படத்திற்குச் செய்யும் மரியாதை.

மண்டபத்து சோபாவில் பத்திரிகையும் கையுமாகக் காட்சியளித்தார் முற்போக்கு எழுத்தாளர் ஒருவர். புரட்சிதாசன் வந்து அமர்வதற்கு முன்பே அன்று புதிதாக வந்த யதார்த்தமொன்றைத் தூக்கிப் போட்டார்... போட்டதும் போட்டார், பாவம் புரட்சிதாசன் மிரண்டு போனார்.

"கேட்டீர்களா செய்தியை... நேற்று ஸ்டாலின் ஒழிப்புத் திட்டத்தைக் குருஷேவ் அமுலுக்குக் கொண்டு வந்து விட்டாராம். லெனினின் சடலத்திற்குப் பக்கத்திலிருந்தே ஸ்டாலினின் சடலம் அகற்றப்பட்டுவிட்டதாம். ஸ்டாலினின் சிலைகளெல்லாம் தகர்த்தெறியப்படுகின்றனவாம். ஸ்டாலின் ஒழிப்பு உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதாம். 'துரோகி ஸ்டாலின்' என்று தோழர் குருஷேவ் முழங்க ஆரம்பித்துவிட்டாராம்."

புரட்சிதாசன் ஒருகணம் திகைத்துச் சிலையாகியே விட்டார். அடுத்த கணம் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "தோழர்

(13-ம் பக்கம் பார்க்க)


# கமலா பீடி

ஒளியில் சிறந்தது
சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது கமலா பீடியே!

ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் உண்மை விளங்கும்.

# கமலா ஸ்டோர்ஸ்.

நி. 15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

போன் : 3597—6522.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூலை மாதம் 1-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## மூதூர் அளித்த முக்கிய தீர்ப்பு

உபதேர்தல் போராட்டம் முடிந்துவிட்டது. ஆனால் இது மக்களிடையே கிளறிவிட்ட "பொதுத் தேர்தல் உணர்ச்சி" இன்னும் தணியவில்லை. இது அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த தேர்தலன்று—கடந்த இரு ஆண்டுகளில் ஆளும் கட்சியின் நடவடிக்கைகளை மக்கள் எடை போட்டுப் பார்த்த தேர்தல்.

மூதூரில் தமிழரசுக் கட்சி வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் மூதூர் தீர்ப்பை ஆவலுடன் எதிர்பார்த்தனர். காரணம், இரு கொள்கைகள்—இரு அரசியற் திட்டங்கள் அங்கு மோதியதுதான்.

இரு உதிரிகளை உதறித் தள்ளிய மூதூர் மக்கள் ஆளும் கட்சிக்கும் பட்டை நாமம் சாத்தி விட்டனர். சிங்களம் மட்டும் சட்டம், சிங்களக் குடியேற்றம், தமிழ் மொழி அழித்தல், குடியுரிமை பறித்தல், அடக்குமுறை, அவசர காலச் சட்டம், ராணுவக் கெடுபிடி, சர்வாதிகாரப் போக்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றை ஒரு புறத்திலும்—சத்தியப் போர், மொழியுரிமை காத்தல், நில ஆக்கிரமிப்பைத் தடுத்தல், தியாகம், சுதந்திரம், சமஷ்டி ஆட்சிமுறை, தமிழரசுக்கட்சி என்பனவற்றை மறுபுறத்திலும் நிறுத்தி, 'எது வேண்டும் சொல்லுங்கள்' என்று மூதூர் மக்களிடம் கேட்கப்பட்டது. இருபுறத்தையும் நன்கு அலசி ஆராய்ந்து பார்த்து ஒரு மகத்தான தீர்ப்பை வழங்கியுள்ளனர் மூதூர் மக்கள்.

ஒரு பானைச் சோற்றுக்குப் பதம் ஒரு பருக்கை. அதுபோல தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அளித்த தீர்ப்பே மூதூர் தீர்ப்பு. இது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சேர்ந்து அளித்த தீர்ப்பாதலின் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது.

மூதூர் தொகுதியிலே ஸ்ரீ. ல. சு. கட்சி ஒரு போராட்டத்தையே நடத்தியது. மந்திரிசபையே அங்கு படையெடுத்தது. பிரதமரும் நேரிலே வந்து வாக்காளரிடம் பேசினார். அத்தோடு பிரதமர் இரு முக்கிய பிரச்சினைகளை மூதூர் வாக்காளர் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

(1) "சத்தியாக்கிரகம் படுதோல்வி—ஹர்த்தால் புஷ்வாணம், தமிழரசுக் கட்சிமீது மக்களுக்கு நம்பிக்கையில்லை. அதை மூதூரிலேயே குழிதோண்டிப் புதைத்து விடுவோம். அந்த திருப்பணியைச் செய்யும் யோக்கியதாம்சம் ஸ்ரீ. ல. சு. கட்சிக்குத்தான் உண்டு. எனவே தமிழரசுக் கட்சியை அழிக்க எங்களுக்கு வாக்களியுங்கள்" என்று கர்ஜித்தார் பிரதம மந்திரி.

(2) "நாட்டைத் துண்டாடுவது தமிழரசுக் கட்சிக் கொள்கை—ஐக்கிய இலங்கையே ஸ்ரீ. ல. சு. கட்சிக் கொள்கை. ஐக்கிய இலங்கை வேண்டுமானால் எங்களுக்கு வாக்களியுங்கள்" என்றும் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விருகோரிக்கைகளுக்கும் மூதூர் தெளிவாகப் பதிலளித்துவிட்டது. ஸ்ரீ. ல. சு. கட்சியை மட்டுமின்றி அதன் கொள்கை, நடவடிக்கைகள், சட்டங்கள் அனைத்தையும் நிராகரித்ததோடு "ஐக்கிய இலங்கை" என்னும் ஒற்றை ஆட்சி முறையையும் எதிர்த்து வாக்களித்திருக்கின்றனர் மூதூர் மக்கள்.

சமஷ்டி ஆட்சி முறையை அங்கீகரித்திருப்பதும், தமிழரின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்திருப்பதும் மூதூர் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாகும். மூதூர் மக்கள் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளையும் சாதனைகளையும் ஏற்றுக்கொள்வதாக மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியுள்ளனர். தமிழரசுக் கட்சியை அழிக்க அனுமதிக்க மாட்டோமென்றும் அறை கூவல் விடுத்துள்ளனர்.

சத்தியாக்கிரக இயக்கத்துக்குப் பின்னர் நடைபெற்ற முதலாவது தேர்தல் இது. எனவே சத்தியாக்கிரகம் வெற்றியா, தோல்வியா என்பதை மூதூர் காட்டும் என்று சிலர் மார்தட்டினர். இதோ மூதூர் காட்டிவிட்டது சத்தியாக்கிரகம் முழு வெற்றியென்று!

தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுக் கட்சி மீது பூரண நம்பிக்கை உண்டு; கட்சியின் செல்வாக்கு பெருகியிருக்கிறதே தவிர, துளிகூடக் குறையவில்லை என்பதையும் மூதூர் முடிவு நிரூபித்திருக்கிறது.

மூதூர் தமிழ், முஸ்லிம் மக்கள் கெட்டத் தெளிவாகப் பட்டவர்த்தனமாக அளித்த இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள ஆளும் கட்சி தயாரா? அதற்கான பெருந்தன்மையும், துணிச்சலும், ஜன நாயகப் பண்பும் அவர்களிடம் உண்டா? தமிழரசுக் கட்சியை அழிக்கும் வீண் முயற்சிக்கு இத்துடன் முழுக்குப் போட்டுவிடுவார்களா? ராணுவ ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து, பறித்த உரிமைகளை மீண்டும் வழங்குவார்களா? மூதூரில் கற்ற படிப்பினைக் கொண்டு, அடுத்த தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் போட்டியிடும் நப்பாசையைக் கைவிடுவார்களா?

மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு. அதனை ஏற்பதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. அந்த மேலான ஜனநாயக உணர்ச்சி இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மூதூர் தமிழ், முஸ்லிம் மக்கள் மந்திரிகளின் மாய்மால வார்த்தைகளுக்கு மயங்கிவிடவில்லை. முதலைக் கண்ணீரைக் கண்டு உருகிவிடவில்லை. உருட்டல் மிரட்டல்களுக்குப் பணிந்துவிடவில்லை. நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் விரோதிகள் யார், நண்பர்கள் யார் என்பதைத் [illegible] கத் தெரிந்து செயலாற்றினர்கள். நல்ல தீர்ப்பு [illegible] ஞர்கள். அவர்களுக்கு எமது நன்றி!

# வகுப்புவாதத்துக்குத் தூபமிடும் பிரதம மந்திரியின் பேச்சு

# முஸ்லிம் மக்களுக்குக் கல்விமந்திரியின் பூச்சாண்டி

அனுராதபுரத்தில் தமிழ்—சிங்கள மக்களிடையே துவேஷத்தை வளர்க்கக் கூடியதாகவும், மூதூரிலே தமிழ்— முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தக் கூடியதாகவும் பிரதம மந்திரி பொதுக் கூட்டங்களில் பேசியிருப்பது வகுப்புச் சச்சரவு போன்ற பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்க வழிவகுக்கும் என்பதை அவர் அறியாதிருந்தது துரதிர்ஷ்டமே.

தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்ட பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மூதூரில் ஒரு தொனியிலும் அனுராதபுரம், வெலிமடை ஆகிய இடங்களில் மற்றொரு தொனியிலும் பேசியுள்ளார்.

"இந்த நாட்டைத் தமிழர்களுக்குக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இலங்கையைத் தமிழர்களிடமிருந்து பாதுகாக்க வாக்குறுதியளிக்கிறேன்" என்று பிரதமர் அனுராதபுரத்தில் பேசியிருக்கிறார்.

### துவேஷத்தை வளர்த்தல்

இந்தப்பேச்சு பாமரச் சிங்கள மக்களின் உள்ளத்திலே எத்தகைய வகுப்புவாத உணர்ச்சியை— தமிழர்—எதிர்ப்பு மனப்பான்மையை—வளர்க்குமென்பதை நாம் விளக்கவேண்டியதில்லை. பொறுப்புள்ள பிரதம மந்திரியே இப்படி வகுப்புவாத விஷத்தைப் பரப்பினால் அதன் விளைவு பாரதூரமாகவே இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அவர் மூதூரில் இம்மாதிரி பேசவில்லை. அங்கே வேறு தொனியில் பேசினார்.

"தமிழரசுக் கட்சி இலங்கையை இரு கூறுகத் துண்டாடி ஒரு பகுதியைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயற்சி செய்கிறது. நாட்டைப் பிரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், முஸ்லிம் மக்கள் தமிழர்களின் அடிமைகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" என்று மூதூர் தொகுதியில் கந்தளாயில் ஒரு கூட்டத்தில் பேசும்போது பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

தமிழர்— சிங்களவர் மோதுதல் ஏற்படக் கூடியதாக அனுராதபுரியிலே வகுப்பு வாதம் பேசிய பிரதமர், முஸ்லிம்— தமிழர் மோதுதல் ஏற்படக் கூடியதாக மூதூரிலே வகுப்பு வாதம் பேசியுள்ளார்.

முஸ்லிம் பெருமக்களும், தமிழ் மக்களும் சமயத்தால் வேறுபட்டவர்களாயினும் இனத்தால், மொழியால் ஒன்றுபட்டவர்கள். எனவே அவர்கள் இன்று ஒரே அணியில் திரண்டு நிற்கிறார்கள். அவர்களை ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபடுத்திய பெருமை தமிழரசுக் கட்சியைச் சார்ந்ததாகும்.

ஆதலின், தமிழ், முஸ்லிம் மக்களிடையே துவேஷத்தை வளர்த்து அவர்கள் மத்தியில் வகுப்புவாதத்தை வளர்த்து, பரஸ்பர விரோதிகளாக்கி ஒருவர்க்கொருவர் சிண்டு பிடித்துக்கொண்டிருப்பதைக் காணவே ஆளும் கட்சி விரும்புகிறது. இது ஒரு பிரித்தாளும் தந்திரம்.

வகுப்புவாதத்தை விதைத்து மக்களை இரு பகுதிகளாகப் பிரித்துவிட்டால், [illegible] ஆட்சியாளரின் திட்டம்.

### உண்மையைத் திரிக்கிறார்

சமஷ்டி ஆட்சியிலே முஸ்லிம் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டென்றும், அவசியமெனக் கருதினால் தனியாட்சி உரிமை பெற அவர்களுக்குப் பூரண சுதந்திரமும் உண்டென்றும் தமிழரசுக் கட்சி உரிமை "திருமலைத் தீர்மானத்தின்" மூலம் பிரகடனம் செய்துள்ளது. ஆகவே சமஷ்டி ஆட்சியில் முஸ்லிம்கள் தமிழர்களின் அடிமைகளாயிருப்பார்களென்று கூறுவது விஷமப் பிரசாரமாகும். தமிழ்—முஸ்லிம் ஒற்றுமை அணியில் வெடிப்பு ஏற்படுத்த எதிரிகள் செய்யும் முயற்சியே இது.

சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடுவது அல்ல—ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாட்டிலே தேசிய இனங்களின் தனித்தனி சுயாட்சியைக் கொண்ட இணைப்பு ஆட்சிதான் சமஷ்டி அரசியல் முறை. இந்திய உபகண்டத்தை பாரதமென்றும் துண்டாடியதைப் போல நாட்டைத் துண்டாடுவது சமஷ்டி அல்ல.

இதனைத் தமிழரசுக் கட்சி பன்முறை தெளிவாக விளக்கியுள்ளது. பிரதமருக்கும் இது தெரியாமலிருக்க முடியாது. தெரிந்தும், தமிழரசுக் கட்சி நாட்டைத் துண்டாட முயற்சி செய்கிறதென்று அவர் கூறுவது வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

### மிரட்டல் பலிக்காது

முஸ்லிம் மக்களின் எதிர்காலம் மூதூர் தேர்தலின் முடிவைப் பொறுத்தேயிருக்கிறதென்றும், சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தால் தான் சிங்கள மக்களின் ஆதரவு பெற்று முஸ்லிம் மக்கள் வாழமுடியுமென்றும் கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மாமூத் மூதூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

இந்தப் பேச்சு ஒரு வகையில் முஸ்லிம் மக்களை மிரட்டுவதைப்போல அமைந்துள்ளது. கல்வி மந்திரிக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகின்றோம்.

முஸ்லிம் மக்கள் யாருடைய தயவையும் நாடி வாழ்பவர்களல்ல— அப்படி வாழவும் கூடாது. அம்மாதிரியான இழி நிலையைத் திருமறையும் அனுமதிக்காது. பிறர் தயவில் வாழும் அளவுக்கு அவர்கள் கையாலாகாதவர்களல்ல.

மூதூரில் ஸ்ரீ. ல. சு. அபேட்சகருக்கு வாக்களிக்காவிட்டால் எட்டுலட்சம் மக்களின் வாழ்வு இருளடைந்து விடுமென்ற பயமுறுத்தல்களெல்லாம் முஸ்லிம் பெருமக்களை அசைத்து விடமுடியாது. என்றுமே மிரட்டல்களுக்குப் பணிந்து கொடுப்பவர்களல்ல முஸ்லிம் சமுதாயம். அதற்கு உலக வரலாற்றிலே ஆயிரமாயிரம் சான்றுகளுண்டு.

### பழிசுமத்துதல்

"தமிழரசுக் கட்சியால் நாட்டிலே அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. எனவே நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை விரும்பும் அனைவரும் தமிழரசுக் கட்சியைத் துடைத்தெறிய உதவ வேண்டும்" என்று மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல மூதூர் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தமிழரசுக் கட்சி முட்டுக் கட்டைபோட்டதாக உதாரணங்களுடன் நிரூபிக்குமாறு மந்திரி திரு. கலுகல்லையை நாம் அறைகூவி அழைக்கின்றோம்.

தமிழ் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை எதிர்த்துப் போராடுவது பொருளாதார விருத்தியை எவ்வகையிலும் எதிர்ப்பதாகாது. அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் திறமை ஆட்சியாளரிடம் கிடையாது. நிதிவசதியும் அவர்களிடமில்லை. அதற்கான உருப்படியான திட்டங்களும் அவர்களிடம் கிடையா. அபிவிருத்தி திட்டங்கள் பிசுபிசுத்துப் போவதற்கு இதுதான் காரணம். தங்களின் கையாலாகாத தன்மையை மறைக்க குற்றத்தைத் தமிழரசுக் கட்சித் தலையிலே சுமத்துகின்றனர்.

இன்று நாட்டிலே அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் ஸ்தம்பித்திருப்பதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே முழுக்க முழுக்கப் பொறுப்பாளியாகும்.

### நோக்கத்துக்கு மாசு கற்பித்தல்

"இன்னும் 10 வருஷங்கள் தமிழரசுக் கட்சி இந்த நாட்டில் இருந்தால் சிங்கள இனம் அழிந்து விடும், சிங்கள மொழி மறைந்துவிடும், பௌத்த சமயம் நாசமாகி விடும்" என்றெல்லாம் ரத்தொட்ட பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. முனசிங்க கந்தளாயில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதாக ஒரு செய்தியை சிங்களத் தினசரியொன்று பிரசுரித்துள்ளது.

தமிழரசுக் கட்சியினர் மீது சிங்கள மக்களை ஏவி விடும் இச் செய்தி சிங்களப் பத்திரிகையில் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்ததின் மர்மமென்ன? சிங்களவர்களைத் தூண்டி விடுவதற்காகச் செய்யப்பட்ட முயற்சியா?

தமிழரசுக் கட்சி எந்த இனத்திற்கும், மொழிக்கும், சமயத்திற்கும் விரோதியன்று. சிங்கள இனத்தையோ, சிங்கள மொழியையோ, பௌத்த மதத்தையோ அழிக்க வேண்டிய அவசியம் எதுவும் தமிழரசுக் கட்சிக்கு கிடையாது. அந்த எண்ணமும் இல்லை.

தமிழரசுக் கட்சி சிங்கள இனத்தின் விரோதியல்ல— சிங்கள மொழியின் எதிரியல்ல—பௌத்த சமயத்தின் சத்துருவல்ல. தமிழரசுக் கட்சியின் இலட்சியம் இந்நாட்டில் ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவ வேண்டுமென்பதே. தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், பாரம்பரியம், கலாசாரம், தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமனக் கட்டளை தந்தியில் பறந்தது

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டையைநமது அப்பாக்குட்டி அம்மான் அனுப்பிவைத்தார். அவ்வட்டை மேற்குறிப்பிட்ட "பூமராங்" போன்று அம்மானுக்கே திரும்பி வந்து விட்டது.

மானிப்பாய் வடக்கு சிறீதரன் யார்? என்பதை அப்பாக்குட்டிஅம்மான் அறிந்துவிட்டார். பத்திரிகை வட்டாரங்களின் கருத்துப்படி, ஏரிக்கரைப் பத்திரிகைகளுக்கு, தமிழரசுக் கட்சியைப் பற்றி அவதூறான தகவல்களும் அறிக்கைகளும் வெளியிட்டவர், உண்மையான உருவமல்ல, பொய்ப் பெயராளர் என்பது புலப்பட்டு விட்டது.

1949-ம் வருடம் ஆவணிமாத மத்தியில் தமிழரசுக்கட்சியினரால் வெளியிட்ட ஒரு அறிக்கையை, தனது அவதூறை ருசுப்படுத்த "1948-ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை" என்று பொய்யாகக் கூறியிருக்கிறார் இந்தப் போலி சிறீதரன். ஐயா போலியாரே! உங்கள் கூற்றை மெய்ப்பிக்க முடியாது. 1949ம் ஆண்டு வெளியாகிய அறிக்கையை ஒரு வருடம் முன் கூட்டியே வெளியாகியது என்றுகூறுவது பொருந்தாது. பிள்ளை பிறக்கு முன்னர், அது கதைத்து விட்டது என்று கூறுவது போல் இருக்கிறது உமது கூற்று. உமது வேடத்தைக் கலையும், அல்லது இதோ நமது அம்மான் உமது முகமூடியைக் கிழிக்கிறார்.

### ஏய்! நீ யார்?

தமிழரசுக் கட்சியினரை அவதூறாகத் தாக்கி இரு அறிக்கைகள் வெளியாகி உள்ளன. இவ்விரண்டிலும் 1949ம் ஆண்டு என்று உண்மைக்குப்பதிலாக 1948-ம் ஆண்டு என்று பொய் கூறப்பட்டுள்ளது. அறிக்கைகளுள் ஒன்று மலை நாட்டிலிருந்து வெளியாகியுள்ளது. மற்றது மானிப்பாய் சிறீதரனுடையது. இவ்விரண்டிலும் ஒரே பிழை தென்படுவதால் இவ்விரண்டு அறிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.

சர்வதேசத் தொழிலாளர் சங்கங்களின் மாநாடு பற்றியும் அறிக்கை குறிப்பிடுகிறது. ஒரு முன்னாள் செனட்டரின் புதல்வர் அண்மையில் சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டுக்குச் (I. L. O.) சென்று அங்கு வழ வழ பேச்சுப் பேசிவிட்டு வந்தவர். அவர்தான் இந்த மானிப்பாய் வடக்கு சிறீதரன் "ஸ்டண்டு"க்குப் பொறுப்பானவர் என்பது அம்மானுக்கு நன்றாகப் புலப்பட்டுள்ளது.

அதுமட்டுமா? முதலாவதான அறிக்கை தயாரித்தானதும் திரு. இராஜலிங்கத்திடம் கையொப்பத்துக்கு அறிக்கை போனதாம். ஆனால் அதை திரு. இராஜலிங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டாராம்.

### சர்வகலாசாலையில் சூது விளையாட்டு

தங்கள் பிள்ளைகளின் பெயர்களின் பின்னும் இரண்டு மூன்று வால் எழுத்துக்கள் தொங்க வேண்டுமே என்ற ஆசையினால் உந்தப்பட்ட பெற்றோர், பிள்ளைகளைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கின்றனர்.

படிப்புக்கும், இருப்பிடம், சாப்பாடு, புத்தகம், உடை முதலானவற்றுக்கும் "பாக்கெட்" செலவுக்குமாக படாதபாடுபட்டுப் பெற்றோர் பணம் அனுப்புகின்றனர். ஆனால் கடந்த சில காலமாக, பட்டப் படிப்புக்குப் பெற்றோர் அனுப்பும் பணம் போதாது என்று மாணவர்கள் துயரகீதம் பாடுகின்றனர்.

பல்கலைக் கழகத்தில் பயிலும் சமசமாஜக் கட்சி மேலிட உறவு கொண்ட வாலிபர் ஒருவர், ஒரு புதிய திட்டம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளாராம். இத்திட்டத்தில் ஒரு (நாணய) நோட்டை, பல நோட்டுகளாகப் பெருகிக் காட்டும் செயல் இடம் பெற்றுள்ளதாம், பல்கலைக் கழக ஊழியர்களும் இதில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளார்களாம்.

பொதுவாக நமது தமிழ் பேசும் மாணவர்கள் இந்த வேண்டாத விபரீதப் பேராசைக்கு அடிமைப்பட்டுப் பணத்தை இழக்கின்றனராம்.

### கருவாட்டு அர்ச்சனை

அநுராதபுரம் தொகுதியிலுள்ள அலையாப்பத்து தேர்தல் நிலையத்தைப் பார்வையிட்ட மந்திரி இலங்கரத்னவுக்கு கருவாட்டு அர்ச்சனை நடைபெற்றதாம். "கருவாட்டு மந்திரியே! இந்தா உமக்கு கருவாட்டு மலர்கள்", என்று அழுகிய கருவாடுகளை மந்திரிமேல் வீசினார்களாம்.

## வகுப்புவாதத்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகத் தமிழரசுக் கட்சி போராடி வருகிறது. இது எவ்வகையிலும் சிங்கள இனத்தையோ அவர்களின் மொழியையோ பாதிக்காது.

தமிழ் பேசும் மக்களின் பிறப்புரிமைகளுக்காகப் போராடும் தமிழரசுக் கட்சிக்கு சிங்களப் பொது மக்கள் மீது இம்மியளவு கூடத் துவேஷம் கிடையாது.

எல்லாத்துறைகளிலும் சம அந்தஸ்து பெற்று தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களுடன் சகோதரர்களாகவே வாழவேண்டுமென்பதே தமிழரசுக் கட்சியின் பேரவா.

அத்தகைய உன்னத இலட்சியங்களைக் கொண்ட ஓர் ஸ்தாபனம் இன்னும் 10 ஆண்டுகள் இந்நாட்டில் இருந்தால் சிங்கள இனத்தை அழித்து விடும் என்று கூறுவது விஷமத்தனமான, தவறான பிரசாரமாகும். கட்சியின் உயர்ந்த கொள்கைகளுக்கு மாசு கற்பிப்பதாகும். சிங்கள மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதாகும்.

## மாநாட்டு மலர் சிறுகதைப் போட்டி

சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சி யூட்டும் செய்தி!

தமிழரசுக் கட்சி வருடாந்த மாநாட்டின்போது வெளியாகும்

**'சுதந்திரன்' மாநாட்டு மலரில்'**

பிரசுரிக்க சிறுகதைகள் தேவை. ஒரு சிறுகதைப் போட்டி மூலம் கதைகளைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கை தமிழ் பேசும் மக்களின் இனவிடுதலைப் போராட்டங்களை மையமாக வைத்து கதைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

சிறுகதை ஆய்வுக் குழுவினரால் தெரிவு செய்யப்படும் முதல் இரண்டு கதைகளுக்கும் பரிசு வழங்கப்படும்.

**ரொக்கப் பரிசு ரூ 150-00**

முதல் பரிசு: ரூ. 100-00

இரண்டாம் பரிசு: ரூ. 50-00

சிறுகதைகள், சுதந்திரன் பத்திரிகையில் ஒரே பக்கத்தில் பிரசுரிக்கப்படக்கூடிய அளவினதாய் இருத்தல் வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் ஒரே பக்கம் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

பரிசு பெற முடியாத கதைகளில் பிரசுரிக்கத்தக்கவை, தகுதிக்கேற்ப அவ்வப்போது சுதந்திரனில் பிரசுரமாகலாம்.

**முடிவுத் தேதி : 31—7—1962**

31—7—62க்குப் பின்னர் வரும் சிறுகதைகள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

போட்டிக்குரிய கதைகள் யாவும் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்:-

சிறுகதைப் போட்டி ஆய்வுக் குழு,
சுதந்திரன்,
தபால் பெட்டி 1183,
கொழும்பு - 12

## தபால் பகுதி அதிபர் திரு. சிவப்பிரகாசம் மறைவு

பதில் போஸ்ட்-மாஸ்டர் ஜெனரலாகக் கடமையாற்றிய திரு. தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் அவர்கள் வியாழக்கிழமை காலை பூதவுடல் நீத்தார்.

1936-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தபால் இலாகாவில் சேர்ந்த இவர், 1909-ம் ஆண்டு மே மாதம் பிறந்தவராவர்.

இவர் பி. எஸ். ஸி. (லண்டன்), பி. ஏ. (கன்ருப்) பட்டங்கள் பெற்றவர்.

இந்நாட்டில், இன்றைய சூழ்நிலையில், உயர்தர தமிழ் அதிகாரிகளாகக் கடமையாற்றுபவர் ஒரு சிலரே. [illegible] குப் பெரும் நஷ்டமாகும்.

# பட்டதாரிக்கு உடனே வேலை

## வோட்டு வேட்டையில் ஆட்சியின் சூழ்ச்சி

இந்திய பல்கலைக் கழகத்தில் படித்த ஒரு தமிழ் பட்டதாரிக்கு, தந்தியில் நியமனக்கட்டளை அனுப்பப்பட்டுள்ளதாம். மூதூரில் ஆளும் கட்சி வாக்குச் சேகரிப்பதற்காகச் செய்த உபாயங்களில் இது தலையாயது என்று தெரிகிறது.

மூதூர் இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகரைத் தோல்வியடையச் செய்ய, ஆளும் கட்சி தன்னாலான தந்திரங்கள் அத்தனையும் கையாண்டது. அதிகாரம் என்னும் ஆயுதம் தங்கள் கையில் இருப்பதனால், வேண்டியவற்றை அவ்வப்போது பிரயோகிக்க மந்திரிமார் தயங்கவில்லை.

நாட்டின் பல பாகங்களிலும் கருவாடு பற்றாக்குறையாக இருந்தபோதிலும், மூதூர் தொகுதியிலும் மற்றும் வெலிமடை; அநுராதபுரத்திலும் கருவாட்டுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. சுதந்திரக்கட்சி ஆட்சிபீடமேறிய காலம் தொடக்கம் விலைவாசிகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதால், மக்கள் ஆட்சியில் அதிருப்தி கொண்டுள்ளனர். இந்த மனக்கசப்பை வாக்காளர் மத்தியிலிருந்து மறைத்துவிட சில உபாயங்களைக் கையாண்டனர் ஆட்சியாளர்கள். ஆனால் மக்கள் இந்த ஏமாற்று வித்தைகளுக்கெல்லாம் ஏமாந்து விடவில்லை என்பது ஓரளவு தெரிந்துவிட்டது. இடைத் தேர்தல் முடிவுகளே இதற்குச் சான்று பகர்கின்றன.

ஆட்சியாளரின் தந்திரோபாயங்களுக்கெல்லாம் தலைசிறந்து விளங்கும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தியப் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற ஒரு தமிழர் எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரு உத்தியோகமும் கிடைக்கவில்லை. தனைச் சேர்ந்த உறவினர்களது 500 வாக்குகளை ஆளும் கட்சி அபேட்சகர் ஜனாப் ஹமீதுக்கு அளிப்பதாக வாக்களித்ததன்பேரில், அவருக்கு உடனடியாக நியமனம் கிடைத்துள்ளது.

அவருக்கான நியமனக்கட்டளை தந்தியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

## 'நாடற்றவர்' ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். 'நாடற்றவர்கள்' எனப்படும் மலைநாட்டு மக்களின் சார்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அறிக்கையையும், பிரச்சினை பாரதூரமானது என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்ட மலைநாட்டுத் தொழிலாளர்களின் தொழிற் சங்கத் தலைவர்களின் அறிக்கைகளையும் சங்கம் வரவேற்கிறது. பிரச்சினை பற்றி எவ்வளவுக்கு மக்கள் அக்கறை காட்டுகிறார்களோ அவ்வளவுக்கு நாம் ஒரு தீர்வை அணுகி விடுகின்றோம்.

மறைமுகமான நுணுக்கங்களில் இறங்காமல், உடனேயே இப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வைக்காண முற்படாவிடின், புதுப்புது கூட்டு இணைப்புகள் தோன்றலாம். அவற்றின் விளைவுகள் நாட்டின் நல்லுக்காக இருக்க முடியாது என்பதே எமது தீர்க்கமான அபிப்பிராயமாகும்.

## தமிழரசின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### அநுராதபுரம்

திரு. கே. பி. ரத்நாயக்கா (ஸ்ரீ. ல. சு. க)— 7797.
திரு. ஏ. மகாதிவுல்வெவ (யூ. என் பி)— 6372.
திரு. எஸ். தலுவத்தை (சுயேச்சை)— 2179.
அதிகப்படியான வாக்குகள்— 1425.

### வெலிமடை

திரு. கே. எம். பி. இராஜரத்தின (ஜா. வி பெ)— 8352.
திரு. பேர்சி சமரவீர (யூ. என். பி.)— 5178.
திரு. பி. பி. ரத்நாயக்கா (ஸ்ரீ. ல. சு. க)— 2496.
அதிகப்படியான வாக்குகள்— 3174.




சி. சி. சி.
தாவர
உரப்பசளைக்
கலவைகள்
அதிக விளைச்சலுக்கு
உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந் தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் இடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-


கொழும்பு
கொம்மேர்ஷியல்
கம்பனி லிமிட்டெட்,

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.]

பசளைப் பகுதி
அக்லண்ட் ஹவுஸ்,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோபாவில் அமர்ந்திருந்த செல்வராஜனிடம் ஒர் கடிதத்தைக் கொடுத்து விட்டு விறுக்கென்று தன் அறைக்குச் சென்று, அறையின் கதவைச் சாத்திக் கொண்டாள்,

செல்வராஜன் ஒன்றும் புரியாதவனுகக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அன்பருக்கு,

நேற்று, நீங்கள் என்னைப் பிரிந்து சென்ற பின்புதான், நீங்கள் கூறிய "நாம் எல்லாக் காரியங்களிலும் ஒன்றுகச் சேர முடியாவிட்டால் நாம் ஒன்று சேராமலே இருந்து விடுவது மேல்" என்ற வார்த்தைகள் சரியானவை என்பதைப் புரிந்து கொண்டேன். என்றும் நீங்கள் என்னுடையவரே! உங்களைப் பிரிந்து வேறு எவரையும் மணந்து என்னுல் வாழ முடியாது என்து கணவராக விரும்புபவர் முதலில் தாய் நாட்டைக் காதலிக்க வேண்டும். பிறந்த தாய் நாடும், பேசும் மொழியும், உயிரினும் மேலானவை என்று எண்ணம் கொள்ள வேண்டும். அவற்றைக் காக்க உயிரையும் பணயம் வைக்கத் தயங்கக் கூடாது. உரிமை இழந்த அடிமைகளாக வாழ்வதிலும் பார்க்க உரிமைக்காக உயிரைக் கொடுக்கத் துணிவது மேல், இவைதான் என் உள்ளத்தில் இருப்பவை. நான் சத்தியாக்கிரகத்தில் தொண்டர் படைத் தாதியாகச் சேர்ந்து சேவை செய்ய முடிவு செய்துவிட்டேன்.

பத்மினி.

கடிதத்தைப் படித்து முடித்த செல்வராஜன் நடுநடுங்கிக் கொண்டு எழுந்து, பத்மினியின் அறைக்குச் சென்று, அறையின் கதவில் பலமாகத் தட்டினுன். தாளிடப்பட்ட கதவு திறக்கப்படவே இல்லை. கதவைத் திறக்கும்படி இரந்தான், கெஞ்சினுன். கத்தினுன், குரல் எழுப்பினுன், பிரயோசனம் இருக்கவில்லை. உள்ளேயிருந்து மெதுவாக அழும் குரல் மட்டும் கேட்டது. பைத்தியம் பிடித்தவனுக, ஏமாற்றத்துடன் வெளியே நடந்தான். கடிதத்தை அன்னட மடித்துச் சட்டைப் பையில் செருகிக் கொண்டான்.

அவள் தலை சுற்றியது. இந்தலை சுழன்றது. மனம் அமைதியின்றித் தடுமாறியது. கால்கள் சென்ற திசைக்குச் சென்றுன். அவன் நடையில் உயிர் இருக்கவில்லை.

உயிருக்குயிராக நேசித்த ஒரு பொருள் அவனை விட்டுப் பிரிந்து சென்ற பின்பு அவன் மனதில் அமைதி நிலவுமா?

●

பெரும்பான்மைப் பலத்தினுல் ஆதிக்க வெறி பிடித்து இன ஒதுக்கல், மொழி ஒதுக்கல் போன்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரசாங்கத்தை எதிர்த்து, அவர்களின் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அரசாங்கக் காரியாலயங்களின் வாசலில் உரிமைக் குரல் எழுப்பி, மறியலாகிய சட்ட மறுப்பைத் தொண்டர்கள் தினம் தினம் ஆயிரக் கணக்கில், ஆண், பெண் என்ற பேதமின்றிக் கூடித் தமது உரிமைக்காகக் குரல் எழுப்பிக் கொண்டு இருந்தனர்.

செல்வராஜன் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் மனக் கண் முன்னே போராட்டத்தின் காட்சி தென்பட்டது. அவன், தானும் தன் குடும்பமும், தன் தொழிலும், தன் காதலி பத்மினியும் போதும் என்று அன்று வரை எண்ணியிருந்தான். அதை விட முக்கியமான பொருள் வேறு உண்டா என்று சிந்தனையில் ஈடுபட்டான்,

அவன் எண்ணியிருந்ததையை விட முக்கியமானவை வேறு உண்டு என்பதைப் பத்மினியின் கடிதம் புலப்படுத்துவது போல அவன் மனதில் தென்பட்டது.

மறுபடியும் பத்மினியின் கடிதத்தை எடுத்துக் கண்முன் பிடித்தான். 'பிறந்த தாய் நாடும், பேசும் மொழியும் உயிரினும் மேலானவை. அவற்றைக் காக்க உயிரையும் பணயம் வைக்கத் தயங்கக் கூடாது உரிமை இழந்து அடிமைகளாக வாழ்வதிலும் பார்க்க உரிமைக்காக உயிரைக் கொடுப்பது மேல்' என்ற வார்த்தைகள் அவன் கண்களின் முன் பிரகாசித்தன.

உரிமை உரிமை என்று அவன் இதயங்கள் அசைந்து ஒலி எழுப்பின. உரிமை, உரிமை என்று அவன் உள்ளத்திலிருந்து எதிரொலித்தன.

செல்வராஜனின் கால்கள் நகர மறுத்ததனுல் சிலை போல நின்றுன். அவனுக்கும் பத்மினியாரும் தேசமொழிப் பற்றில் ஒற்றுமை வெகு தூரத்தில் இருப்பதை உணர்ந்தான். பத்மினியின் சாதலைத் திரும்பப் பெற வேண்டுமாயின் அவன் போராடுமாறு வேண்டும்.



முடிவானுன். அவளைப் பிரிந்து சென்ற பத்மினியை அவன் அடைய வேண்டுமாயின் அந்த முடிவுக்கு வந்து தானே ஆகவேண்டும்.

மறு தினம் செல்வராஜன் தொண்டர் படையில் சேர்ந்து, போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டான். பணம் வேண்டாம், பந்தயம் வேண்டாம், தன் சுகம் வேண்டாம். வேண்டுவது மொழி உரிமை, நில உரிமை, எதிர்கால சந்ததியாரின் நல் வாழ்வு. இவற்றிற்காக பகல், இரவு என்று பாராது உரிமை கிடைக்கும் வரை போராடுவதென்ற உறுதியுடன் போராட ஆரம்பயானுன்.

நாட்கள் செல்லச் செல்ல அவன் உறுதி தளரவில்லை, அவன் சுதந்திரமாக உரிமைகளைப் பெற்ற பின்பு தான் பத்மினியைப் பார்ப்பதென்று உள்ளத்தில் உறுதி பூண்டான்.

[illegible] போராட்டத்தைக் குறிப்பதற்காகப் பிரமாண்டமான அணிவகுப்பு ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த அணிவகுப்பு ஊர்வலத்தைப் பார்வையிட திரள் திரளாக மக்கள் தெருக்களின் இரு மருங்கிலும் கூடி நின்று தமது ஆதரவை நல்கினர். ஊர்வலத்தின் மத்தியில் கம்பீரமாக அணிவகுத்துச் சென்ற செல்வராஜன் மேல் அவர்கள் பார்வை படாமலில்லை.

ஊர்வலம் முதல் உதவி நிலையத்தின் வாசல் பக்கமாகச் சென்று கொண்டிருந்தது. செல்வராஜன் பார்வையை அந்தச் சாலையின் வாசல் பக்கமாகச் செலுத்தினுன்.

அங்கே தாதி உடையில் நின்ற பத்மினியின் பார்வை அவன் மேல் இருந்ததைக் கண்டு கொண்டான். அவர்கள் இருவரின் பார்வை ஒன்றுபியதால் அவர்கள் இதழ்களில் புன்னகை தவழ்ந்து விளையாடியது. பத்மினி தன் கண்களைத் துடைத்துக் கொள்வதைக் கண்டு கொண்ட செல்வராஜனின் கண்கள் கூடக் கலங்கின. திரும்பவும் அவள் இதழ்களில் புன்னகை தவழ்வதைக் கண்டு கொண்டதும் அவனுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டது. அதனுல் அவன் நடையில் புதுவிதமான உணர்ச்சியும் கம்பீரமும் தொனித்தது.

செல்வராஜனின் கண் முன்னே பத்மினியின் தோற்றம் நிழல் போல் நின்று ஆடியது. அன்று ஒருநாள் அவன் வாழ்க்கையில் நடந்தேறிய சம்பவத்தின் நினைவினுல் அன்று நடந்தேறிய சம்பாஷணை அவன் காதுகளில் ஒலித்தன.

'அத்தான் என்ன மனிதர் நீங்கள்? உங்களிடம் நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஒன்றுமே இடையாதா?'

'என்ன அவைகளா எமக்குச் சோறு போடுகின்றன? பதவி ஆசை கொண்ட சிலர் எழுப்பும் பேச்சுக்களும், செயல்களுக்கும் என் செவி கொடுக்க வேண்டும்? போராட்டமாம் கண்டறியாத போராட்டம், இதனுல் உரிமைகளையோ வேறெதையுமோ பெற முடியாது.'

'ஏன் பெற முடியாது? காந்தி மகான் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கவில்லையா? அத்தான்! உங்களுடன் பேச எனக்கு வெட்கமாக இருக்குது. உங்கள் மொழி, உங்கள் நாடு என்ன நிலை அடைந்தாலும பரவாயில்லை, உங்கள் சுகம் மட்டும் இருந்தால் போதுமா? அது கூட இன்னும் எத்தனை நாட்களுக்கு? விருப்பம் இல்லாவிட்டால் சும்மா பேசாது இருங்கள். ஆனுல் தூற்ற வேண்டாம். தூற்றித் திரிந்தால், அதனுல் உங்கள் சந்ததிக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்படும்? உங்களைப் பற்றி வருங்காலச் சமுதாயம் தூற்றும் அத்தான்.'

'தூற்றட்டுமே, எனக்கென்ன? இந்த உரிமைகள் இல்லாது வாழ முடியாதா?'

"வாழ முடியும் மானத்துடன் அல்ல. உங்களுடன் பேசும் என்னைச் சொல்லுங்கள், எனக்கு முதலில் தாய் நாடு, தாய் மொழி, உரிமை அதன் பின்புதான் மற்றவைகளும், அந்த எண்ணத்தைப் போல நீங்களும் கொள்ள வேண்டும்.'

'பத்மினி, நான் சொல்லுகிறேன் அந்த எண்ணங்கள் வேண்டாமென்று நாம் எல்லாக் காரியங்களிலும் ஒன்றுகச் சேர முடியாவிட்டால், நாம் ஒன்று சேராமல் இருந்து விடுவது மேல், எனவே அந்த எண்ணங்களை விட்டு விடு.'

'அதைப் பற்றித்தான் நானும் சிந்திக்கிறேன். உங்கள் கொள்கைகளும், செயல்களும் உங்கள் மேல் ஆத்திரத்தை ஊட்டுகின்றன. நானும் போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறேன். நீங்களும் சேருங்கள்."

'வேண்டாம் பத்மினி வேண்டாம். உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?'

"ஆம். ஆம். உங்களுக்குத்தான். நான் போராட்டத்தில் சேரத்தான் போகிறேன். இது சத்தியம். என்னைத் தடுக்காதீர்கள். நான் வருகிறேன்.'

'பத்மினி நில். போகாதே. நான் சொல்வதைக் கேள். நிற்க மாட்டாயா?'

செல்வராஜன் நினைவுச் சுழலில் நின்று விடுபட்டு சுய நினைவுக்கு வந்தான். அவன் நடையிலும், செயலிலும் மேலும் கம்பீரம் தொனித்தது.

அன்று மாலை ஆட்சியாளர் சட்டம் பிறப்பித்தனர். அது தான் ஊரடங்குச் சட்டம். மக்களை அக்கிரமத்துக்கு அடி பணியச் சட்டம். தொண்டர்கள் பயப்படவில்லை, தமது உறுதியைத் தளர்த்தினுர்கள் அல்லர். ஊர் முழுவதும் இராணுவ வீரர்கள் மோட்டார் வண்டிகளில் சுற்றித் திரிந்து பாமர மக்களைக் கிடுகிடுக்கச் செய்தனர்.

தொண்டர்கள் ஓடி ஒளிக்கவில்லை. அப்படியே இருந்த இடத்தை விட்டு நகராது இருந்தனர். இராணுவ வீரர்கள் துப்பாக்கி முனையின் உதவியுடன் தொண்டர்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டனர். தொண்டர்கள் அதிர்ச்சியடைய

(13—ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழிந்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல்துறை வளர்ச்சிக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய காலத்தில் முஸ்லிம்கள் அமைத்து நடத்திய சர்வகலாசாலைகள் அறிவின் உறைவிடமாக விளங்கிற்று. குர்தபா, செவில்லி, பாக்தாத் லோறு முதலிய நகர்களில் மாபெரும் பல்கலைக் கழகங்களை அமைத்து நடத்தினர். முஸ்லிம்களின் இந்தச் சர்வகலாசாலைகளில் ஐரோப்பிய அரச குடும்பத்தினர், சட்டக் கல்வி பயின்றார்கள். பன்னிரெண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மேல் நாடுகளில் விஞ்ஞான ஆர்வம் பெருக்கெடுத்த போது ஐரோப்பிய அறிஞர்கள் விஞ்ஞான அறிவைப் பெறுவதற்காக குர்தபா, செவில்லி, தொலெதோ ஆகிய முஸ்லிம் நாடுகளை நோக்கிச் சென்றார்கள். அப்போது தொலெதோ நகரில் இருந்த உலகிலேயே மிகப் பெரிய முஸ்லிம்களின் நூலகம் ஐரோப்பியருக்கு நன்கு பயன்பட்டது.

## புதியதொரு கலாச்சாரம்

சுருங்கக் கூறின், மிகக் குறுகிய காலத்திலுள் ஸ்பெயினிலிருந்து சீனாவின் எல்லை வரை தங்களுடைய ஆட்சியையும், மொழியையும் பரவச் செய்த அராபிய முஸ்லிம்கள் உலகிற்குப் புதியதொரு கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அளித்தார்கள்; ஒரு சமயத்தையும் தோற்றுவித்தார்கள். அத்துடன் விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளையும் வளர்த்தார்கள். அதில் புவியியல் துறை வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கை இன்று ஆராய்வோம்.

ஒரு காலத்தில் உலகின் மகா சமுத்திரங்களில் எல்லாம் முஸ்லிம்களுடைய மரக்கலங்களே ஆட்சி செலுத்தின. யாருமே முன்பு காலடி எடுத்து வைக்காத இடங்களுக்கெல்லாம் முஸ்லிம்கள் போனார்கள். புதிய நாடுகளைப்பற்றியும், அந்நாடுகளில் வாழ்ந்த மக்களின் சமூக அமைப்பு, அரசியல் முறை, பொருளாதார நிலை பற்றியும் ஆராய்ந்து நூல்களை எழுதினார்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள அறிஞர்களைக் காண வேண்டும், கல்விக் கழகங்களைத் தரிசித்து அறிவு பெற வேண்டுமென்ற உணர்வால் உந்தப்பட்ட முஸ்லிம் அறிஞர்கள் மாநிலத்தின் நாலாபக்கங்களுக்குஞ் சென்றார்கள்.

## புவியியல் வல்லுனர்

ஐரோப்பியர் பூமி தட்டை வடிவானது என்று நம்பிக் கொண்டிருந்த காலத்திலே முஸ்லிம்கள் பூகோள உருண்டைகளைச் செய்து பாடங்களை நடத்தினார்கள். உலகப்படத்தை முதன் முதலில் (கி. பி. 1160-ல்) வரைந்து அதில் நைல் நதியின் முகத்துவாரத்தைச் சரியாகக் குறிப்பிட்டவர் அல் இத்ரீஸ். இவரின் உலகப் படத்தைத் துணையாகக் கொண்டே கொலம்பஸ் அமெரிக்காவைக் காணப் புறப்பட்டார். அல் இத்ரீஸ் என்ற இப்புவியியல் வல்லுனர் பல்வேறு நாடுகளில் பிரயாணஞ் செய்து ஏராளமான புவியியல் நூல்களை எழுதினார். இவரின் நூல்கள் 1729-ம் ஆண்டில் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இவரது "அல் ரோஜரி" என்ற பூகோள நூல் உலகப் பிரசித்தி பெற்றது. இப்புவியியல் ஆசிரியர் மேல் நாடுகளில் அதிகம் கொண்டாடப்படுகிறார். இவர் ஐரோப்பிய நாடுகளில் பிரயாணஞ் செய்த போது; அப்போது சிசிலி நாட்டின் மன்னராயிருந்த இரண்டாம் ரோஜர் என்ற கிறிஸ்தவ அரசன் இவரின் ஆய்வுத் திறனையும், அறிவுக் கூர்மையையும் கண்டு மெச்சி அவரை அரண்மனையில் வரவேற்று உபசரித்தான்; ஒரு இலட்சம் நாணயங்களைப் பரிசாக அளித்ததோடு கப்பலொன்றையும் அன்பளித்தான். அம்மன்னனுக்கு அல் இத்ரீஸ் பூகோள உருண்டை செய்து கொடுத்தார். இந்நிகழ்ச்சி, கிறிஸ்தவ நாடுகளில் முஸ்லிம் புவியியல் ஆசிரியர்களுக்கிருந்த மதிப்பைப் புலப்படுத்துகின்றது.

கி. பி. 820-ம் ஆண்டில் வாழ்ந்த கவாரிஸ்ம் முகம்மது அல்கல்பி என்பவர் புவியியல் சம்பந்தமாகப் பத்து நூல்களை எழுதினார். இவர் எழுதிய நூல்களே முஸ்லிம்களால் எழுதப்பட்ட புவியியல் நூல்களுள் மிகப் பழையவை. கஸ்தான் முகம்மது கஸ்னவியின் ஆட்சியில் வாழ்ந்த அல்புருனி என்பவரும் புவியியல் உலகின் குறிப்பிடத் தக்கவர். இவர் சிறந்ததொரு விஞ்ஞானியாக மதிக்கப்படுகிறார். இவர் கி. பி. 973-ம் ஆண்டில் கவாரிஸ்ம் கிவா என்ற இடத்தில் பிறந்தார். இவர் பூமியின் ரேகைகளைக் கண்டு பிடிக்கச் சுலபமான வழி முறைகளை வகுத்தார். "கிதாப்-அல்-ஹிந்த்" என்ற பெயரில் சிறந்ததொரு புவியியல் நூலை எழுதினார்.

## விரிவான நூல்கள்

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இபின் குருதாதபிஹ் என்பவர் எழுதிய "பாதைகளும் இராச்சியங்களும்" என்ற நூல் புவியியல் துறையில் புகழ் பெற்றவை. இந்நூல் சீனா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளைப் பற்றி விளக்குவதோடு, முக்கியமான அராபிய வணிகப் பாதைகள் பற்றியும் குறிப்பிடுகிறது.

பாரசீகக் குடாக்கடலில் கப்பலோட்டிய ஸலேமான் ஸிராப் என்பவர் தூர கிழக்கு நாடுகளுக்குச் சென்று அது பற்றி விரிவான நூல்களை எழுதினார். அல்யாகூபி என்பவர் இஸ்லாமிய நாடுகளின் அரசியல், பொருளாதாரம் முதலியவை பற்றி "நாடுகளைப் பற்றிய நூல்" ஒன்றை எழுதினார். ஆசியாவுக்குள் பிரயாணஞ் செய்த பத்லான் இப்னு ஹம்மத் என்பவர் சிறந்த பிரயாணக் குறிப்புகளை வெளியிட்டார். இபின் ஹெளகல் என்பவர் முப்பதாண்டுகள் இஸ்லாமிய நாடுகளுக்குள் சுற்றுப் பிரயாணஞ் செய்து, தான் பெற்ற அனுபவத்தை நூலாக வெளியிட்டார். அஹ்மத் இப்னு மஜீத் என்ற மாலுமி கடற் பிரயாணக் குறிப்புகளை வெளியிட்டார். இவரின் துணை கொண்டே வாஸ்கோடிகாமா கடற் பிரயாணஞ் செய்தார்.

1192-ம் ஆண்டில் ஸ்பானியாவைச் சேர்ந்த இபின் சுபைர் மத்தியதரைப் பிரதேசத்திலுள்ள இஸ்லாமிய நாடுகளின் பூமிசாத்திர, வணிக, கலாச்சார வளர்ச்சி பற்றிய நூலொன்றைப் புனைந்தார். 1228-ம் ஆண்டில் யாகூத் என்பவர் தரை நூல் பற்றி அருமையான அகராதியொன்றை வெளியிட்டார்.

முஸ்லிம் புவியியல் ஆசிரியர்களுள் இபுனு பதூத்தாவுக்குத் தனியிடமுண்டு. இவரின் புவியியல் நூல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. 1325-ம் ஆண்டில் தமது இருபத்தி ரெண்டாம் வயதில் புறப்பட்டு முப்பதாண்டுக் காலம் உலகின் பல்வேறு நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்து அரிய நூல்களை எழுதினார்.

இவ்வாறு புவியியல் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம் அறிஞர் பெரு மக்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது; போற்றிப் புகழத் தக்கது.

# நேருவின் இலங்கைப் பயணம் பயனுள்ளதாக அமையட்டும்!

## உரிமை வேண்டி நிற்போரை எந்தச் சக்தியும் அழிக்க முடியாது

## 'திராவிடநாடு' கூறுகிறது!

இம்முறையேனும் நேரு அவர்கள் தம் இலங்கைப் பயணத்தை அந்நாட்டிற்குப் பயனுள்ள பயணமாக ஆக்கிக் காட்டுவார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அந்நாட்டில் மொழிச்சிக்கலும், நாடற்றோர் சிக்கலும் மாய்ந்தொழியுமாறும், அங்கே அன்பும், ஒற்றுமையும், அமைதியும் நிலவிச் சூலவுமாறு வழிவகை காண்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார், அதில் தம் மேலான செல்வாக்கைப் பயன்படுத்துவார்,என எதிர்பார்க்கிறோம். சென்ற தடவைகளைப்போல வெறும் மாம்பழப் பயணமாக இந்தத் தடவையும் நேரு அவர்களின் இலங்கைப் பயணம் அமையாமல், பயனுள்ள பயணமாக அமையுமென நம்புகிறோம்!

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஈழத்தின் நிலைமையையும், இன்றிருக்கும் நிலைமையையும் கூறு நோக்கிப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றோர், உண்மையிலேயே கண் கலங்காமல் இருக்க முடியாது. அந்த அளவுக்கு இன்று மாறுதல்—எதிர்பாராத மாறுதல்—ஏமாற்றந் தரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

யார் இலங்கையை வளமாக்கி வனப்புள்ளதாக ஆக்கினரோ, அவர்கள் இன்று வாழ முடியாதவர்களாக ஆக்கப்படும் கொடுமை, நன்றி கொல்லும் கொடுமையைவிடக் கொடியதாகக் கருதுமளவுக்கு இலங்கை அரசு தமிழ் மக்களை, அவர்களால் பொறுக்க முடியாதபடி தொல்லைகள் பல தந்தவண்ணம் உள்ளது.

சிறுபான்மை மக்களுக்குத் தரப்படவேண்டிய நியாயமான உரிமைகளை எதனையும் தர இசையாத இலங்கை அரசின் போக்கைக் காணும் நடுநிலைமையாளர் எவரும் வருந்தாமல் இருக்க முடியாது.

வாழ வைத்தவர்களை வதைக்கிறார்களே! இது மலிதப் பண்புக்கு அப்பாற்பட்ட ஒரு அநீதியாயிற்றே என்று எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.

இன்று இலங்கைவாழ் தமிழர் கேட்பதெல்லாம் இந்த நாட்டைத் தவிர எந்த நாட்டையும் நாங்களறியோம்; நாடற்றவர்கள் என்று எங்களைச் சொல்லாதீர்கள்; நாடற்றவர்கள் என்று எங்களை எங்கோ கப்பலேற்றி அனுப்பிவிட எண்ணாதீர்கள். எங்களையும் இங்கே வாழ விடுங்கள் என்பதுதான். நாங்கள் பேசும் மொழி தமிழ்; அது எங்கள் சொந்த மொழி, எங்கள் மொழியை எங்களிடமிருந்து பறிக்க எண்ணாதீர்கள் என்பதுதான். நல்லெண்ணம் படைத்த சிங்களத் தலைவராயினும், மற்றோராயினும் இலங்கைவாழ் தமிழர் விடுக்கும் இந்த வேண்டுகோள் நியாயமற்றதெனச் சொல்ல முன்வர முடியாது; முன்வரமாட்டார்கள்.

எனினும் அங்கே கிளர்ச்சிகள் ஓய்ந்தபாடில்லை. அடக்குமுறை அடங்கிய பாட்டைக் காணோம்! கடந்த சில வருடங்களாக அங்கே எழுந்தெழுந்து—ஓயாமல்— நடைபெற்றுவரும் கொந்தளிப்புகளைக் காணும் நல்லுள்ளம் படைத்தோரெல்லாம் வருந்தாமலிருக்க முடியாது.

ஒருபுறம் நாடற்றவர்கள் எனப்படும் தமிழர்களின் பிரச்சினை இப்படித் தலைதூக்கிக் கொண்டு நிற்கிறது. பிறிதொருபுறம் மொழியுரிமை கோரி ஈழத் தமிழர்கள் கிளர்ச்சிகள் புரிந்தவண்ணம் இருக்கின்றனர். சென்ற ஆண்டு முழுவதும் 'சிங்களம் மட்டுமே' என்ற இலங்கை அரசினரின் மொழிக் கொள்கையை எதிர்த்து அறப்போர் புரிந்து சிறைசென்ற ஈழத் தமிழர்கள் திரும்பவும் இவ்வாண்டு—சிறையினின்று அவர்கள் வெளிவந்த பின்னரும்—மொழியுரிமை கோரி ஹர்த்தால் செய்வதில் ஈடுபட்டேயுள்ளனர்.

இதிலிருந்து பெறப்படும் உண்மையை, அதாவது உரிமை கோரி நிற்கும் மக்களை எத்துணை தடவை தான் சிறையிலிட்டு வாட்டினாலும், பூட்டினாலும், அவர்களின் உரிமைக் கிளர்ச்சியை எந்த ஆற்றலினாலும் அடக்கிவிடவோ, அழித்துவிடவோ முடியாது. அதற்கு ஒரே பரிகாரம், உள்ளத்தை உள்ளபடி ஆய்ந்து உரிமை வேண்டுவோர்க்கு உரிமைஅளித்துவிடுவதே என்ற உண்மையை உணர்ந்து ஈழத்தில் அரசுக் கட்டில் ஏறியிருக்கும் ஆட்சியினர் நல்லதொரு முடிவுக்கு வரவேண்டுமென விழைகிறோம். வளமும், திருவும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள செம்மைத் திருமொழியாம் தமிழ் மொழியை இரண்டாந்தர மொழியாக எண்ணுவதும், அவ்வழி இயங்குவதும் சால்பல்ல என்று பொது நிலையார் கூறும் ஆய்வுரையையும் இந்த வேளை மனத்திற்கொண்டு இலங்கையரசு நல்லதொரு முடிவினை நல்குதற்கு முன்வருமென எதிர்பார்க்கிறோம்!

இந்தச் சூழ்நிலையில்தான் பண்டித நேரு அவர்கள் அண்மையில் ஈழம் செல்லவிருக்கிறார் என்பதை அறிகிறோம்.

நேரு அவர்கள் உலகின் எந்தப் பாங்கில் அமைதி குலைந்தாலும் அங்கெல்லாம் கச்சை கட்டிக்கொண்டு அமைதிப் புறாவைப் பறக்க விடுபவர் எனப் பெயர் பெற்றவர். உலகெங்கும் அமைதிப் பணிக்காக ஓடோடிச் செல்லும் நேரு அவர்கள் அருகிலிருக்கும் இலங்கையில் உள்ள அமைதியின்மையை 'என்னவோ ஒன்றுமில்லாதது' என்ற போக்கில் மேல் நோக்காகப் பார்ப்பது நமக்கெல்லாம் வேடிக்கையாக அல்ல, விசித்திரமாகத் தென்படுகிறது. விசித்திரம் என்று கூறுவதைவிட வேதனை தரும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறதென்று கூறுவதுதான் மிகப் பொருத்தமாகும். —"திராவிட நாடு"





ராஜ பீடி
ஸ்பெஷல்

# ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

## ராஜ பீடி ஸ்பெஷல்

ஒன்றேதான்

## புகைத்து பலனடையுங்கள்

# ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதம் போட்டி

ஸ்ரீமான் லிமிடெட் ஸ்தாபனத்தார் வெளியிட்டுள்ள "குமுதம்" படத்துக்கான போட்டியை அறிமுகப்படுத்துவதில் பெருமை அடைகிறோம்.

இப் போட்டியில் பங்கு பற்றி கவர்ச்சிகரமான பரிசுகளைப் பெறுமாறு ரசிகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## போட்டி விபரம்:—

"குமுதம்" படத்தில் முக்கிய பாத்திரங்களில் தோன்றும் நடிக நடிகையர்களின் பூர்த்தியுறாத அரைகுறை உருவங்கள் 5 இங்கே தரப்பட்டுள்ளன. இவர்கள் யார்? என்பதைக் கண்டு பிடித்து வரிசைப்படி எழுத வேண்டியதுதான் உங்கள் வேலை.

கண்டு பிடித்து விட்டீர்களா?

ஒரு காகிதத்தில் ஒரே பக்கத்தில் இலக்கங்களை வரிசைப்படி எழுதி, எதிரே சரியான விடையை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் விடைகளுடன் "சுதந்திர"னில் வெளியாகி வரும் கூப்பன்களில் ஒன்றைக் கத்தரித்து, அதில் பெயர் முகவரி முதலியவற்றைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் "ஸிலிமான்ஸ் லிமிடெட்" திரைகளில் ஏதாவதொன்றில், அண்மையில் படம் பார்த்த நுழைவுச் சீட்டு அடிக்கட்டை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.




### நிபந்தனைகள்

★ ஒரே நபர் எத்தனை விடைத்தாள்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும் போட்டிக் கூப்பனும், அடிக்கட்டையும் இணைத்திருத்தல் வேண்டும்.

★ "சுதந்திரன்" போட்டிக் கூப்பனும், அடிக்கட்டையும் இல்லாத எந்த விடையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி சம்பந்தமாக சுதந்திரன் நிறுவனத்துடன் எதுவிதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளுதல் கூடாது. சுதந்திரன் நிறுவனத்தின் ஊழியர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

★ சரியான விடைகள் யாவற்றையும் தெரிவு செய்து திருவுளச் சீட்டுப் படிதான் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் வழங்கப்படும்.

★ "குமுதம்" போட்டி ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

## முடிவு தேதி 7-7-1962

சனிக்கிழமை நண்பகல் 1 மணி.

பரிசு பெற்றோர் விபரம்:

15—7—1962 சுதந்திரனில் வெளியாகும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:—

குமுதம் போட்டி ஆசிரியர்,
"சுதந்திரன்"
தபால் பெட்டி: 1183,
கொழும்பு-12.

## பரிசு விபரம்

சரியான விடை அனுப்பியவர்களில் மூவருக்கு மட்டும் பரிசு வழங்கப்படும்.

1-வது பரிசு— 6 திசர்வ் டிக்கட்டுகள்.
2-வது பரிசு— 4 றிசர்வ் டிக்கட்டுகள்.
3-வது பரிசு— 4 முதலாம் வகுப்பு டிக்கட்டுகள்.

பரிசு பெறுபவர்கள் ஸிலிமான்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் மட்டுமே படம் பார்க்கலாம்.

கீழ்காணும் பத்திரத்தை கத்தரித்து நிரப்பி அனுப்பவும்.

கூப்பன் இல. 3

"குமுதம்"

புது முறை சினிமாப் போட்டி

பெயர் ..........................................

முகவரி ..........................................

..........................................

# தாயகம் சேர்ந்தார் சிவாஜி

## விமான நிலையத்தில் வரவேற்பு

## நடிகர் சங்கப் பாராட்டு

ஸ்ரீவாஜி கணேசன் தாயகம் வந்து சேர்ந்தார். 3 மாதங்கள் அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் பிரயாணம் செய்து விட்டு சிங்கப்பூர் வழியாக 24-6-62 பிற்பகல் 3.30க்கு மீனம்பாக்கம் விமான நிலயத்தில் வந்திறங்கினர். லட்சோப லட்சம் மக்கள் கூடிநின்று ஆரவாரித்து, தங்கள் உள்ளம் கவர்ந்த நடிகர் திலகத்தை வரவேற்றனர்.

நடிக நடிகைகளும், படவுலகப் பிரமுகர்களும் முண்டியடித்துக் கொண்டு சிவாஜி கணேசனுக்கு மலர் மாலைகள் அணிவித்தனர். மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஜீப் வண்டி ஒன்றில் சிவாஜியை வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஊர்வலம் சென்ற வீதிகளின் இருமருங்கிலும் ஜன சமுத்திரம் அலைமோதியது. மாம்பலத்தில் உள்ள சிவாஜி கணேசனது இல்லத்துக்கு ஊர்வலம் வந்தடைந்ததும், வள்ளிநுன்னியிருக்கும் விநாயகர் கோவிலுக்குச் சென்று சிவாஜி வணக்கம் செலுத்தினர்.

விமானத்திலிருந்து இறங்கிய சிவாஜியின் கழுத்தில் ஓர் முத்துமாலையை சிவாஜியின் மனைவி திருமதி கமலா சூட்டினர். சிவாஜியின் தாயாரும், தந்தையாரும் பல வருடங்களுக்குப் பின்னர் விமான நிலையத்தில் அருகருகே தென்பட்டனர். தங்கள் மகன் உலகப் புகழ் ஈட்டி வருவதைக்கண்டு இருவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். சிவாஜியின் அண்ணன் திரு. வி. சி. தங்கவேல் சிவாஜியை அணைத்து ஆலிங்கனம் செய்து கொண்டார்.

வீட்டில் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டதும், மீண்டும் ஓர் பிரமாண்டமான ஊர்வலம் தொடங்கியது. எண்ணற்ற மக்கள் புடைசூழ சிவாஜி கணேசன் சென்னைத் தெருக்களில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். மேடைபோல் அலங்கரிக்கப்பட்ட ஒரு லொறியில் சிவாஜி ஏறி நின்றார். அவர் அருகில் டாக்டர் நடிகர், சந்திரபாபு ஆகியோர் ஏறிநின்றனர். பின்னர் எஸ். எஸ். ஆரும் ஏறிக் கொண்டார். ஊர்வலம் டி. எஸ். ஹைறஸ்கூலை அடைந்தது. அங்கே நடிகர் சங்க சார்பில் வி. நாகையா தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடந்தது.

சிவாஜி கணேசனுக்குப் போடப்பட்ட மாலைகள் ஒரு சிறு மலைபோல் காட்சியளித்தது. சிவாஜியைப்பாராட்டி சந்திரபாபு, ஜெமினி, சாரங்கபாணி, சகஸ்ரநாமம், ஏ. பி. நாகராஜன், ஏ. எஸ். நாராயணபிள்ளை ஆகியோர் பேசினர்.

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தமது சுற்றுப்பிரயாணத்தைப்பற்றி சிவாஜி தெளிவாகக் கூறினர்.

பட விமர்சனம்

## குமுதம்

குமுதம் ஒரு பிறவிக் குருடி. யாருனுலும் குணங் குறையாத குலக் கொழுந்து. அண்ணனே அசுரன். குமுதத்துக்கு வாய்த்த கணவன் குமரன். தன் அண்ணன் சிதம்பரத்தின் ஆணைக் கட்டுப்பட்டு, அவர் மகள் அஞ்சலைக்கு குமுதத்தின் அண்ணை சாமிலிங்கத்தை மணம் முடித்து வைத்தான். அஞ்சலையின் நல்வாழ்வுக்காக தன் இதயம் கவர்ந்த சாந்தியை மறந்து பிறவிக்குருடியான குமுதத்தின் கைப் பிடிக்கிறான்.

அன்பு கொண்ட உள்ளங்கள் ஒன்றி வாழ முடியாது போனாலும், அன்புக்காகவும், கடமைக்காகவும்— பரஸ்பர உதவியுடனும், உறுதியுடனும் தியாகம் புரிவதை மையமாக வைத்து அமைந்துள்ளார் கதையை, கே. எஸ். கோபாலகிருஷ்ணன். வசனத்தையும் அவரே எழுதியுள்ளார்.

நாற்றுக் கணக்கான படங்களை உருவாக்கிய மாடர்ன் தியேட்டர்ஸார் இப் படத்தை சுவைபடப் படமாக்கியுள்ளனர்.

குமுதமாகத் தோன்றும் சௌகார் ஜானகி குருடியாக நடிக்கிறார். தனக்குக் கலியாணம் பேசும் போது உண்டாகும் சாந்த பேச்சு வார்த்தைகளால் மனம் வெதும்பும் போது பார்ப்பவர்களைப் பரிதவிக்கவைத்து விடுகின்றார். செல்வந்தர் பாரிஸ்டர் முத்துசாமியின் மகள் சாந்தியாகத் தோன்றும் விஜயகுமாரி இப்படத்தின் மூலம் மேலும் ஒருபடி ஏறி விட்டார். தனது தந்தைக்கு எதிராக வே கோர்ட்டில் வாதம் புரியும் போது மெய் சிலிர்க்கிறது. குமரனின் அண்ணன் சிதம்பரமாகத் தோன்றும் முத்தையா தனது சிறந்த பாகத்தைக் வெளிக்காட்டியுள்ளார். அஞ்சலையின் கைபிடித்து, கொலைக் குற்றம் புரிந்துவிட்டு கோமாளி வேடம் போடும் ராதா கச்சிதமாகக் 'கத்தி' நடித்துள்ளார். அஞ்சலை பாகத்துக்கு பி. எஸ். சரோஜா கன பொருத்தம்.

ராஜேந்திரன் வருகிறார் போகிறார் என்றாலும் அவரது நடிப்புப் பாணியே தனி. குமரனுக்குத் தோன்றுகிறார். அஞ்சலை, சாந்தி, குமுதம், இம் மூவருக்கும் கோணம் வகித்துக் கொடுக்கும் ஒரு குருவாகவிளங்குகிறார். இன்னும் கொஞ்சம் சிரத்தை காட்டியிருக்கலாம் நடிப்பில்.

பாரிஸ்டர் முத்து சாமி— நமது ரங்கராவ்தான். முகத்தில் ஒரு வெட்டு, அங்கத்தின் ஒரு பகுதியில் ஒரு சிறு 'கட்டு' அவ்வளவும்தான் அவர் நடிப்பு. அவ்வளவும் அவ்வளவு தான்.

ஏற்கனவே பல வீடுகளுக்குள் நுழைந்து விட்ட "மியாவ் மியாவ் பூனைக்குட்டி," "கல்யாணமான வரே சௌக்கியமா" ஆகிய பாடல்கள் பொருத்தமான இடங்களைப் பெற்றுள்ளன. சீர்காழியின் குரலுக்கு கவிஞர் இயற்றிய "கல்லிலே கலைவண்ணம் கண்டான்" பாடலுடன் மாமல்ல புரம் காட்சிகளும் அபாரம்.

ஏ. சுப்பராவ் டைரக்ட் செய்த "குமுதம்" இலங்கை ரசிகர்களின் ஏகோபித்த [illegible]

—பாஹ—

பட விமர்சனம்

## கல்பனா

தன் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களைத் தவிர்க்கவும் மனப்போராட்டத்திற்கு ஓய்வு காணவும் தன் தாயுடன் காஷ்மீர் செல்கிறாள் கல்பனா. அங்கே மனைவியை இழந்தவரும் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையுமான ஓவியர் அமாரைச் சந்திக்கின்றாள். இருவரும் தங்கள் துன்பங்களை மறந்து உறவாடுகின்றனர். ஆனால் கல்பனா அழகிய காஷ்மீரை விட்டு மறைந்து விடுகிறாள்.

பின்னர் சிறந்த நாட்டியக்காரியாக பம்பாயில் பிரசன்னமாகின்றாள்.

நாட்டியக்காரி கல்பனாவாக வருகிறார் பத்மினி. அவருக்கு இரட்டை பாகம்.



பம்பாய் திரும்பும் அமார் ரயிலில் ஆஷா குமாரியைக் காண்கிறார். கல்பனாபோன்ற உருவத்தவளாதலால் கல்பனா என்று அமாரின் தாய்க்குக் கூறப்படுகிறது. ஆஷாவையே தன் மருமகளாக அவர் கருதுகிறார். அமார் அதிபராக இருக்கும் பாடசாலையில் நாட்டிய உபாத்தியாயினியாக வரும் ஆஷா குமாரியின் பாகம் ராகினியுடையது. ராகினிக்கு 'கல்பனா' ஒரு முன்னேற்றத்தைக் கொடுத்துள்ளது.

ஓவியர் அமார் தான் பிரபல நடிகர் அசோக் குமார். அனுபவசாலியின் நடிப்பு தெரிகிறது. ஆனால் விசேடமாக காஷ்மீர் காட்சிகள் கண்ணுக்குக் குளிர்மையாக அமைகின்றன. ஆனால் தொடக்கத்தில் சிறிது நேரம் தான் இந்த இன்பம். பின்னர் 'செட்டு'க்கே போய் விடுகிறோம்.

'கல்பனா' என்றால் நாட்டியத்திற்குக் குறைவிராது என்று எல்லோர்க்கும் தெரியும். அதுவும் பத்மினி, ராகினி என்றால் கூறவும் வேண்டுமா? பத்மினியும், ராகினியும் ஆடும் போட்டி நடனம் மறக்க முடியாதது. சங்கீதம் ஓ. பி. நய்யருடையது. செவிக்கினிமையாக இருந்தது 'கல்பனா'வை நடனத்திற்கென்றே பார்க்கலாம்.

—மதி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிபீடமே! சமஷ்டி அளித்து சமரசம் காண்பாயா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள ஆட்சி பீடமே! உன்னைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியது சிங்களவரே. நீ கண்துடைப்புக்காகக் காட்ட வேண்டிக்கூட ஒரு தமிழ் பேசும் பிரதிநிதியும் உனது கட்சியிலில்லை. உனது ஆட்சி அதிகாரமும் சகல சட்டங்களும் உன்னைப் பதவியிலேற்றியவர்களிடமே செல்லுபடியாகும். அது எந்த விதத்திலும் எங்களைப் பாதிக்க முடியாது.

மக்கள் விருப்பம் மக்கள் நலன் என்கிறாயே—நாம் மாக்களா? இல்லையெனில் எங்கள் விருப்பம், எங்கள் நலன் என்று எப்பொழுது நீ கருதினாய்? மாறாக வெறுப்பையே வளர்த்தாய்—நாசமே கருதினாய்.

முறைப்படி எம்மால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளை அலட்சியம் செய்கிறாய்—அவமானப் படுத்துகிறாய்—சிறையிலிடுகிறாய்—ஆனால் எம்மால் வெறுத்தொதுக்கப்பட்டு வரும் சில வகுப்புவாத அரசியல்வாதிகளின் கூற்றைச் சிரமேற்கொண்டாடுகிறாய். ஒரு கே. எம். பி. ராசரத்தினம் உண்ணாவிரதமிருந்தால் தமிழரின் நலனைக் கருதி இயற்றப்பட்ட ஒரு சட்ட தீர்மானம் உடனே ரத்தாகிவிடும்.

புத்த பிக்குகளின் பிடிவாதத்திற்காகப் பல லட்சம் தமிழரின் தலைவரோடு செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தம் காற்றிலே பறந்தது.

இரண்டு பிக்குகள் உண்ணாவிரதமிருந்த உடனே இரவோடு இரவாக எம்மீது அடக்குமுறை ஏவினாய்—ராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டாய்—தொண்டர்களைக் குற்றவாளிகளாக்கிச் சிறையில் தள்ளினாய்.

எம்மை இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக—நிரந்தர அடிமைகளாகப் படிப்படியாகத் திட்டமிட்டுச் சட்டமியற்றுகிறாய்.

எமக்கென ஒரு மொழி, ஒரு பிரதேசம், சமயம், கலாச்சாரம், சரித்திரம் எதுவுமில்லையா? அறிவில்லையா? அன்றி ஆளும் ஆற்றல்தானில்லையா?

## புலி புல் புசியாது

பசித்திறந்து ரொட்டியில்லையென்ற பிரஞ்சுதேச மக்களை "ரொட்டியில்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்" என்றனாம் அந்நாட்டு ராணி! விடுதலை வேட்கை கொண்ட தமிழரைச் சிங்களம் படித்துச் சிறப்புறு என்கிறாய்! புலி பசித்தாலும் புல்லைப் புசியாது. உனக்கு எங்கள் வேட்கை எப்படிப் புரியும்?

சங்கிலியன் முதல் அருணாசலம், இராமநாதன், செல்வநாயகம் வரை விடுதலை வேண்டியவர் தமிழர் எங்களை யாரும் ஆளவேண்டாம், எம்மை நாமே ஆளுவோம். எமது மொழியைக், கலையை, பூமியை நாமே வளர்ப்போம்.

மறைமுகமாக உனது மொழியையும், திரித்து எழுதப்பட்ட சரித்திரத்தையும் எங்கள் குழந்தைகளுக்குப் பலவந்தமாகப் பறித்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் வாயிலாகப் புகட்ட முயலாதே

ஒற்றுமைபற்றி ஓயாமல் ஓதும் ஆட்சி பீடமே, ஒற்றுமைக்கு அர்த்தம் உன் வரையில் என்ன என்பதை அறிந்துவிட்டோம். 1956 ஜூன் 5, 1958 மே, 1961 ஏப்ரல் நிகழ்ச்சிகள் இந்த அரசாங்கத்தின் ஒற்றுமைக் கரங்கள் தமிழரை எப்படிக் கட்டித் தழுவும் என்பதை அழகாக எடுத்துரைத்துவிட்டன.

இன்று இலங்கையென்றால் அவன் சிங்களவனாயிருக்க வேண்டும்; அல்லாவிடில் சந்தேகத்தின் பேரிலேயே நாடு கடத்தப்பட வேண்டியவன். இதுதான் (அ)தர்மதீபத்தின் இன்றைய நிலை.

எம்மை விரோதித்துக் கொண்டவர்கள் அநியாயமாக அகால முடிவெய்தினர் அல்லது" அரசியல் துறவிகளாயினர். கடந்த காலப் பிரதமர்களது முடிவு இதைக் கூறும்.

தலைவாசலையன்று தொப்பிக்காரனுக்குத் திறந்துவிட்டவர்கள் இன்று தலைமைப் பீடத்தில்—விடுதலை[illegible]த்திட்டவர்கள் வாழும் வகையறியாது விழிக்கும் நிலை.

இது விதியின் சதியா? அன்றிக் காலத்தின் கோலமா?

விதியின் சதியாயின் அதை மதியால் மாற்றுவோம்—காலம் எழுதிய கெட்ட கோலமாயின் அதைஅழித்து அழகாக எழுதுவோம்.

உண்மையாக நாட்டின் ஒற்றுமையை வேண்டி நிற்பின், இனறே தமிழரின் ஏகோபித்த வேண்டுகோளாகிய சமஷ்டியைஎமக்களித்து ஒற்றுமையை வளர்க்க நீ வசதி கோல வேண்டும். செய்வாயா அதை?

வாழ்வா தாழ்வா என்ற எல்லைக்கு விரட்டப்பட்ட தமிழன் வாழ்வே என வீறு கொணடெழுந்து விட்டான். தமிழன் தனது உடலில் கடைசித் துளி இரத்தம் இருக்குமவரை, இறுதி மூச்சுப் பிரியும்வரை தன் இனத்தின் விடுதலைக்குப் போராடியே தீருவான்.

துப்பாக்கிகண்டு தொடை நடுங்குபவனல்ல தமிழன்.

தியாகம் என்றால் இளைப்பவனல்ல தமிழன்.

விடுதலை வீரன் தமிழன்—ஆண்டு அடக்கப்படுவனல்ல, ஆட்சி பீடமே! இதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.



மட்டக்களப்பு தமிழ் மாணவ மன்றத்தின் 10 வது ஆண்டு விழா மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு எம் பி. திரு. செ. இராசதுரை இவ் விழாவுக்குத் தலைமை தாங்கினார். கவிஞர் நா. சி. ஆனந்தன், பண்டிதர் வி. சி. கந்தையா ஆகியோர் பேசிக்கொண்டிருப்பதை மேலேயுள்ள படத்திலும், மாஸ்டர் சிவலிங்கம் கோஷ்டியினரது வில்லுப்பாட்டு நடைபெறுவதையும், மக்கள் பார்த்து ரசிப்பதையும் கீழேயுள்ள படங்களிலும் காணலாம்.

—படம்: இரவம்.

## திடீர்ப் புரட்சி!

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

குருஷேவ் சொன்னால் நாம் எப்படி மறுக்க முடியும்? அவர் எதைச் சொன்னாலும் மறு ஒலிபரப்புச் செய்ய வேண்டியது நமது தலையாய கடமைதான்... லெனினின் சடலத்தின் கருகிலிருந்து ஸ்டாலினின் சடலத்தை அகற்றியதைச் சுட்டிக் காட்டி 'சவத்திற்கே சமத்துவம் அளிக்காத நீங்கள், எப்படிச் சமத்துவத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்' என்று யாராவது கேட்டால்......?"

"அவர்கள் கெட்டார்கள் பிற்போக்குவாதிகள். புதுமையின் புரட்சி உத்தி தெரியாதவர்கள். நீங்கள் நாளைக்கே தோழர் குருஷேவின் குரலை முழங்குங்கள்" உற்சாகமூட்டினார் முற்போக்கு எழுத்தாளர். புதுத் தெம்பு பெற்றார் புரட்சிதாசன்.

அடுத்த நாள்...! அதேமைதானம், அதேகொடி, அதே கூட்டம், அதே பேச்சாளர். புரட்சிதாசன் தனது புரட்சிகரமான வாயைத்திறந்தார். தோழர் குருஷேவின் ஸ்டாலின் ஒழிப்புச் செய்தியை மறுஒலிபரப்புச் செய்து முழங்கினார். ஒரே கைதட்டல் 'ஸ்டாலின் ஒழிக!' என்ற கோஷம் செங்கொடியைக் கிழித்துக்கொண்டு வானத்தை முட்டி மோதியது.

## தமிழில் விண்ணப்பியுங்கள்!

விற்பனை வரி இலாகாவுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் அனுப்பலாம். அப்படியிருந்தும், தமிழ் பேசும் வியாபாரிகள் ஆங்கிலத்திலுள்ள பத்திரங்களையே உபயோகிக்கிறார்கள். இது தவறு. அவர்கள் தமிழ்ப்பத்திரங்களிலேயே தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவற்றைக் கவனிக்கத் தகுதி வாய்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் விற்பனை வரி இலாகாவில் உள்ளனர்.

தெரிந்தோ தெரியாமலோ ஆங்கில விண்ணப்பப் பத்திரங்களை உபயோகிக்கும் இவ்வியாபாரிகள் இனிமேலாவது தயக்கம் எதுவுமின்றித் தமிழ்ப் பத்திரங்களில் தமது [illegible] பார்க்கின்றோம்.

# தியாகம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை உயிரைவிட—உரிமையை, உரிமைக்காக உயிரையும் விடத் துணிந்து அப்படியே நகராது இருந்தனர்.

இரண்டு இராணுவ வீரர்கள் செல்வராஜனை அணுகினர். அவன் அசையவில்லை.

ஒருவீரன் குனிந்து செல்வராஜனைக் கரத்தில் இறுகப் பற்றித் தூக்கினான். செல்வராஜனோ உயிர் அற்றவன் போல அப்பிடியிலிருந்து துவண்டு விழுந்தான்.

இராணுவ வீரர்கள் ஏராளமான தொண்டர்களை அப்புறப்படுத்தினர். ஆனால் உரிமைக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்த தொண்டர்களை மட்டும் அப்புறப்படுத்த முடியாது திண்டாடினர்.

இராணுவ மோட்டார் ஒன்று புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய அதிகாரி அங்கு நின்ற வீரர்களை அழைத்து ஏதோ பேசிவிட்டு, அவர்களிடம் ஏதோ உத்தரவு பிறப்பித்தான்.

படார், படார் என்று துப்பாக்கிகள் ஒலித்தன. குண்டுகள் புகை கிளப்பிக் கொண்டு காற்றில் பறந்தன.

இராணுவ வீரன் ஒருவன் செல்வராஜன் மார்புக்கு நேரே துப்பாக்கியால் குறி வைத்தான். செல்வராஜன் அசையவில்லை. அவன் எழுப்பிய உரிமைக்குரல் மட்டும் காற்றில் அசைந்தது.

'படார்' என்ற ஒலி. செல்வராஜன் மார்பில் குண்டு ஒன்று பாய்ந்தது. அவன் நிலத்தில் சாய்ந்தான். அந்தநிலையிலும்அவன் இதழ்கள் 'உரிமை உரிமை' என்று குரல் எழுப்பின.

*

முதல் உதவி நிலையத்தில் உயிர் இழந்தவர்களுமாக, குற்றுயிரானவர்களுமாக, காயப்பட்டவர்களுமாக, குவிந்து கிடந்தனர். அங்கு வேலை பார்க்கும் தாதிப் பெண்கள் தீவிரமாக தயது முதல் உதவிச் சேவையில் ஈடுபட்டனர்.

சிறிது தாமதமாக அந்த இடத்துக்கு வந்த பத்மினி ஒரே வட்டத்தில் அங்கு கிடந்தவர்களைப் பார்த்தாள். அவள் கண்கள் ஓர் இடத்தில் வந்ததும் நிலையாக நின்றன.

அங்கே செல்வராஜன்மார்பிலிருந்து குருதி பாயக் கிடந்து துடிப்பதைக் கண்டு கொண்டாள். உடனே விரைந்து சென்று செல்வராஜனைத் தூக்கி அப்புறப் படுத்தி, அவனை மடிமேல் கிடத்தி, அவன் வாயில் தண்ணீர் விட்டு, அவனை மலர்க் கரத்தினால் வருடினாள்.

அவன் திடுக்கிட்டு விழித்தான். தான்காண்பதுகனவா அன்றி நினைவா என்று புரியாது பத்மினியின் முகத்தைக் கண்வெட்டாது சிறிது நேரம் அப்படியே பார்த்துவிட்டுக் கரம் ஒன்றை அசைத்து ஓர் கடிதத் துண்டை எடுத்துப் பத்மினியிடம் நீட்டினான்.

கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பத்மினி, அதனைப் பிரித்துக் கொண்டதும், அது அவள் எழுதிய கடிதம்தான் என்பதைப் புரிந்து கொண்டாள். அந்தக் கடிதம்தான் செல்வராஜனைத் தியாக மூர்த்தியாக்கியது என்பதைப் புரிந்து கொண்டதும் அவள் இதழ்களில் புன்னகை தவழ்ந்து விளையாடியது.

செல்வராஜன் இதழ்கள் அசைந்தன. வார்த்தை ஒன்றும் வெளிவரவில்லை. அவன் கண்கள் மட்டும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தின.

பத்மினியின் கண்களும் கலங்கின. செல்வராஜன் வெகு விரைவில் இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்று விடுவான் என்பதை அவன் நிலையிலிருந்து புரிந்து கொண்டாள். அதற்குமுன் அவன் உள்ளம் சாந்தியடைய அவள் செய்யக் கூடியது ஒன்றே ஒன்று தானே! அதனை அவள் செய்யாவிட்டால் அவன் உள்ளம் சாந்தியடையுமா? அவன் உள்ளம் சாந்தி அடைய வேண்டுமானால்! பத்மினி செல்வராஜனின் மனைவியென்ற பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். அதை அவள் செய்வாளா?

அவள் ஏதோ முடிவானாள். அவள் எழுந்தாள். அவன் மார்பிலிருந்து வடிந்து கொண்டிருந்த குருதியில் தனது கரத்தினால்தொட்டுத் தனது நெற்றியில் திலகமிட்டாள். பின்பு அவன் கால்களில் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அவள் செயலகளை செல்வராஜனால் தடை செய்ய முடியவில்லை.

இருவர் இதழ்களிலும் வார்த்தைகள் பிறக்கவில்லை. இருவர் கண்களிருந்து கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோடியது.

திடீரென, செல்வராஜன் உணர்வு பெற்றவனாக, எழுந்து, கரத்தினால் பத்மினியை அணைத்துத் தன் மார்பருகே இழுத்தான். முடியவில்லை. அப்படியே பத்மினியின் மடிமேல் சாய்ந்தான்.

மறுகணம் செல்வராஜனின் உயிரற்ற உடல் பத்மினியின் மடிமேல் கிடந்தது.

அவளது அத்தானின் தியாகத்தின் பிரதிபலிப்பாகப் பத்மினியின் முகத்தில் அசாதாரண ஒளி ஒன்று வீசியது. அவள் இதழ்களில் ஓர் புன்னகை தோன்றி மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வேலையில்லாத் திண்டாட்டமும் தமிழரும்

"இளங்கண்ணன்"

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் எத்தனையோ மக்கள் அல்லலுறுவதை இன்றைய உலகில் நாம் காண்கின்றோம். அதுவும் முக்கியமாக இலங்கையிலும், இந்தியாவிலும் வேலையில்லாத் திண்டாட்டம் மிக மோசமான நிலையில் உள்ளதையும், இதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் அறிவோம்.

இலங்கையிலே வேலையில்லாமல் எத்தனையோ மக்கள் வாழ வழியின்றி வாழ் நாளை வீணாகக் கழிப்பதைக் காண்கிறோம். அதுவும், இலங்கையில் தமிழர் தருந்த வேலையின்றி இருக்கின்றனர். முன்னையதிலும் இன்று தமிழர் வேலையில்லாது திண்டாடுகின்றனர். இலங்கை சுதந்திரமடைந்தபின் சிங்களவரே ஆட்சி நடத்திவருகின்றனர். அவர்கள் தம்மினத்துக்கு உயர் தர உத்தியோகங்களை வழங்கி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுப்புணர்ச்சி மிக்க தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றனர்.

இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தை முற்றாக ஒழிக்க இயலாவிடினும் ஓரளவிற்காவது ஒழிக்க முற்பட வேண்டும். முக்கியமாக நம் தமிழரின் வேலையில்லா நிலையை அகற்றவேண்டும். இதை ஒழிப்பதற்குரிய சில வழிகளை ஆராய்வோம்.

எத்தனையோ தமிழ் மக்கள் படித்து விட்டு உத்தியோகத்தை நம்பியிருக்கின்றனர். அவர்களெல்லாம், விவசாயம், கைத்தொழில், கோழிப்பண்ணை, ஆடு மாட்டுப் பண்ணை என்பனவற்றில் ஈடுபடவேண்டும். விவசாயம் செய்வதை மரியாதைக் குறைவாக எண்ணுகின்றனர். இத் தீய எண்ணத்தை அகற்றி இவற்றில் அவர்கள் ஈடுபடவேண்டும்.

உழுதுண்டு வாழ்வாரே
 வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்.

என்ற திருக்குறளையும், "உழுதுண்டு வாழ்வாருக் கொப்பில்லை கண்டீர்" என்ற வாக்கினையும் நினைவு கூருங்கள், எத்தனையோ தரிசு நிலங்கள் உள்ளன. குடியேற்றத் திட்டங்கள் பல உண்டு. இவற்றினைப் பயன்படுத்தினால் தமிழன் ஓரளவு முன்னேற முடியும்.

இவை தவிர வேறு எத்தனையோ தொழில்கள் உள்ளன. அவரவர் தம் விருப்பப்படி எத்தொழிலிலும் ஈடுபடலாம். எத்தனையோ சிறு கைத்தொழில்கள் உள்ளன. நம் யாழ் அகத்தில் உள்ள பனை, தென்னையைக் கொண்டே பல்லாயிரம் மக்கள் பண்புடன் வாழலாம்.

கோழிப்பண்ணைகள் நடத்தலாம். திருநெல்வேலிப் பகுதியில் எத்தனையோ பேர் கோழிப்பண்ணை வைத்துப் பிழைக்கிறார்கள். இது நல்ல லாபகரமான தொழிலாகும். தவிர ஆடு மாடுகள் (பண்ணைகள்) வளர்க்கலாம். இதனால் பலருக்கு நல்ல வேலை கிடைக்கும். இவையனைத்தையும் இழிவென இகழ்பவர்கள், இங்கு வர்க்களுக்குக் கைகட்டி வாய் புதைத்து, மானம் இழந்து அரசாங்க உத்தியோகம் பார்ப்பதிலும் இது எவ்வளவோ மேலானது என்பதை உணர வேண்டும். "சிங்களம்படி; இன்றேல் வேலை இல்லை" என்ற மிரட்டல்களுக்கு அஞ்சாமல், தன் மானத்தோடு வீர உணர்வோடு சிறப்பாகத் தமிழன் வாழலாம்.

மேற் கூறிய சில வழிகளால், ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என நம்பலாம். இதனை அனைவரும் உணர்ந்து மேற்கொள்வாராயின் நாடு செழிக்கும், பொருள் வளம் பெருகும்.

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப் பத்திரம்**

இல. 8

பெயர் ..............................

பாடசாலை ..............................

விலாசம் ..............................

..............................

.................... ....................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## எங்கள் கோரிக்கைகள்

(எஸ். அப்துல் கபூர், கொழும்பு.)

அடிக்கிற கைதான் அணைக்கும் என்பார்கள். என்னவோ எங்களை இருநூறோ, முந்நூறோ என்று பணத்தைக் கொடுத்து வாங்கி விட்டு, எங்களுக்குக் கொடுக்கும் தொல்லை கொஞ்சமா? உங்கள் மூக்குக்குள் கயிற்றை விட்டுக் கட்டி மூச்சு விடாதபடி செய்தால், அதை நீங்கள் பொறுத்துக் கொண்டிருப்பீர்களா? ஆனால் எங்கள் மூச்சு விடும் துவாரத்திற்குக் கயிற்றை விட்டுக் கட்டி எங்களுக்கும் ரொம்ப சிரமம் கொடுக்கிறீர்கள்! வண்டியில் தேவைக்கு மேல் சாமான்கள் ஏற்றி, எங்கள் கழுத்தும் தாங்கிக் கொள்ளாமல் காயமும் ஏற்படும் நிலைமையை நீங்கள் உண்டு பண்ணுகிறீர்கள்.

இவர்கள் பெயரை அவரவர்கள் நெற்றியில் எழுதி ஒட்டுக் கொள்ளாமல், இரும்புக் கம்பியை நன்றாகச் சூடாக்கி, தங்களது பெயரை எங்கள் மேல் எழுத இவர்களுக்கு இந்த வழி ஒன்றுதான் கிடைத்ததா?

நீங்கள் எல்லாம் குறிப்பிட்ட காலத்துக்குள் ஆபீஸ் அலுவல்களைச் செய்து விட்டு அப்புறம் உங்களால் அலுவல்களைப் பார்க்க முடியாது என்று கூறிக் கொண்டு, வயது அதிகம் ஆகிவிட்டது, உடல் தளர்ச்சி அடைந்து விட்டது என்று ஆபீசுக்கு எழுதிப்போட்டதும், மாதத்துக்கு ஒருமுறை உதவிப் பணம் (பென்சன்) தேடி வருகிறது இப்படிப்பல வழியிலும் உல்லாசம் அனுபவிக்கும் நீங்கள் எங்கள் நிலைமையைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்களது காலையோ, கண்ணையோ இழந்து விட்டால், அல்லது வயது முதிர்ந்து விட்ட எங்களிடம் இனி வேலை வாங்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு, மாமிசக் கடைக்காரருக்கு நல்ல விலைக்கு விற்று விடுகிறீர்கள்! ஆனால் நீங்கள் மனம் வைத்தால் "இவ்வளவு [illegible] யாது, ஆகவே இந்த நாம் தான் காப்பாற்ற வேண்டும்" என்று பச்சாத்தாபப் பட்டு பரிவு காட்டலாம். ஆனால், அப்படிப் பரிவு காட்டுகிறவர்கள் நூற்றில் ஒருவர் கிடைப்பது மிக அரிது.

அது போகட்டும். எங்கள் முன்னோர்களது காலம்தான் அப்படி யென்றால், எங்கள் காலத்திலும், அதாவது இந்த இருபதாம் நூற்றாண்டிலும் எங்கள் உயிர் போக வேலை வாங்குகிறீர்களே! இது நியாயமா? எப்படிப்பட்ட வேலைகளையும் செய்து முடிக்கக் கூடிய யந்திரங்களை எல்லாம் கண்டு பிடித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட யந்திரங்கள் கண்டு பிடித்தும் எங்களை நீங்கள் விடுவதாகத் தெரியவில்லை. தங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று என்னென்ன போராட்டம், எப்படிப் பட்ட தியாகங்களை யெல்லாம் மக்கள் செய்து வருகிறார்கள் என்பதைப் பத்திரிகை மூலம் படித்திருப்பீர்கள்.

ஏன்? உங்கள் நாட்டுக்குச் சுதந்தரம் கிடைக்க வில்லை யென்றால் சும்மா விடுவீர்களா? ஆகவே இவ்வளவு நாள் உங்களுக்கெல்லாம் அடங்கி, ஒடுங்கி, உழைத்து, உருக்குலைந்து போன எங்கள் முன்னோர்களைப் போல் நாங்களும் இப்படியான தொல்லைகளை அனுபவிக்கத் தயாராக இல்லை. உலகம் முழுவதும் இருக்கும் எங்கள் இனத்தவர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. எங்கள் கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை ஆலோசித்து நாங்கள் சுதந்திரமாக வாழ வழி செய்ய வேண்டும்.

## தாயின் மானம் காத்திடுவாய்

—சிந்தனைச் செல்வி—

தாயின் மானம் காத் திடுவாய்—இனிய
 தமிழை சுவைத் திடுவாய்
அன்னை யிடம் அன்பு செலுத்திடுவாய்—அவளை
 அவ மதிப்போரை எதிர்த்திடுவாய்

உண்மை நிலையை உணர்த்திடுவாய்—தமிழின்
 உயர்ச்சிக் காக உழைத்திடுவாய்
உத்தமர் "தந்தை"யைப் பின் தொடர்ந்தே—நம்
 உரிமை காக்க விரைந்திடுவாய்

காவலில் உன்னை வைத்திடினும் தமிழ்
 காத்திட என்றும் முழங்கிடுவாய்
எட்டி உதைத்திடும் எதிரிகளை—நீ
 எதிர்த்தே வெற்றி பெற்றிடுவாய்

அன்னையின் கண்ணீர் துடைத்திடுவாய்—அவளை
 அரியணை மீது அமர்த்திடுவாய்
பண்பு நிறைந்த செந்தமிழை—என்றும்
 போற்றிப் பேணி வளர்த்திடுவாய்

## அருமைத் தம்பிக்கு..

('நாவலூர்க் கேசரி')

அருமைத் தம்பி!

அதோ உதய சூரியன் எழுகின்றான். எங்கும் புள்ளினங்கள் கூவி அவனை வரவேற்கின்றன. மலர்கள் தேனைச் சொரிகின்றன. வண்டுகள் பறக்கின்றன. எவ்வளவு ஆனந்தம் அவைகளுக்குப் பார்த்தாயா?

சூரியன் எழுந்து விட்டான். ஆனால் வாழ்க்கையென்னும் அரும்பிலே நின்று வாழத்துடிக்கும் நீ, வாழ முதல், வாழ்க்கைக் குட்பட்டவர்களைச் சிந்தித்துப் பார்த்தாயா? இல்லை சிந்தித்துச் செயலாற்றுவதற்கு வளமான திட்டங்கள் போட்டாயா?

உனது உள்ளத்திலே கொழுந்து விட்டெரியும் இன்பக் கனவுகளை நானறிவேன். இன்ப நினைவுகள் எல்லாருக்கும் உண்டுதான். ஆனால் நீ மட்டும் இன்பத்தை அனுபவித்தால் போதுமா? எண்ணிப்பார் தம்பி!

வாழ வழியற்று சாதியென்னும் அரக்கனின் கைகளிலே சிக்குண்டு சஞ்சலப்பட்டு கண்ணீர் சொரியும் உனது உதிரத்திலே உதித்த எத்தனையோ உன் ஏங்களை எண்ணிப் பார்த்தாயா? உலக இருளை விலக்கச் சூரியன் எழுந்து விட்டானே என்று சுந்தரப் புன்னகை வீசாதே! உனது உள்ளத்திலேயும் சூரியன் எழ வேண்டும். அந்த ஒளியிலே உனது வருங்காலச் சமுதாயம் வாழவேண்டும்.

நாட்டிலே, பஞ்சம், கொலை களவு, கற்பழிப்பு என்ற பழைய வார்த்தைகளைத் தான் கேட்கின்றாய். இதற்கு ஒரு முடிவுதான் கண்டாயா? இல்லை காணவேயில்லை. சமு



சாரணர் படையில் தனது வயதுப் பிரிவில் முதல் ஸ்தானம் பெற்ற கொழும்பு 35-வது பகுதித் தலைவர் பி. சாந்தி குமார். இவருடைய வயது 14. இவர் கிறீன்லண்ட்ஸ் கல்லூரி சாரணர் படையைச் சேர்ந்தவர்.

தாயத்தின் மத்தியிலே மதிப்பதற, மொழியின் உரிமை கெட்டு சொந்த வீடு இல்லாமல் திண்டாடுகிறாயே! தன்மானத் தமிழ்க் குடியிலே பிறந்த நீ, இதையெல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டா இருக்கின்றாய்?

புரட்சி, புரட்சி என்ற புளித்துப்போன வார்த்தைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிடு. உணர்ச்சி யூட்டும் சொற்களை உரக்கப் பேசுவதினால் உணர்ச்சிதான் கூடுமே யொழிய வேறுபயன் என்ன? எனவே செய்கை மூலம் நிலை நாட்டுவதே சிறப்பு என்ற புது வார்த்தைக்கு மதிப்புக் கொடு. இல்லை. உடனே அதைக் கடைப்பிடி.

அதோ! ஒருவன் மேடையேறி நான் கீழ்ச்சாதிப் பெண்ணைத் திருமணம் செய்கிறேன் என்று மார்தட்டிக் கூறிவிட்டு ஒளித்துக் கொள்கிறான். கீழ்ச்சாதிப் பெண் என்றால், என்ன இலட்சணங்களுடன இருக்க வேண்டும்? சொல் தம்பி! பெண்களின் கற்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று பெருமை பேசி விட்டு அதே பெண்களின் கற்பைச் சூறையாடும் பேயர்களின் கூட்டத்தைப் பற்றி அறிவாய். அவர்களைக் காலால் மிதித்துத் துவைத்து விடு தம்பி.

இறுதியாக ஒன்று கூறுகிறேன். உனது இளம் உள்ளத்திலே உதய சூரியன் மின்ன வேண்டும். அந்தச் சூரியன் எழுந்து நாலா பக்கங்களுக்கும் நல்லொளி பரவவேண்டும், நன்மை மற்று இயாகியாக நீ மிளிரவேண்டும். இவைகளே தான் உன்னிடம் நான் பலன்களாக இருக்க வேண்டும்.

வணக்கம்,

இங்ஙனம்,

அன்புள்ள உன் அண்ணா

நாவலூர்க் கேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கந்தசாமி கோவிலில் கதிர்காம உற்சவம்

கடந்த சில ஆண்டுகளா கக் கதிர்காம விழாக் காலத் தில் கந்தசுவாமிப் பெருமா னது உற்சவகால விரத நிய மங்களை நல்லூர் ஸ்ரீ கந்த சுவாமி கோவிலில் அநுஷ் டித்து அன்பர்கள் பேறு பெற்றனர். அவ்விதமா கவே, இவ்வருடமும் முருக னடியார்கள் அந்நாட்களில் கதிர்காம விழாவை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடாத்துவதற்கு ஏற்ற ஏற் பாடுகள் செய்துள்ளனர்.

நிகழும் சுபகிருது-வருஷம் ஆனி மாதம் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை (3-7-62) முதல் ஆடிமாதம் 4-ம் திகதி வியாழக் கிழமை (19-7-62) வரையுள்ள 17 நாட்களுக் கும் மேற்படி விழா நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நிகழ்ச்சி நிரலின்படி நடை பெறும்.

நிகழ்ச்சி நிரல் பின் வரு மாறு: ஆனி மாதம் 19-ம் திகதி (3-7-62) செவ்வாய் மாலை 3 மணிக்கு—விநாய கப் பெருமானுக்கு விசேட ஆராதனை—அபிசேக ஆராத னையுடன் உற்சவத்தின் ஆரம்பம். மாலை 4 மணிக்கு —கதிர்காமப் பெருமானுக்கு விசேட அபிசேகமும் சண் முக அருச்சனையும். இரவு 8 மணிக்கு— "ஏறுமயி லேறி விளையாடு முகம் ஒன்றே" என்ற திருப்புகழ் பாடலின் அம்சங்களாகும்—விரிவுரை, இரவு 8 மணிக்கு—முருகபக் தர் முருகநாம கோஷத்து டன் வீதி வலம் வருதல். இரவு 9-30 மணிக்கு— விசேட மண்டகப்படியும் ஆராதனையும்.

19-7-62 வியாழக்கிழமை காலை 8 மணி முதல்—கலிய சங்காபிஷேகம். 12-30 மணிக்கு சண்முக தீர்த்த மண்டபத்தில் முருகநாம சங்கீர்த்தனத்துடன் மகேஸ் வர பூஜை (அன்னதானம்) நடாத்தப்படும். அன்று மாலை 2 மணியளவில் முருக பக்தர்கள் வீரமாகாளி அம் மன் கோவிலிலிருந்து பாற் காவடியும் ஆனந்தக் காவடி யும் எடுத்துக் கொண்டு முரு கன் சந்நிதிக்கு வருவார்கள்.

20-7-62 வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு—வைரவ சாந்தி.

---

### அட்டர்னி ஜெனரல் மீது அரசாங்க எழுது வினைஞர் வழக்குத்தாக்கல்

அரசாங்க எழுது வினை ஞர் சங்கம் இவ் மாதம் 9ந் திகதியன்று அட் டர்னி—ஜெனரல் மீது கொழும்பு டிஸ்திரிக் கோர்ட் டில் வழக்கொன்றைத் தாக் கல் செய்துள்ளது.

அதில், தனது அங்கத்தவர் களைச் சிங்களம் படிக்க அர சாங்கம் கட்டாயப்படுத்து வது நீதிக்குப் புறம்பானது என்றும், தமிழ் பேசும் அங்கத்தினர்கள் குறிக்கப்பட்ட கால அள விற்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டு மென்ற நிபந்தனை நியாய மற்றதென்றும் சங்கம் அர சாங்கத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளது.

சிங்களம் படிக்க வேண் டும், இல்லையேல் வருடாந் தச் சம்பள உயர்வுதர முடி யாதென அரசாங்கம் தனிச் சிங்களச் சட்டத்தின் கீழ், அதன் 33 வது பிரிவின் படி தான் வற்புறுத்தியுள்ளது. தனிச்சிங்களச் சட்டமே சட்ட விரோதமான தொன் றாகும், ஆகவே அதன் கீழ் அனுப்பப்பட்ட உத்தரவும் சட்ட விரோதமானதே என்று எழுது வினைஞர் சங் கம் தனது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் இவ் வழக்கை புரொக்டர் ஹரி ஸியன் வாலன்டியன் பெரேரா தாக்கல் செய்துள்ளார்.

# கழகச் செய்திகள்

## ஒன்றுபட்டால் துன்பம் நீங்கும்
### அ. இ. அ. சங்க தீர்மானம்

"நாளுக்கு நாள் நமது சமூகத்தினருக்கு ஏற்பட்டு வரும் இன்னல் களைப் பற்றி அறிந்து துக்கப்படாதோர் இருக்க மாட்டார்கள். இந்த நாட்டுக்கு நாம் ஆற்றும் பணி மகத்தானது. எமது பணியை ஏற்றுக்கொள்ளும் மக்கள் எமக்கு எண்ணற்ற துன் பங்களை விளைவித்து வருகின்றனர். இந்த இன்னல்களை நீக்க வேண்டுமானால் அருந்ததிய மக்கள் அனைவரும் ஒரே ஸ்தாபன ரீதியில் ஒன்றுபட்டு நமது துன்பங்களைக் களைய முன்வர வேண் டும்" இவ்வாறு அகில இலங்கை அருந்ததியர் சங்க மருதானை வட்டாரக் கிளைக் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டத்துக்கு கிளைச் சங்கத் தலைவர் திரு. மா. சே. அருள் தலைமை தாங்கி னார். அவர் பேசுகையில்:—

மத்தியசங்கப் பிரதிநிதி கிளைச்சங்க வளர்ச்சி பற் றியும் ஒழுங்கு முறை பற்றியும் விரிவாக எடுத்து ரைத்தார். அதன் பின் கீழ்க் காணுபவர்கள் நடப்பு வருட நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்!

தலைவர்: திரு. க. மு. காளை. செயலாளர்: திரு. ஆர். பி. வேலங்கம், பொரு ளாளர்: திரு. கோ. சண்முக வேல் செயற்குழு உறுப்பி னர்கள். திருவாளர்கள், பெ. அருணாசலம், என். அங்கா, க. முனியாண்டி, கே. ஆண்டி, அ. கோவிந்தன், எம். முனியாண்டி, தொண் டர் குழு தலைவர்: திரு. வி. சுப்பிரமணியம், திரு. க. முனியாண்டி. மத்திய சங் கப் பிரதிநிதிகள்: திரு மா. சே. அருள், திரு . எல். கரிகாலன்.

கொழும்பின் வட்டார ரீதியாகவும் வெளியூர்களில் நகர அடிப்படையிலும் இளைஞர்கள் முன் வந்து அ. இ. அ. சங்கக் கிளைகள் அமைத்து சமூக முன்னேற் வம், தொழில் முறையால் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்கவும், இழிவை நீக்கவும் சமூக இளைஞர்கள் முன் வருமாறு இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது என் னும் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

---

### குழந்தை இலக்கிய எழுத்தாளர் சங்கம்

"அன்று குழந்தைகளுக் காக எழுதி வந்த பலர் இன்று எழுதுவதைக் காணோம். ஒரு சிலர் மட் டும் அவ்வப்போது தலை யைக் காட்டுகின்றனர். இதற்குக் காரணம் அவர்க ளுக்கு ஊக்கமும் உற்சாக மும் ஊட்டி தூண்டுகோலாக அமையக் கூடிய ஒரு ஸ்தா பனமும் இல்லாமையே யா கும். மேலும், அவர்களின் சிருஷ்டிகளில் தொகுப்புக் களையும் வெளிக் கொணர வேண்டும். இதற்கெல்லாம் பெருந்துணையாக இச்சங்கம் அமையும் என்பதை நான் கூறத் தேவையில்லை."

இவ்வாறு கடந்த சனிக் கிழமை கொழும்பு விவேகா னந்த வித்தியாலயத்தில் ஆரம்பமான குழந்தை இலக் கிய எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது திரு. அரசன் கலையழகன் குறிப்பிட்டார். கூட்டத் திற்கு திரு. சி. சண்முகம் தலைமை தாங்கினார்.

நடப்பு வருட உத்தியோ கஸ்தர்களாக கீழ்க் கண் டோர் தெரிவு செய்யப்பட் டனர்:

தலைவர் திரு. க. தியாக ராசா, துணைத் தலைவர்கள் திருவாளர்கள், [illegible] கம், எம். எம். [illegible], அர சன் கலையழகன் இணைச்

செயலாளர்கள்: திருவாளர் கள் நா. மு. குமாரசிங்கம், மூத்துராசன், பொருளாளர்: திரு. கு. இராமச்சந்திரன்.

செயற்குழுவினர்: திருவா ளர்கள் அந்தனி ராசையா, அந்தனி ஜீவா, ம. அருளம் பலம், டேவிட் ராசையா, மா. மு. கார்த்திகேயன், செ. லோகப்பன், ரொஜுல்ட்.

---

### மாதகல் சனசமூக நிலையம் ஆண்டு நிறைவு விழா

மாதகல் சென் தோமாஸ் சனசமூக நிலையத்தின் ஒன்ப தாவது ஆண்டு நிறைவு விழாவில் தெரியப்பட்ட புதிய நிர்வாகிகள்:— தலை வர்: திரு. ச. பா. யோசேப், உப தலைவர்: திரு. தே. செபஸ்தியாம்பிள்ளை, காரிய தரிசி: திரு. ஆ. அன்ரொனி பேர்னன்டோ, உப காரிய தரிசி: திரு. நீ. பத்திநாதர், தனாதிகாரி: திரு. நீ. ஜோச் மாயநாதன், நிலையப் பாது காவலர்: திரு. கி. ம. நீற் ரர், விளையாட்டுத் தலைவர்: திரு. அ லூயிஸ், நிர்வாக சபை அங்கத்தினர்: திரு. க. அருளானந்தம், திரு. அ. சந்தியோகு, திரு. சி. ஞானப் பிரகாசம், திரு. கு. செல் வக்கண்டு.

---

### ஸ்ரீ. சாரதா மாதர் சங்கக் கூட்டம்

தம்பலகமம் வடக்கில் உள்ள ஸ்ரீ சாரதா மாதர் கழகக் கூட்டம் தம்பலகமப் பிரிவுக் காரியாதிகாரி திரு. கோபாலரெத்தினம தலை மையில் நடைபெற்றது. சங் கத்தின் கௌரவச் செயலா ளர் திருமதி ஞானசெட்டிகுமிப் பிள்ளை யாகிருந்து சென்ற கூட்ட அறிக்கையை வாசித் தார். அதைச் சபை ஏகமன தாக அங்கீகரித்தது. கழகம் நடத்திவரும் பாலர் வகுப்பை காரியாதிகாரி திரு. கோபால ரெத்தினம் தனது தலைமை உரையில் பாராட் டினார்.

அடுத்தபடியாக சங்கத் தின் சார்பில் நெசவு நிலை யம் ஒன்றை நிறுவ அரசாங் கத்தின் உதவியைப் பெற் றுத் தருமாறு கழக நிர்வா கிகள் காரியாதிகாரியிடம் கூறினர். நெசவு நிலையம் நிறுவக் கூடிய பொது இடத் தைத் தேர்ந்தெடுத்துத் தமக்கு அறிவிக்குமாறும் அதற்குரிய முயற்சிகளைத் தாம் மேற்கொள்வதாகவும் காரியாதிகாரி உறுதி மொழி கூறினார்.

---

### நாவலர் விளையாட்டுக் கழகம்

சரவணை நாவலர் விளை யாட்டுக் கழக வருடாந்தக் கிளை நிர்வாகிகள் தேர்வு ஆசிரியர் க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க் கண்டவர்கள் நிர் வாகிகளாகத் தெரிந்தெடுக் கப்பட்டனர்:

தலைவர்: திரு. க. சொக்க லிங்கம், உப தலைவர்: திரு.

ம. தருமராசா, காரியதரிசி: திரு. சு சோமசுந்தரம், உப காரியதரிசி: திரு. சே. விநா யகமூர்த்தி, தனாதிகாரி: திரு. க. சிவயோகநாதன், நிர்வாக சபை அங்கத்தவர்: திருவாளர்கள் சு பொன் னுத்துரை, ம. கந்தசாமி.

---

### நாடகத் துவக்கவிழா

முன்னணி கலை மன்றத் தாரின் "வசந்த பைரவி" என்ற நாடகத்தின் ஆரம்ப விழாவினைக் கடந்த 17—6—62-ல் வெயாட்ஸ் பிராட்வேயில் உள்ள நாரா யணகுரு நினைவு மண்டபத் தில், பிரபல சிங்கள சினி மாப் படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான, திரு. ரொபின் தம்பு அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து துவக்கி வைத்தார்கள்.

விழாவிற்கு வந்திருந்த பல கலை மன்றங்களின் பிர திநிதிகளை, தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர் திரு. பி. எ. மாறன் வரவேற் றுப் பேசினார். கூட்டத்திற்கு திரு. ஜோன் சாமிதாசன் தலைமை தாங்கினார்.

---

### காரைநிவு விவேகானந்த சனசமூக நிலையம்

காரைநிவு விவேகானந்தா சனசமூக நிலையத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் திரு. க. சாமித்தம்பி அவர்க ளின் தலைமையில் அண்மை யில் நடைபெற்றது. திரு. கே. கே. ஆறுமுகம் அவர் கள் பேசுகையில், காரை நிவு கிராமச் சங்கத்துக்குச் சொந்தமான முடிக்குரிய பூமியில் அத்துமீறிக் குடி யேறி இருப்பவர்களின் மீது கிராமச் சங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகட்கு பொது மக்கள் அனைவரும் தங்கள் பூரண ஒத்துழைப் பைக் கொடுக்க வேண்டும். எமது பூமியில் ஒரு அங்கு லத்தைத்தானும் பிறருக்கு விட்டுக் கொடுப்போமானால் எதிர் காலத்தில் நாம் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிவரும். இது விடய மாக நிந்தவூர் தொகுதிப் பிரதிநிதிகளும் பல முறைக ளில் சமரச மகாநாடுகளை நடத்தியும், அவர்களால்

கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக நடந்து கொள்கின் றனர். ஆகவே நமது கிரா மச் சங்கத் தலைவருடன் அனைவரும் ஒத்துழைத்து மிக விரைவில் இதற்கோர் முடிவு கண்டாக வேண்டும்." என்று கூறினார் திரு. ஆ. இராசதுரை, திரு. மு. கண பதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## புதிய விதிகளும் போஸ்ட் மாஸ்டர்களும்

அண்மையில் புதிய டவுன் ஹாலில் நடை பெற்ற அகில இலங்கை போஸ்ட் மாஸ்டர்கள் யூனி யனின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு ஏறத்தாழ ஆயிரம் அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர்.

சங்கத்தின் தலைவர், திரு. கே. இராமச்சந்திரன் பின் வரும் தீர்மானத்தைப் பிரே ரித்தார். "பழைய அங்கத்த வர்களின் சேவை, சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு இவை பற்றிய நிபந்தனைகள் சர்வாதிகார முறையில் மாற்றியமைக்கப் பட்டதை யிட்டு அகில இலங்கை போஸ்மாஸ்டர்கள் யூனியன் தனது வருத்தத்தைத் தெரி விப்பதுடன் இந் நிபந்தனை களின் மாற்றத்தால்,

(1) சேவையில் சேர்ந்த பழைய அங்கத்தவரின் கஷ்டங்களையும், இன்னல் களையும் அனுதாபத்துடன் கவனிக்கும் படியும், 1-1-61 க்கு முன்னிருந்த உரிமைகளையும், நிபந்தனை களையும் திரும்பவும் கொண்டுவர வேண்டு மெனவும் அரசாங்கத் தைக் கேட்டுக் கொள் கிறது.

(2) பழைய அங்கத்த வரின் உரிமைகளைப் பாது காக்கத் தேவையான சட்ட ரீதியான நட வடிக்கை மேற்கொள்ள நிர்வாக சபைக்குச் சகல அதிகாரமும் வழங்கு கிறது.

(3) புதிய நிபந்தனைகளி னால், அவற்றுடன் சம்பந்த மில்லாத பழைய அங்கத் தவர்கள் பாதிக்கப்படு வதையிட்டுத் தீர்வுகாண எல்லாப் பொதுச் சேவைத் தொழிற் சங்கங்களையும் அழைக்கிறது.

தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ஜேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ஜேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரி யில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப் படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக் கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

### சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**சென்ட்ரல்** [மருதானை]

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

அசோக் குமார், நந்தா, நிருபாராய், ஓம்பிரகாஷ், லலிதா பவர்

மற்றும் பலர் நடித்த



# ஆன்ச்சல்

வாழ்க்கைப் போராட்டச் சுழற்சியில் அகப்பட்டுத் தத்தளிக்கும் குடும்பமொன்றின் உணர்ச்சி நிறைந்த கதை!

ஒவ்வொரு குடும்பத்தினரும் பார்க்கவேண்டிய படம்.

சங்கீதம்: சி. ராமச்சந்திரா

எதிர்பாருங்கள் விரைவில்! சிலோன் என்டர்ரெயின்மென்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில்! சிவாஜி கணேசன்—ஜமுனா நடிக்கும்

**நிச்சய தாம்பூலம்**

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (சும்பனித்தெரு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — வெம்பிளி (கண்டி)

விஜயா (மட்டக்களப்பு) — ராஜ் (நீர்கொழும்பு) — ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) — மொடர்ன் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)

தினசரி மாலை 6-00, இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-00, பி. ப. 2-00



நிலவைக் கண்டு மலருமாம் குமுதம்! எனது பெயரும் அதுதான். ஆனால் மலரைப்போல நிலவைக் காணும் பாக்கியம் எனக்கில்லை, அதனால் கணவருடைய அன்பையும் என்னால் பெறமுடியவில்லை விழிகளின் ஒளியைத்தான் இழந்தாலும், வாழ்வின் ஒளியையுமா இழந்துவிட வேண்டும்? இப்படிப்பட்டது எனது வாழ்க்கை. நீங்களே பதில் கூறுங்கள்.

* எஸ். எஸ். ராஜேந்திரன்
* எம். ஆர். ராதா
* எஸ். ராமராவ்
* எஸ். வி. ரங்கராவ்
* சி. எஸ். பாண்டியன்
* ஆர். விஜயகுமாரி
* சௌகார் ஜானகி
* பி. எஸ். சரோஜா
* சி. எஸ். சுந்தரிபாய்

மற்றும் பலர் நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ்

# குமுதம்

பின்னணி:- டி. எம். சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஏ. எல். ராகவன், பி. சுசீலா, ஜமுனாராணி, ராஜேஸ்வரி.

இசை: கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்: ஏ. சுப்புராவ்

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) அசோகமாலா (நீர்கொழும்பு)

வின்சர் (யாழ்ப்பாணம்) கிங்ஸ் (பதுளை) குயீன்ஸ் (காலி) இம்பீரியல் (மட்டக்களப்பு)

ஷோலக்ஸ் (கண்டி) நெல்சன் (திருகோணமலை)

பிரேம் நஸீர்—எம். என். ராஜம்—வி. ஆர். ராஜகோபால் ஸ்ரீரஞ்சனி—தாம்பரம் லலிதா முதலியோர் நடித்த



ஏ. வி. எம். அளிக்கும்

# திலகம்

(ஜெமினியின் நடனத்தை கலரில் கண்டு ஆனந்தியுங்கள்)

---

## ஆடி 6-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) — தாஜ்மஹால் (மாத்தளை) — றீகல் (நுவரெலியா)

றோயல் (பண்டாரவளை) — குமரன் (மன்னார்)

கணேசன் (திருகோணமலை)

இம்பீரியல் (குருனாகல்)

நடராஜா (நீர்கொழும்பு)


பிரேம் நசீர்

எச். என். ராஜம்

கே. ஏ. தங்கவேலு

விஜயலட்சுமி

மற்றும் பலர் நடித்த



பிரண்ட் பிக்சர்ஸ் அளிக்கும்

# தங்கம் மனசு தங்கம்

டைரக்ஷன் R.M. கிருஷ்ணசாமி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org